
கல்கி
KALKI பிப்ரவரி 19, 1956
4 அணா

ஸ்ரீ
கல்கி
மலர் 15 இதழ் 19
மன்மத ௵ மாசி 7

பொருளடக்கம்

பிப்ரவரி 19, 1956

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 15 } தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற { மன்மத ௵
இதழ் 29 } தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் { மாசி ௴ 7

ஏன் இந்த பயம்?

தென்னாடும் அதன் முன்னேற்றமும், துண்டுபட்ட சக்கரத்தின் மரக் கட்டைகளைப் போல, இயங்கும் சக்தியில்லாமல் கிடக்கின்றன. குயவனுருடைய சக்கரத்தை உடைத்து ஆரக்கால் ஒரு பக்கம், குடம் ஒரு பக்கம், வட்டைத் துண்டுகள் ஒரு பக்கம், இப்படி அவருடைய குமாரர்கள் துண்டு போட்டுப் பாகம் பிரித்தால் எந்தவிதமாக இருக்கும்? அந்தக் கதையாக இருக்கிறது நமது தெற்கு பாரதத்தின் நிலைமை!

தெற்குப் பேரிராஜ்யம் அமைந்து விட்டால் பிரதேச மொழியின் வளர்ச்சி என்ன ஆகுமோ என்ற அச்சம் நம்மவர் சிலரைக் குழப்பிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கையில் சத்தியமும் நியாயமும் இருந்தால் யாரைக் கண்டு யார் பயப்பட வேண்டும்? இல்லாவிடில் வேறு என்ன செய்து என்ன பயன்?

பயத்தையும் பீதியையும் ஒழித்து விட்டுத் தென் மக்கள் அன்புடன் ஒன்று சேர்ந்து பாரதத் தென்பகுதியை நிமிர்ந்து நிற்கச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் பலவீனத்திலும் வறுமையிலும் துவேஷத்திலுமே நம்மைக் கொண்டு தள்ளி விடும். உலக அரங்கில், பாரதம் என்றால் வடநாடு என்றுதான் ஆகிப் போகும். சந்தேகமில்லை.

தென்னாட்டின் பண்பாடும், நமது தென்னாட்டு மொழிகளும், எல்லாம் ஒரே கிழங்கிலிருந்து முளைத்து வளர்ந்த செடிகள். இதை மறந்துவிடக் கூடாது. தென் பேரிராஜ்யம் அமைந்தால் இந்த ஒரே இனத்து மொழிகளில் எந்த பாஷையும் எந்த இலக்கியமும் பாதிக்கப்படாது. பாதிக்கப்படும் என்று அஞ்சுவதற்கு என்ன காரணம் இருக்கிறது? அந்தந்தப் பிரதேசத்தில் அந்தந்தப் பிரதேச மொழிகளே நிர்வாக மொழியாக இருக்கும். இருந்தே தீரும். பிரதேச மொழிகள் அனைத்தும் அந்தந்தப் பிரதேசத்தின் நிர்வாக மொழிகளாக இருப்பதோடு, மக்கள் படிக்கும் இலக்கியமாகவும், கல்லூரிகளின் போதனை மொழியாகவும் இருக்கும். இந்த அடிப்படையை மறந்து விட்டு, நாட்டைத் துண்டு போட்டால்தான் மொழி வளர்ச்சி ஏற்படும் என்று எண்ணுவதும் பேசுவதும் பயத்தினால் உண்டான மயக்கம். அந்த பயத்துக்கு அவசியமே இல்லை.

. . . பொதுவாக, பாரத நாட்டில் ராஜ்யப் பிரிவினைகளையும், ராஜ்ய வரம்புகளையும் எப்படி அமைத்துக் கொண்டாலும், மக்களுக்குள்ளே உள்ள பரஸ்பரக் கொள்வினை கொடுப்பினைகளையும், வியாபாரத்தையும், போக்குவரத்தையும் இனிமேல் தடுத்துவிட முடியுமா? முடியாது. பாரத அரசியல் சட்டம் அதற்கு இடம் தராது. இயற்கையும் அதற்கு இடம் தராது. அரசியல் வேலிகளுக்குள் மக்களின் வளர்ச்சி அடங்கி நிற்குமா? இல்லை. பால் பொங்குவது போல் பொங்குகிற நம்முடைய சமுதாய வளர்ச்சியின் வேகத்தை மூடி அடைக்க முடியாது. வடக்கே பம்பாயிலும், கல்கத்தாவிலும், நாகபுரியிலும், டில்லியிலும் எத்தனை தமிழர்கள் இன்று வாழ்கிறார்கள்? கல்வியில் மட்டுமல்ல, சமூக அந்தஸ்திலும், செல்வாக்கிலும் நம்முடைய இந்தத் தமிழ்ச் சகோதரர்கள் எவ்வளவு உயர்ந்திருக்கிறார்கள்! இது எப்படிச் சாத்தியமாயிற்று? அத்தனை தூர தேசத்தில் நம்முடைய சகோதரர்கள் எப்படி முன்னேறினார்கள்? மற்றத் தென் மொழியாளர்களும் அங்கே இருந்துதானே வருகிறார்கள். அவர்களுடைய போட்டியினால் தமிழர்களின் முன்னேற்றம் குறைந்து விட்டதா? இல்லையே! கண்கூடாகக் கண்ட இந்த அனுபவ வெற்றிக்குப் பின்னும் பயம் என்னத்துக்கு? அன்னியப் பிரதேசத்தில் நடந்ததற்கு மேல் நம்முடைய ஊரில் என்ன அப்படி அதிகப் போட்டி நடந்து விடப் போகிறது?

இயற்கையில் நமக்குச் சாமர்த்தியமோ ஜாக்கிரதையோ போதாது என்று எண்ணுவது முற்றிலும் தவறு. தமிழ் மக்கள் எக்காலத்திலும் தங்கள் வீரத்திலாவது திறமையிலாவது நம்பிக்கையை இழந்ததில்லை. பிறரும் கண்டு புகழ்ந்திருக்கிறார்கள்.

போக்குவரத்து வசதிகள் குறைந்திருந்த பண்டைக் காலத்தில் சேரனும் சோழனும், பாண்டியனும் தத்தம் நாடுகளைப் பிரித்து ஆண்டு வந்தார்கள். ஆனால் பின்னர் இந்திய நாடு ஒன்றாக அடிமைப்பட்டு, ஒன்று பட்ட நாடாகவே சுதந்திரம் பெற்றது. இன்று போக்குவரவும் வியாபார வசதிகளும் அதிகரித்து, அளவு கட்ட இயலாத அளவுக்குப் பெருகி யிருக்கின்றன. இந்த நாளில் சேர சோழ பாண்டிய நாடுகள் ஒன்றாகத்தான் இருந்து தீரவேண்டும். பிரிந்தால் பலவீனமடைந்து முன்னேற்றமும் தடைபட்டுத் தாழ்ந்த நிலையே அடைவோம்.

தெலுங்கு நாடும் நம்மோடு ஒன்றாக இருந்திருக்கலாம். ஆனால் அது பிடிவாதமாகப் பிரிவினை செய்து கொண்டு ஓடிவிட்டது. என்றாலும் அது மற்றொரு திசையில் விசாலம் அடைந்து வருகிறது. அதைப் பற்றி நாம் துயரப்பட வேண்டியதில்லை. மற்றத் தெற்குப் பகுதிகளாவது ஒன்றுபட்டால் இப்பொழுது நமக்குப் போதும்.

சுதந்திரத்திற்காக நாம் போராடியபோது எத்தனை ஒற்றுமையும் பரஸ்பர நம்பிக்கையும் நமக்கு இருந்தன! பாரத தேசத்தின் பல பகுதிகளும் ஏகோபித்து, ஒன்றாக நின்று போராடியதால் அல்லவா சுதந்திரம் கிடைத்தது. அந்த சுதந்திரத்தில்தானே நாமும் பங்கு கொண்டு வாழ்கிறோம். பிரிவு மனப்பான்மை கொண்ட கட்சியாளர்களோடு சேர்ந்திருந்தால் சுதந்திரம் பெற்றிருப்போமா! அந்த பாரத ஒற்றுமை உணர்ச்சியை இப்பொழுது நாம் இழந்து விடலாமா! கூடாது. அதற்கு மீண்டும் வேகம் அளித்து அமிருதசரஸ் காங்கிரஸிலே பாரத சுதந்திரப் பற்றும் அரசியல் அனுபவமும் நிரம்பிய தலைவர்களும் அறிஞர்களும் செய்துள்ள தீர்மானத்தை நாம் மேற்கொண்டு நிறைவேற்றிக் காட்ட வேண்டும்.

உண்மையில் தமிழுக்கு ஆபத்து வந்துவிடவில்லை. கன்னடத்துக்கும் ஆபத்து வந்துவிடவில்லை. மலையாளத்துக்கும் ஒன்றும் சேதம் வந்துவிடவில்லை. இந்த மொழிகள் அனைத்தும் சமமான பிரதேச அந்தஸ்து பெற்று, ஒன்றுக்கொன்று துணை செய்துகொண்டு, நல்ல முறையில் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு வளரவே செய்யும். பக்கத்தில் நின்று போட்டி போட்டால் கருத்தும் எழுத்தும் திருந்தி வளரும்.

இலக்கிய வளர்ச்சிக்கு மக்களின் ஆதரவும், பண்பட்ட அறிஞர்களின் கருத்துச் செல்வமுமே முக்கியம். 'டெக்ஸ்ட் புக் கமிட்டி'யின் ஆதரவுகளினால் எந்த இலக்கியமும் வளர்ந்ததில்லை! தமிழைக் காதலிக்கும் அன்பர்கள் இது குறித்துப் பயப்படவேண்டிய அவசியமே கிடையாது. இன்று தமிழர்களுடைய மொழியார்வம் மேம்பட்டு விட்டது. புத்தம் புதிய அறிவுத் துறைகளுக்கான சொற்கள் — தமிழ் மரபோடு இணைந்த சொற்கள்—ஆக்கப்பட்டு வருகின்றன. கல்லூரிகளில் தமிழே எல்லாத் துறையிலும் போதனை மொழியாகவும், அதைப் போலவே அந்தந்தப் பிரதேசங்களில் அந்தந்த பாஷையே போதனை மொழியாகவும், அரியாசனம் ஏறுவதற்கு உரிய காலம் வந்துவிட்டது. தமிழில் வசனம், கவிதை, நாடகம் மூன்று துறையிலும் சிறந்த இலக்கிய ரத்தினங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி வருகின்றன.

அரசியல் முன்னேற்றத்துக்காகவும், சமூகத்தின் செல்வநிலை உயர்வதற்காகவும் தெற்கு ராஜ்யம் விசாலம் அடைவதினால் நன்மையே தவிர எள்ளளவும் சேதம் இல்லை. எப்பொழுதுமே சுயராஜ்யத்திற்கு எதிரிடையாக இருந்து வந்த பிற்போக்குக் கட்சிகளின் பேச்சுக்குச் செவி சாய்க்காமல், பயம் எனும் பேய்தனை அடித்து, மனமும் நாடும் விசாலம் அடைவதற்கு அனைவரும் ஒன்றுபட்டு வழிதேடுவோம்!

சுபிட்சப் பாதையில்


பாரத தேசம் வெகு வேகமாக முன்னேறி வருகிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் உருவாகும் போது தேசத்தில் உணவுப் பஞ்சம் இருந்தது. வெளி நாட்டிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து வந்தோம். இந்த ஐந்தாண்டில் நாம் உணவுப் பஞ்சத்தை வென்று விட்டோம். பண்டித நேருஜி சொன்னது போல், வடநாட்டில் வெள்ளத்தினால் சீரழிவு ஏற்பட்டும் தமிழ்நாட்டில் புயலினால் சீரழிவு ஏற்பட்டும் உணவு நிலை நமக்குக் கெட்டுப் போகவில்லை. போதிய தானியங்கள் இருக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் ரூ. 4800 கோடி செலவில் உருவாக இருக்கும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய அறிக்கையைப் படிக்கும் போது நமக்குப் பெருமிதமும் மலைப்பும் ஏற்படுகின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கன ரகத் தொழில்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளன. மூன்று எஃகு உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலைகள் திறவப் போகிறார்கள். தமிழ் நாட்டில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி எடுக்கவும், அதிலிருந்து மின்சார சக்தி எடுத்துப் பயன்படுத்தவும் திட்டமிட்டிருக்கிறார்கள். இத்துறையில் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 179 கோடி செலவிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டாவது திட்ட காலத்தில் 891 கோடி ரூபாய் செலவிடப் போகிறார்கள் என்றால் தொழில் துறைக்கு எவ்வளவு பிராதான்யம் கொடுத்திருக்கிறார்கள் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

கிராம முன்னேற்றத்துக்கும் கிராமக் கைத்தொழில்களுக்கும் இந்த இரண்டாவது திட்டத்தில் அடுத்தாற் போல் முக்கியம் அளித்திருக்கிறார்கள். விவசாயத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்குச் சுலபமாகப் பணம் கிடைக்கக் கூடிய வசதி செய்திருக்கிறார்கள். விவசாயிகள் விதைக்காகவும், எருவிடவும் தற்சமயம் அதிக

ராஜ்யப் பிரிவினை!



வட்டிக்குப் பணம் கடன் வாங்கிச் சொல்ல முடியாத கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். இந்த இரண்டாவது திட்டத்தில் கிராமத்துக்குக் கிராமம் பாங்கிகள் ஏற்படுத்தி விவசாயிகளுக்கு மிக மிக எளிய வட்டியில் கடன் கொடுத்து உதவத் திட்டம் வகுத்திருக்கிறார்கள்.

இப்படிப் பல துறைகளில் முன்னேற இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வழிவகுத்திருக்கிறது. இதை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டிய பொறுப்பு தேச மக்கள் அனைவருடையதுமாகும். அதிகாரிகள் முதற்கொண்டு சாதாரண ஆசாமி வரையிலும் ஒவ்வொருவருடைய கடமையுமாகும். சோம்பல், வஞ்சம் முதலிய தீக் குணங்களுக்கு இடமளித்து விட்டால் முன்னேற்றப் பாதையில் போவதற்குப் பதில் பின்னேற்றப் பாதையில் போக நேரிடும். நமது பிரதம மந்திரி இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் மிகுந்த சிரத்தை கொண்டிருக்கிறார். இத்திட்டம் திட்டமிட்டபடி நிறைவேறினால், மேற்கத்திய நாடுகள் நூற்றைம்பது ஆண்டுகளிலும், ருஷ்யா பலாத்கார முறையில் 37 ஆண்டுகளிலும் சாதித்த சாதனைகளை இங்கே காணலாம் என்ற நம்பிக்கை யூட்டியிருக்கிறார். அமிருதசரஸில் கூடிய காங்கிரஸ் மகாசபை இந்த ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற உறுதி பூண்டிருக்கிறது! பாரத தேசம் முன்னேற்றப் பாதையில் வேகமாகச் செல்லத் தீர்மானித்து விட்டது!

முத்தமிழ் வளர்த்த உத்தமர்

பொதிகை மலையின் அடிவாரத்தில் இருக்கும் குற்றாலப் புண்ணிய ஸ்தலத்தில் வாழ்ந்து, தமிழ் மொழியையும் தமிழ் நாட்டின் கலைகளையுமே உள்ளத்தின் எண்ணமாகவும் உயிரின் மூச்சாகவும் கொண்டு முத்தமிழ் வளர்த்தவர் ரசிகமணி டி. கே. சி.

ஆங்கிலத்தை நன்றாகக் கற்றார். அந்த மொழியின் வளைவு நெளிவுகளையும், துள்ளல்களையும், உல்லாசங்களையும் தம்முடைய சிந்தனையில் தேக்கினார். அதே சமயம் உள்ளத்திலே தமிழுக்குக் கோயில் கட்டினார். பிற நாட்டு அறிஞர்களின் தத்துவங்களையும், மேனாட்டு விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளையும் ஐயந்திரிபின்றிக் கற்றார். அவற்றிலே லயித்தினைத்தார். அதே சமயம் இதயத்திலே தமிழ் நாட்டுச் சித்தர்களின் ஞானத்தையும், தமிழ் நாட்டு அருட் கவிஞர்களின் பக்தியையும் பிரதிஷ்டை செய்தார். குறுகிய மனப்பான்மையை விட்டுத் தம்முடைய நோக்கத்தை விரிவுபடுத்தி விசாலத்தோடு விளங்கினார். அதே சமயம் அந்த விசாலமான இதயத்தின் ஜீவ பீடத்திலே தமிழ்த்!தெய்வம் கொலுவிருக்கது.

இதெல்லாம் இன்றையச் சூழ்நிலையில் நாம் எண்ணிப் பார்த்துக் கற்றுக் கொண்டு கடைப்பிடிக்க வேண்டிய அனுபவங்கள். அறிவு எங்கிருந்தாலும் துவேஷமின்றி அதை நாடிச் சென்று கற்போம். எதற்காக! அன்னிய அறிவுக்கே அடிமையாகி அன்னிய மயமாக ஆகிவிடுவதற்காக அல்ல. திரும்பி வந்து தமிழ் மண்ணிலே கால் பாவுவதற்காக!

டி. கே. ஸி.யின் நினைவுக்கு அஞ்சலி செய்யும் போது, அவருடைய வாழ்க்கையின் அனுபவங்களை மனத்திலே உட்கொள்ளுவோமாக!



டி.கே.சி. நினைவு

ராஜாஜி

அகில உலகப் பஞ்சாங்கத்தின்படி பெப்ருவரி 16ந் தேதி தமிழ் மக்களின் அன்பை அருவியாகப் பெற்று அதில் குளித்துத் திளைத்த நமது குற்றாலத்து முனிவர் டி. கே. சி. அவர்களின் மறைவு தினம். இறந்தவர்கள் பசியில் தவிப்பதாக வைத்துக்கொண்டு அன்னம் சமைத்துப் பிண்டம் வைப்பது நமக்கு முன்னோர்கள் தந்த புனித வழக்கம். தற்காலத்தில் நாம் அடைந்திருக்கும் படிப்பின் பயனாக இறந்தவர்களுக்குப் பசி ஏது, நாம் வைக்கும் அன்னம் அவர்களுக்குப் போய்ச் சேரவாவது என்று, அந்த வழக்கத்தைத் தள்ளியே விட்டோம். ஆனால் அன்புப் பசி என்பது ஒன்று உண்டல்லவா? மற்றவர்கள் தன்மை எப்படியிருந்தாலும், நம்முடைய டி.கே.சி. க்கு அவர் உயிருடன் இருந்தபொழுது இந்தப் பசி பெரும் பசியாக இருந்ததை நான் அறிவேன். எவ்வளவு உண்டாலும் அவருடைய அன்புப் பசி, தீர்ந்து தெவிட்டு அடையவில்லை. மறைந்த நாள் வரையில் இன்னும் வேண்டும் வேண்டும் என்றே ஆசைப்பட்டு மறைந்தார். ஆனபடியால் இந்த நினைவு வாரத்தில் நாம் அவரை எண்ணி நம்முடைய உள்ளத்து அன்பை அவருக்குப் பசிதீர நிவேதிப்போமாக. ஞானம், சீலம், செல்வம், இவையெல்லாவற்றையும்விட அன்பையே பெருஞ் செல்வமாக எண்ணியவர் டி.கே.சி.

கம்பரும் ராமாயணமும் அவருக்கு அன்பின் உருவங்கள். அவருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்ட உருவங்கள். வால்மீகி முனிவருக்கு முந்தியே ராமாயணம் மக்களின் சொல்லிலும் செவியிலும் பல்லாயிரம் ஆண்டுகள் உயிர்பெற்று உயிர் கொடுத்து வந்தது. வேத புருஷனை பகவான் ராமனாக அவதரித்த போது வேதம் ராமாயணமாகக் கூடவே அவதரித்தது என்பர் பெரியோர். மக்களின் சொல்லிலும் கேள்வியிலும் இருந்த அந்தப் புண்ணிய கதைக்கு நிலையான உருவம் தந்து வால்மீகி முனிவர் பாடினார். பிறகு அந்த ராமாயணம், துளஸீதாஸர் மொழியிலும் கம்பநாட்டாழ்வாரின் அமுத வாக்கிலும் மறுபடியும் நமக்கென்று அவதரித்தது. கம்பரும் மறைந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ் மக்களின் நன்மைக்காக நம்மிடையே டி. கே. சி. தோன்றி மக்களை ராமாயணம் படிக்கச் செய்தார். கம்பருடைய கவித் தேனைப் பருகச் செய்தார்.

டி. கே. சி.யைப் போல் கவிதை அழகைக் கண்டவர் வேறு யார்? பொய்யை வெறுப்பதிலும் மெய்யைக் காதலிப்பதிலும் டி. கே. சி. யிடம் நான் கண்ட ஆர்வத்தை வேறு யாரிடத்திலும் நான் கண்டதில்லை. நான் அறிந்தும் பழகியும் வந்தவர்களுக்குள் எல்லாம் காவிய ரஸம், பக்தி ரஸம், வாழ்க்கைத் தத்துவம், உண்மை அறிவு, அனைத்தும் பழையதும் புதியதும் முற்றிலும் அளவறிந்து உணர்ந்தவர் 1954ம் ஆண்டு பெப்ருவரி 16ந் தேதி மறைந்த பெரியார். அவருடைய நினைவைச் சிரத்தையுடன் பூஜிப்போமாக!

அட்டைப்பட விளக்கம்

ரவிசந்திரிகா


தமிழ்ப் புத்தாண்டான மன்மத வருஷத்தின் ஆரம்ப நாளில் தொடங்கிய 'ரவிசந்திரிகா' இந்த இதழுடன் முடிகிறது. மங்களமான கல்யாண விமரிசைகளோடு சொக்கிகுடி கோலாகலமாக விளங்கிய காட்சியை, இந்த இதழின் அட்டையிலே மூவர்ணங்களில் சித்திரிக்கிறார் நமது ஓவியர் 'மணியம்'.

என்ன சேதி!

மதுரைச் செல்வர்

பெப்ருவரி மீ 13உ அன்று தமிழ் நாட்டுச் செல்வர் மகான் மதுரை வைத்தியநாதய்யரின் நினைவு நாள். அவரது தியாகம், சேவை, அன்பு, தொண்டர்களுக்குச் செய்து வந்த உபகாரம், இவை யாரும், என்றும் மறக்கக் கூடியதல்ல. ஆயினும், மனித ஜன்மத்தின் இயற்கை மறைந்தவரை மறப்பதும் இருப்பவரைப் புகழ்வதும். புகழ்வதில் தவறு இல்லை. மறப்பது தவறாகும். மதுரையும் தமிழ் நாடும் திரு வைத்தியநாதய்யரின் தீரத்தையும், சீலத்தையும், சேவையையும் மறந்தால் அது சாபமேயாகும்.

பி. ஸி. ஜி



ராஜாஜி எவ்வளவு சொல்லியும் பி. ஸி. ஜியின் தீமையை இன்னும் காணாதவர்கள் தயவு செய்து குண்டக்கல் விஜயவாடா ரயில் பாதையில் தொனகொண்டா ரயில்வேச் சந்திப்பில் உத்தியோகஸ்தர்கள் விடுதியில் குடியிருக்கும் ஸ்ரீமதி வெப்—பீடர்ஸ் அம்மையாரைப் போய்க் கேட்கலாம். அவருடைய குழந்தை—நீலகிரிப் பள்ளிக்கூடத்தில் படிக்கப் போட்டிருந்தது—பி. ஸி. ஜி குத்தப்பட்டு, கண்களின் இமைகள் கவாதிவந்து அவதிப்படுவதைப் பற்றிக் கண்ணீர் விட்டு ராஜாஜிக்கு எழுதியிருக்கிறார். "எனக்கு எழுதி என்ன பயன்? நான் எச்சரிக்க வேண்டியதை யெல்லாம் எச்சரித்தேன். இன்னும் ஜனங்கள் தங்கள் குழந்தைகளைக் காப்பாற்றுவதைச் செய்யாமல் போனால் நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் சென்னை சர்க்காருக்கு எழுதியோ கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தோ நஷ்டஈடு பெறலாம்" என்று பதில் எழுதியிருக்கிறார்.

தமிழ் மந்திரியின் பேச்சு

தக்ஷிணப் பிரதேசத்தைப் பற்றி அம்ருதஸரஸ் காங்கிரஸில் நமது ராஜ்ய மந்திரி திரு சுப்பிரமணியம் பேசிய தெளிவான கருத்துக்களைப் பத்திரிகைகளில் படித்து நம்முடைய வாசகர்கள் மகிழ்ந்திருப்பார்கள். முதல் மந்திரி காமராஜ் அவர்கள் இதைப்பற்றிப் பேசாமல் இருந்ததைக் கண்டு மக்கள் குழப்பம் அடைய வேண்டியதில்லை. எதிர்ப்பட்சத்தில் வாதிப்பவர்களை, சமாளித்து இழுத்துக் கொண்டு போக வேண்டிய கடமை முதல் மந்திரியின் கடமையே யாகும். அதனுல்தான் விஷயத்தை மட்டும் ஒப்புக் கொண்டு வேறு எதுவும் பேசாமல் இருக்கிருர். மற்றப்படி இதற்கு அவர் விரோதம் என்று எண்ணக் கூடாது. விரோதமாக இருந்திருந்தால் தம்முடைய உதவி மந்திரியைப் பேச விட்டிருக்க மாட்டார்.

அகில இந்திய ஒற்றுமை

வடக்கே கங்கையிலிருந்து தெற்கே காவேரி தாமிரவருணி வரை ஒரு பொதுவான போக்குவரத்து, மின்சார உற்பத்தித் திட்டத்தை அளிக்கும் வகையில் எல்லா நதிகளையும் இணைக்க வேண்டும். இதன்மூலம் பொருளாதார வகையில் அகில இந்தியாவில் அசைக்க முடியாத ஒற்றுமையை ஏற்படுத்தி விடலாம். இந்த ஒரு திட்டத்தின் மூலம்தான் இந்தியா முழுவதையும் ஒரே நாடாக மாற்றி ஒற்றுமைப்படச் செய்ய முடியும் என்று டாக்டர் ஸி. பி. ராமசாமி ஐயர் புது தில்லியில் கூறி யிருக்கிருர்.

இதே கருத்தைக் கவியரசர் பாரதியார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே அற்புதமாக எடுத்து உரைத்திருக்கிருர். எல்லாருக்கும் விளங்கும்படி எளிய தமிழில்,

"வங்கத்தில் ஓடிவரும் நீரின்மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்!"

என்று பாடி யிருக்கிருர். கங்கையிலிருந்து காவேரிக்குக் கால்வாய் கட்ட வேண்டும் என்று காலஞ் சென்ற திரு எஸ். சீனிவாச ஐயங்கார் அவர்கள் 1939ம் ஆண்டிலேயே கனவு கண்டார். அவர்கள் கனவு கண்ட போது நாடு அடிமைப்பட்டுக் கிடந்தது! அவர்கள் கனவு பலிக்கவில்லை.

இப்பொழுது நாடு சுதந்திரம் பெற்று விட்டது. சுதந்திரம் பெற்ற நாட்டுக்குக் கூற வேண்டிய அருமையான யோசனையை டாக்டர் ஸி. பி. ராமசாமி ஐயர் கூறி யிருக்கிருர். தாம் கூறிய யோசனை காரியத்தில் நிறைவேறக் கூடியதே என்பதற்கு ரஷ்யாவில் உள்ள வால்கா - டான் கால்வாய் எல்லா நதிகளையும் இணைத்து நாட்டைப் பொன்கொழிக்கும் பூமியாகச் செய்துவரும் அற்புதத்தை எடுத்துக் காட்டி யிருக்கிருர்.

அமெரிக்காவில் பதினேழு மாகாணங்களில் மழைத்துளி என்பதே விழுவது கிடையாதாம். ஆனுலும் பெரிய பெரிய நீர்த் தேக்கங்களைக் கட்டி அதன் மூலம் மேற்படி மாகாணங்களை நீர்வளம் கொழிக்கும் பிரதேசங்களாகச் செய்திருக்கிருர்கள்.

இந்தியாவில் கங்கையிலும் இன்னும் பல புண்ணிய நதிகளிலும் வரும் தண்ணீரைத் தக்கபடி பயன்படுத்தினுல் இந்தியாவில் ஒரு அடி பூமியைக் கூடத் தரிசு கிடக்காமல் விளை நிலமாகச் செய்யலாம். அப்போது பாரத பூமி குறைவின்றி உணவளித்துக் காப்பாற்றும். அகில இந்தியாவிலும் அதிசயமான ஒற்றுமை திகழும்.

பெப்ருவரி 20

வருகிற பெப்ருவரி 20-ம் தேதி 'அகில இந்திய பி. ஸி. ஜி நாளா'கக் கொண்டாட இருப்பதாக ஒரு செய்தி பத்திரிகைகளில் வெளியாகி யிருக்கிறது. அதாவது நமது பாரத சர்க்காரின் சுகாதார இலாகா பகுத்தறிவுக்கும் நேர்மைக்கும் பணியாமல் முரட்டுப் பிடிவாதம் செய்து வருகிறது என்பதுதான் இதன் பொருள். இது மிகவும் வருந்தத் தக்க விஷயம். அமெரிக்க நாட்டின் சுகாதார இலாகாவைச் சேர்ந்தவர்கள் பி. ஸி. ஜி சற்றும் உபயோக மற்றது என்று தீர்மானித்து அதைக் கை விட்டு விட்டனர். பிரிட்டிஷ் சுகாதார இலாக்காவினர் பி. ஸி. ஜி யினால் பயன் உண்டா என்று இன்னும் ஆராய்ந்து வருகின்றனர். அவர்களது ஆராய்ச்சிகளின் முடிவு தமக்குச் சாதகமாக இருக்கும் என்று டாக்டர் பெஞ்சமின் எவ்வளவோ நம்பிக்கை கொண்டிருந்தும், பிரிட்டிஷ் ஆராய்ச்சிக் குழுவினர் எப்பொழுதோ வெளியிட்டிருக்க வேண்டிய தங்கள் அறிக்கைகளை வெளி யிடாமல் காலந் தாழ்த்தி வருகிறார்கள். டாக்டர் கரோல் பாமர் பி. ஸி. ஜி ஊசிக் குத்தைவிட ஐ என். எச் மாத்திரைகளே எவ்வளவோ மேல் என்று பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். பின் நம் சுகாதார இலாக்கா மட்டும் பி. ஸி. ஜி உயிர்க் கிருமிகளை மக்களின் உடலில் செலுத்த அடம் பிடிப்பானேன்?

டி. பி. நோயால் பாதிக்கப்படுபவர்கள் அனைவரும் பல ஆண்டுகள் தங்கள் தேகத்தில் டி. பி. கிருமிகளை வைத்துக் கொண்டிருக்கும் 'பாஸிடிவ்' குறிகளைப் பெற்றவர்களே. உடம்பில் டி. பி. கிருமிகள் இல்லாதவர்களுக்கு டி. பி. கிருமிகளைச் செலுத்தி 'பாஸிடிவ்' குறிகளை உண்டாக்குவதே பி. ஸி. ஜி யின் நோக்கம்.

இயற்கையில் உடம்பில் டி. பி. கிருமிகளைப் பெற்றும் டி. பி. நோயைத் தடுக்க முடியாதபோது, செயற்கை முறையில் உடலில் டி. பி. கிருமிகளைக் குத்துவதால் என்ன பிரயோசனம்? ஒன்றும் செய்யாமலிருப்பதைவிட ஏதாகிலும் செய்வது நலம் என்பதாக ஒரு கொள்கையுண்டு. அக்கொள்கையை அனுஷ்டிப்பதாக நினைத்துக் கொண்டு ஒன்றுக்கும் உதவாத தொன்றை உடலில் செலுத்துவது மிகக் தீமையானது.

நம் நாட்டிலிருந்து ஏராளமான குரங்குகள் மேல் நாட்டுக்கு அனுப்பப்படுகின்றன. எதற்கு? அவற்றின் உடம்புகளில் கொடும் நோய்களைச் செலுத்தி வைத்தியப் பரிசோதனை செய்வதற்காகத்தான். இப்படிக் குரங்குகளை அனுப்பிக் கொடுமைப் படுத்துவது தவறு என்று எவ்வளவு சொல்லியும் பிடிவாதமாக இருக்கும் நமது இந்திய சர்க்கார் சுகாதார மந்திரி ஸ்ரீமதி ராஜகுமாரி அம்ருதகௌர் பி. ஸி. ஜி விஷயத்திலும் பிடிவாதமாக இருக்கிறார்!

பத்ம பூஷணங்கள்

புது வருஷக் குடியரசு தினத்தின்போது பாரத ஜனாதிபதி பாரதநாட்டுப் பிரமுகர்கள் சிலர் தாய்நாட்டுக்குச் செய்துள்ள சேவைகளைப் பாராட்டி 'பத்ம பூஷண்' என்ற விருதை யளித்திருக்கிறார். அப் பெரியார்களில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களின் உருவப் படங்களை எதிர்ப் பக்கத்தில் காணலாம்.

ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி அவர்கள் 1912-ல் டாக்டர் பட்டம் பெற்றார் என்றாலே போதுமானது; எவ்வளவு திடசித்தமுடைய சமூக சேவகி என்று கூற வேண்டியதில்லை. அவர் அந்த நாளிலேயே ஸ்ரீமதி அன்னி பெசன்ட் அம்மையாருடன் தொடர்பு கொண்டு இந்திய மாதர் சங்கத்தைத் தோற்றுவித்து அதன் வாயிலாகப் பெண்கள் சமூகத்துக்கு நீண்ட காலம் அரும்பணியாற்றி யிருக்கிறார். 'அவ்வை விடுதி' என்றோர் அநாதை ஆசிரமம் நடத்தி வருகிறார். இவருடைய முயற்சியின் பயனாகச் சென்னையில் 'கான்ஸர் இன்ஸ்டிடியூட்' தோன்றியுள்ளது.

ஸ்ரீமதி ருக்மிணி தேவி அருண்டேல்-இந்தப் பெயரிலேயே பாரதமும் மேல் நாடும் இணைந்திருப்பதைக் காணலாம். பாரத நாட்டைத் தங்கள் தாய் நாடாகக் கொண்டு கல்வித் துறையில் அரும் பணி புரிந்து வந்த அருண்டேலை மணந்து, ஸ்ரீமதி ருக்மிணி தேவி பாரத நாட்டுப் புராதன நடனம், சங்கீதம், நாடகம், சித்திரம் முதலிய அருங்கலைகளுக்குச் செய்துள்ள சேவை மகத்தானது. பரதநாட்டியத்துக்கு உரிய அந்தஸ்தை இன்றையச் சமுதாயத்தில் தேடித் தந்தவர் ஸ்ரீமதி ருக்மிணி தேவி.

ஸ்ரீ கஸ்தூரி ஸ்ரீனிவாசன் பத்திரிகை உலகில் சீரும் சிறப்புமாக விளங்கும் "ஹிந்து" பத்திரிகையின் அதிபர். இவரது தந்தையார் காலஞ்சென்ற எஸ். கஸ்தூரிரங்க அய்யங்கார்தான் இப்பத்திரிகையைத் தோற்றுவித்தது. இந்திய பத்திராதிபர்கள் சங்கத்திலும், இந்திய வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கத்திலும், இந்திய பிரஸ் டிரஸ்டிலும் தலைவராக இருந்து பாரத நாட்டுப் பத்திரிகைகளின் அந்தஸ்தை உயர்த்தி யிருக்கிறார்.

எம். எஸ். திருமலை ஐயங்கார் என்றால் துங்கபத்ரா அணைக்கட்டுத்தான் யாருக்கும் நினைவுக்கு வரும். அதை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்தவர் அவர்தான். அது தவிர பல திட்டங்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறார். தற்சமயம் ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் கட்டப்பட்டு வரும் ஹிராகுட் அணை அவர் மேற்பார்வையில்தான் நடைபெறுகிறது. தமிழ்நாடு பெருமைப் படக்கூடிய நிபுணர்களில் முன்னணியிலே நிற்பவர்.

ஸர் டி. எஸ். வெங்கடராமன் கரும்புச் சாகுபடியில் ஆராய்ச்சி பல செய்து அருமையான "கோயமுத்தூர் கரும்பு" என்று ஒரு புதுவகைக் கரும்பை உண்டாக்கியவர். முதலில் இவர் காட்டுக் கரும்பையும் நாட்டுக் கரும்பையும் ஒட்ட வைத்துப் புதிய கரும்பு வகையை உண்டாக்கினார். அதை யொட்டிக் கரும்பு, மூங்கில், சோளம் ஆகியவைகளையும் ஒட்ட வைத்துப் பல கரும்பு வகைகளை உண்டாக்கி யிருக்கிறார். இவரது கரும்பு ஆராய்ச்சிகளின் பலனாகத்தான், இந்தியாவில் சர்க்கரைத் தொழிலே ஏற்படலாயிற்று!


ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டி
ஸ்ரீமதி ருக்மிணிதேவி
பத்ம பூஷணங்கள்
திரு கே. ஸ்ரீனிவாசன்
திரு திருமலை ஐயங்கார்
திரு டி.எஸ். வெங்கடராமன்

[பாரத நாட்டின் தலைநகரான தில்லிமா நகரில் நடக்கும் முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றி நாம் அனைவரும் தெரிந்து கொள்ள விரும்புவது இயல்பு. தில்லிக்கு உள்ள அரசியல் முக்கியம் தவிர, அங்கிருக்கும் நம் தமிழ்ச் சகோதரர்களின் பொதுப் பணிகளைப் பற்றியும் அவ்வப்போது நாம் அறிந்து கொள்ள வேண்டுமல்லவா? இந்த நோக்கத்துடன் மாதம் இருமுறை 'தலைநகரிலே' என்ற செய்திக் கதம்பம் வெளியாகும். ஏற்கனவே நமது நேயர்களுக்கு நன்கு அறிமுகமான தில்லியன்பர் 'சுப்புடு' அவர்கள், இந்தப் புதிய கதம்பத்தை ஆரம்பிக்கிறார். —ஆசிரியர்]



பம்பாய்க்கு மாதுங்காபோல் புது தில்லிக்கு கரோல்பாக். இங்கே கல்வி அன்பர்கள் — இல்லை, தமிழ் அன்பர்கள் (இரண்டும் ஒன்று தானே) பெருவாரியாக வசிக்கிறார்கள். தட்டுச் சுற்றும் பட்டு வேஷ்டியும் சர்வ சாதாரணமாய்க் காணலாம். பணி ஆற்றி வரும் ஸ்தாபனங்களில் பஜனை சமாஜமும், தக்ஷிண பாரத சமாஜமும் குறிப்பாகச் சொல்லப்பட வேண்டியவையே. இவை இரண்டும் சேர்ந்து சாதிக்கும் காரியங்களுக்கு ஈடு கொடுத்துச் சேவை புரியும் மற்றொரு ஸ்தாபனம் தென்னிந்திய மாதர் கழகம். மலைப் பாங்கான கரோல்பாக்கிற்கு நதி போன்று அழகு தரும் ஸ்தாபனம் இது. பஜனை சமாஜத்தாரும் தக்ஷிண பாரத சமாஜத்தாரும் தியாகய்யரின் உற்சவத்தைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். டி. கே. ஜெயராமய்யர், கோமதி ராமசுப்ரமணியம், வி. என். ராமய்யங்கார், பி. வி. லக்ஷ்மணன் முதலானோரின் இன்னிசைக் கச்சேரிகள் ஏற்பாடு செய்யப்பட்டு அமோகமாய் நடந்தேறியது. ஜனவரி 28-ம் தேதிமுதல் 31-ம் தேதி வரை அங்கே அப்படிக் கோலாகலம்.


சங்கீத உரைக்கோவை

சங்கீத நாடக அகாடமியார் ரஸமான விவாதம் ஒன்று ஏற்பாடு செய்திருந்தார்கள். பேராசிரியர் சாம்பமூர்த்தி, டாக்டர் வே. ராகவன், பண்டிட் ரத்தன் ஜங்கர், ஸ்ரீ பங்கஜ் மல்லிக் முதலானோரை ஒன்றுகூட்டி சாஸ்திரீய சங்கீதத்தையும், மெல்லிசை சங்கீதத்தையும் மோத விட்டார்கள். விட்டுக் கொடுக்காத ரத்தன் ஜங்கரும், விட்டுக் கொடுத்துக் கட்டிப் பிடிக்கும் சாம்பமூர்த்தியும், மெல்லிசையின் வல்லமையை வலியுறுத்தும் பங்கஜ் மல்லிக்கும், சதஸைச் சீராக நடத்திய வே. ராகவனும் எல்லாம் ரொம்ப ரஸமாய் அமைந்தது. முதல் இரண்டு நாளும் ஆளுக்கொரு காகிதச் சுருள் வைத்துப் படித்தார்கள். கடைசிநாள் விஷயம் விவாதத்துக்கு வந்தது. மெல்லிசை சங்கீதத்தில் சாஹித்தியத்தின் வல்லமையை வலியுறுத்திய பங்கஜ் மல்லிக்குக்கு, சாம்பமூர்த்தி அவர்கள் சாஹித்திய மின்றியே சாஸ்திரீய சங்கீத மூலமாய் ஸ்வரஸங்களுக்கும் மேம்பட்டமான பரானந்த நிலையைப் பிரதிபலிக்கச் செய்ய முடியும் என்று விளக்கிக் காட்டினார். அனைவருக்கும் வந்தனோபசாரம் கூறிய பின் விவாதம் இனிது முடிந்தது.

எல்லா சங்கீத சர்ச்சைகளுக்கும் ஏற்படும் முடிவைப்போல இதற்கும் முடிவில்லாத முடிவு ஏற்பட்டது. ஒரு வித்தியாசம்; டாக்டர் ராகவனின் ஆசை நிறைவேறினால் இந்த மூன்று நாளும் படிக்கப் பட்ட விஷயங்கள் புத்தக ரூபமாய் வெளி வரலாம். இனி அடுத்த வருஷம் வரை கவலை இல்லை.

மங்களக் குறி

தில்லியில் மங்களக் குறி குறைந்து வருகிறது. என்ன முழிக்கிறீர்கள்! மங்களக் குறியாகிய மஞ்சள் காமாலைக் குறியைத்தான் சொல்லுகிறேன். பம்பாயிலும், தமிழ் நாட்டிலும் கலை விழாக்கள் நடந்து வந்தபோது இங்கு கொலை விழா நடந்து கொண்டிருந்தது. காமாலை குறைந்து வருவதற்குக் கடவுளுக்குப் பூமாலையும் வடைமாலையும் சாற்றிய வண்ணமிருக்கிறார்கள் சஜ்ஜனங்கள்.



புது தில்லி ஸ்ரீ ஷண்முகானந்த சங்கீத சபையின் ஸ்ரீ தியாகராஜ உத்ஸவத்தில் சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஸ்ரீ டி. எல். வெங்கடராமய்யர் பேசுகிறார்.

சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், சென்னை

மூன்றாவது அகில இந்திய கைத்தறி வார விழாக்கள்

"ஹாலோவேஸ் கார்டன்ஸ்" - 34, பாந்தியன் ரோடு - எழும்பூர், சென்னை - 8

பொருட்காட்சி நேரம் - மாலை 4 முதல் இரவு 10 மணி வரை

நிகழ்ச்சி விவரம்

19 - 2 - 1956 மாலை 6 மணி	**கைத்தறி பொருட்காட்சி திறப்பு விழா** - பம்பாய் டெக்ஸ்டைல் கமிஷனர், **ஸ்ரீ வி. நஞ்சப்பா, ஐ. ஸி. எஸ்.,** விழாவைத் திறந்து வைப்பார்கள் பொதுக்கூட்டம் - சென்னை பிரதம நீதிபதி கனம் **ஜஸ்டிஸ் பி. வி. ராஜமன்னார்** அவர்கள் தலைமை வகிப்பார்கள். சென்னை முதன் மந்திரி **ஸ்ரீ கே. காமராஜ் நாடார்** அவர்கள் கைத்தறி வார விழாவைத் துவக்கி வைப்பார்கள் **கலை நிகழ்ச்சி** ... "பம்பாய் மெயில்" - நாடகம் **ஸ்ரீ எஸ். வி. சகஸ்ரநாமம் அண்டு பார்ட்டி**
20 - 2 - 1956	**பொருட்காட்சி** - மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
21 - 2 - 1956 மாலை 6 மணி	**பொதுக்கூட்டம்** - *தலைவர்:* **ஸ்ரீ எம். பக்தவத்சலம்,** விவசாய மந்திரி *பேச்சாளர்கள்:* **ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன்,** ஆசிரியர், கலைமகள் **குமாரி ஏ. ஆர். இந்திரா, எம்.ஏ.,** எத்திராஜ் கல்லூரி **கலை நிகழ்ச்சி** ... கான சரஸ்வதி **டி. கே. பட்டம்மாள்**
22 - 2 - 1956 மாலை 6 மணி	**பொதுக்கூட்டம்** - *தலைவர்:* **ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி,** சுகாதார மந்திரி *பேச்சாளர்கள்:* **ஸ்ரீ கே. எம். பாலசுப்ரமணியம்,** ஐந்து ஆண்டு திட்ட பிரசாரகர், கோவை. **ஸ்ரீ க. அன்பழகன்,** பச்சையப்பன் கல்லூரி. **கலை நிகழ்ச்சி** ... "மீண்ட ஒளி" - நாடகம் **கோ-ஆப்டெக்ஸ் டிராமாடிக் கிளப் அங்கத்தினர்கள்**
23 - 2 - 1956 மாலை 6 மணி	**பொதுக்கூட்டம்** - *தலைவர்:* **ஸ்ரீ ஸ்ரீபிரகாசா,** சென்னை கவர்னர். *பேச்சாளர்கள்:* **ஸ்ரீ சி. ஆர். ஸ்ரீனிவாசன்,** ஆசிரியர், சுதேசமித்திரன். **ஸ்ரீ ஏ. பழனியப்ப முதலியார்,** ரிஜிஸ்திரார் ஆப் கோவாபரேடிவ் சொஸைட்டீஸ் **கலை நிகழ்ச்சி** ... "தனபதி" - நாடகம் கலைவாணர் **என். எஸ். கிருஷ்ணன்,** செந்தமிழ் விறலி **டி. ஏ. மதுரம் பார்ட்டி**
24 - 2 - 1956 மாலை 6-15 மணி	**மாதர் தினம்** - *தலைவர்:* **ஸ்ரீமதி ராஜம் ராமசாமி.** *பேச்சாளர்கள்:* **ஸ்ரீமதி குஞ்சிதம் குருசாமி, பி.ஏ., ஸ்ரீமதி பி. வி. பத்மாவதி,** மேரி அரசியார் கல்லூரி **கலை நிகழ்ச்சி** ... T. D. **குசல குமாரி** - நடனம்
25 - 2 - 1956 மாலை 5 மணி	**மாணவர் தினம்** - *தலைவர்:* **ஸ்ரீ சி. சுப்ரமணியம்,** நிதி-கல்வி மந்திரி *பேச்சாளர்கள்:* **ஸ்ரீ எம். மீனாக்ஷி சுந்தர முதலியார், பி. ஏ., எல். டி.** **குமாரி கே. சுலோசனா,** மாணவி. **ஸ்ரீ அலீபூர் ரகீம்** மாணவர் **கலை நிகழ்ச்சி** - ஒய். எம். சி. ஏ. உடற் பயிற்சிக் கல்லூரி மாணவர்களின் தேகப் பயிற்சிக் காட்சிகள். நடனம்: **குமாரி சந்திரலேகா**
26 - 2 - 1956 மாலை 6 மணி	**பொதுக்கூட்டம்** - *தலைவர்:* **ஓ. பி. ராமசாமி ரெட்டியார், எம். எல். ஏ.** *பேச்சாளர்கள்:* **ஸ்ரீ டி. பி. மீனாட்சிசுந்தரனார், ஸ்ரீ எம். ராஜாக் கண்ணு** **கலை நிகழ்ச்சி** ... இசை அரசு **எம். எம். தண்டபாணி தேசிகர்**

பிரவேசக் கட்டணம் கிடையாது

M. P. நாச்சிமுத்து, B.A., B.L. தலைவர்   **W. ஞான சம்பந்தம்,** B.A., C.A.I.I.B., ஜெனரல் மானேஜர்

மூன்றாவது பரிசுக் கதை. 9

நிம்மதி

நாலு நாட்களுக்கு முன்பு ரமாவைப் பார்த்து விட்டுப் போன பிள்ளையாண்டானிட மிருந்து கடிதம் வந்து விட்டது. ரமாவை அவ னுக்குப் பிடிக்கவில்லை என்பதை சுருக்கமாகத் தெரிவித்திருந்தான்.

நான் அதிர்ச்சியடையவில்லை; இந்தப் பதில் நான் எதிர் பாராதது அல்லவே! ஆயினும் வேதனை கொள்ளாமல் இருக்க முடியுமா! என் பெண் இதுவரை பதின்மூன்று இளைஞர் களால் நிராகரிக்கப்பட்டிருந்தாள். அவளு டைய பஞ்சு போன்ற இதயம் எத்தகைய வதைக்குள்ளாகித் துடிதுடித்துக் கொண் டிருக்கும்!—என்றாலும் அவள் மிகுந்த புத்தி சாலிப் பெண்ணுகையால் தன் மனத்துயரை வெளிக் காட்டுவதில்லை.

இந்தப் பதின்மூன்றாவது பேர்வழியிடமிருந்து வந்த கடிதத்தைப் பார்த்ததும், "அப்பா! நீங்கள் வீணுகச் சிரமப்படாதீர்கள்! யாரையும் மீண்டும் போய் அழைத்து வராதீர்கள், என் னைப் பார்ப்பதற்காக. வீட்டோடு பிள்ளைமாதிரி இருந்து விட்டுப் போகிறேன்" என்றாள்.

என்றாலும் இயற்கை உணர்ச்சி, பருவத் துடிப்பு, எல்லாரையும் போல் அவளுக்கும் இருக்காதா! மற்றப் பெண்களைப் போல் தானும் கல்யாணம் பண்ணிக் கொண்டு குடி யும் குடித்தனமுமாக இருக்கவேணும் என்ற ஆசை அவளுக்கு இல்லாம லிருக்க முடியுமா!

இரண்டு வருஷங்களுக்கு முன்பு ரமா எப் படிப்பட்ட சௌந்தரியவதியாக இருந்தாள்! முகத்தில்தான் என்ன லக்ஷ்மீகரம்! அந்த வத னத்தில் விழித்தாலே சகல பாபங்களும் நீங்கி விடுமே! அப்போதாக இருந்தால் எத்தனை வாலிபர்கள் 'நான், நீ' என்று அவள் கரம் பிடிக்க ஓடி வந்திருப்பார்கள்! என் அருமை மகள், அற்புத எழில் படைத்தவள், ரமாவை விதி எவ்வளவு கொடுமை செய்து விட்டது! இப்படியா குரூபம் செய்ய வேண்டும்! அவளை அவ்வாறு விதி கோரமாகப் பழி வாங்கும்படி அவள் செய்த பாவந்தான் என்ன!

மாதா, பிதா செய்த பாவங்கள் மக்களைச் சாரும் என்கிறார்களே, அதுமாதிரி நான் செய்த ஏதோ பாவந்தான் அவளைத் தாக்கி விட்டதோ! சந்திரனுக்கு நான் அநீதி இழைத்து விட் டேனே! நான் செய்தது உண்மையிலேயே அநியாயந் தானே! அந்தப் பாவந்தான் என்னை விடா மல் சுற்றுகிறதோ!

* * *

சந்திரன் என் ஒன்று விட்ட சகோதரியின் குமாரன். அவனுக்குப் பன்னிரண்டு வயதாக இருக்கும் போது, அவர்கள் ஊரில் பரவி யிருந்த காலரா அவனுடைய பெற்றோர் இருவரையும் ஒரே நாளில் பலி கொண்டு விட்டது. அநாதையாக நின்ற அச்சிறுவனை ஊரார் சிலர் என்னிடம் கொண்டு வந்து ஒப் படைத்து விட்டுப் போனார்கள். நான் அவனை—என்னைத் தவிர வேறு திக்கில்லாத அந்தச் சிறுவனை—முழு மனத்துடன் ஏற்றுக் கொண் டேன். அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த் துப் படிக்க வைத்தேன்.

பள்ளிக்கூடத்திலிருந்து சந்திரன் மீது அடிக் கடி புகார்கள் வர ஆரம்பித்தன. மற்றப் பிள்ளைகளின் நோட்டுகள், புஸ்தகங்கள், பென்சில் பேனுக்கள் ஆகியவைகளை அவன் திருடி விடுவதாகவும், அவனை ஒழுங்காக நடந்து கொள்ளும்படி கண்டித்து வைக்க வேணும் என்றும் அவனுடைய ஆசிரியர்கள் எனக்குத் தகவல் அனுப்பினார்கள். நான் அவனை விசாரித்து, மிரட்டி அவனுக்குப் புத்தி புகட்ட முயன்றேன். ஒன்றும் பயனில்லை. பத்து நாட்கள் ஒழுங்காக இருப்பான் அவன். மீண்டும் பழைய கதைதான்; பழைய புகார்கள்தான்.

அவன் பள்ளிக்கூடத்திலிருந்தால், மற்றவர் களையும் கெடுத்து விடுவான் என்று பள்ளித் தலைமையாசிரியர் அவனைப் பள்ளியி லிருந்தே நீக்கிவிடத் தீர்மானித்தார். நான் செய்தி அறிந்து அவரிடம் ஓடிக் காலில் விழாத தோஷமாகக் கெஞ்சி, அவன் அநாதைச் சிறுவன், படிப்பில்லாமல் பாழாகப் போய்விடு வான் என்பதை அவர் மனம் இளகும்படி எடுத் துரைத்தேன். அவனை 'டிஸ்மிஸ்' செய்யாத படி செய்தேன். இம்மாதிரி இரண்டு முறை நடந்தது. எனினும் சந்திரன் சீர்திருந்தவில்லை; பழைய கருப்பனுகவே இருந்தான். வகுப்பு ஆசிரியரின் பௌண்டன் பேனவையே ஒருநாள் அவர் அயர்ந்திருந்த சமயத்தில் 'லபக்கி' விட்டான். மறுநாளே அகப்பட்டுக் கொண் டான். பள்ளிக்கூடத்திலிருந்து அவன் சீட்டு அன்றே கிழிந்தது.

நான் மீண்டும் தலைமை ஆசிரியரைப் போய்ப் பார்க்கவில்லை. எத்தனை முறைதான் அவர் பொறுப்பார்! மறுபடியும் அவரிடம் போய் நிற்க எனக்கு முகமேது!

அவன்—சந்திரன்—மீது எனக்கு உண்டான ஆத்திரம் அளவற்றதா யிருந்தது. எனினும் அவனை அடித்துக் கிடித்து வதைக்க எனக்கு மனம் வரவில்லை.

அவன் ஏதாவது தொழில் கற்றுக் கொள்ளும் படி செய்ய முயற்சித்தேன். ஒரு எலெக்ட்ரிக் கண்டிராக்டரிடம் அவனைக் கொண்டு விட்டு மின்சார வேலைகள் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தேன். மூன்று மாதங்களுக்கு மேல்



அங்கு நிலைக்கவில்லை அவன். அந்தக் கண்டி ராக்டரின் வெள்ளிப் பொடி டப்பியைத் திருடி மாட்டிக் கொண்டு, அவரிடம் நாலு அறை வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தான்!

இப்போது என்னால் பொறுமையாயிருக்க முடியவில்லை. பிரம்பை எடுத்து விளாசிவிட்டேன், துளிக் கூட தாக்ஷண்யம் பாராமல். 'இனிமேல் ஒழுங்காயிருக்கிறேன்' என்று அவன் கதறும் வரையில் விடவில்லை. 'யோக்கியமாக இருக்கிறேன்' என்று அவன் ஒப்புக்கொண்டதைக் கண்டு சற்று நிம்மதியடைந்தேன்.

அதன் பிறகு அவனை ஒரு வக்கீல் வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்து வக்கீல் குமாஸ்தா வேலை பழகிக் கொள்ளும்படி ஏற்பாடு செய்தேன். இரண்டு மாதங்கள் கழிந்து அந்த வக்கீல் எனக்கு ஆள் விட்டனுப்பினார். என்னமோ, ஏதோ என்று நான் திகிலடைந்து அங்கே போனேன். சந்திரன் அவருடைய மணிபர்ஸை எடுத்து விட்டானாம்! கையுங் களவுமாகப் பிடித்து விட்டார்களாம்.

அவமானத்தால் என் உடல் குன்றி விட்டது. வக்கீலிடம் பல்லைக் காட்டிக் கெஞ்சி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சந்திரனையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தேன். அவனை வெறி கொண்ட மிருகம் போல் அறைந்தேன்.

அதற்குமேல் மறுபடியும் வேறு யாரிடமும் கொண்டுபோய் அவனை வேலை கற்றுக்கொள்ள விடுவதற்கு எனக்குத் தைரியமில்லை.

அவனை வீட்டை விட்டு வெளியேற்றி விடலாமா என்று கூட எண்ணினேன். சோறு அகப்படாமல் தவித்தானானால் புத்தி வந்து ஒழுங்காகி விடுவான் என்பது என் கருத்து. ஆனால் அனாதைச் சிறுவனை வீட்டை விட்டு விரட்டுவது பாவம் என்ற எண்ணத்தினால் அந்த யோசனையைக் கை விட்டேன்.

அவனைப் பற்றிய கவலையே எனக்குப் பெரிய கவலையாகி விட்டது. எவ்வளவு புத்தி சொன்னாலும், மிரட்டினாலும், அடித்தாலும் திருந்தாமல் இப்படி ஏனக் காரியம் செய்து கொண்டிருக்கிறானே என்று எண்ணி யெண்ணி மாய்ந்து போனேன். அவனை ஒழுங்கான முறையில் ஆளாக்கும் பொறுப்பு என் தலையில் அல்லவா விடிந்து விட்டிருந்தது!

அவனுடைய திருட்டுப் புத்தியை மாற்ற ஒரு உபாயம் செய்து பார்த்தேன். 'சினிமாவுக்குப் போய்விட்டு வா, நாடகத்துக்குப் போய்விட்டு வா, ஹோட்டலில் டிபன் சாப்பிடு' என்று அடிக்கடி கால், அரை சில்லறை கொடுத்தேன் அவனுக்கு. அந்தச் செலவுகளுக்குக் காசில்லாமல் தான் அவனுக்குத் திருட்டில் நாட்டம் செல்கிறதோ என்பது என் எண்ணம். என்ன கொடுத்துத்தான் என்ன! அவன் குணம் மாறவில்லை. வீட்டிலிருந்து அடிக்கடி சில்லறையும் ரூபாயுமாகத் திருடிக் கொண்டுதான் இருந்தான்.


ஒருநாள் எனக்குத் தெரிந்த 'காசுக் கடைக்காரர்' ஒருவர் ஆள் விட்டனுப்பி அவசரமாகக் கூட்டி வரும்படி செய்தார். போனேன். அங்கே, அவர் கடையில் சந்திரன் திருதிரு வென்று விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். ஒரு சிறு மோதிரத்தை அந்தக் கடையில் விற்க வந்தானாம் அவன். கடைக்காரர் சந்தேகப்பட்டு யார் வீடு என்று அவனை விசாரித்து எனக்கு ஆள் விட்டாராம். அந்த மோதிரத்தை வாங்கிப் பார்த்தேன் நான். என் பெண், பன்னிரண்டு வயதுச் சிறுமியான ரமாவினுடையது அந்த மோதிரம்.

ஒரே கணத்தில் ஒரு முடிவு செய்தேன் நான். எவ்வளவோ முறை பார்த்தாகிவிட்டது. நயமாகச் சொல்லியும், அடித்து உதைத்தும் அவன் திருந்தவில்லை; திருந்தவும் போவதில்லை. நாளுக்கு நாள் அவன் திருட்டுப் புத்தி வளர்ந்து கொண்டு வருகிறதே ஒழியக் குறையவில்லை; அதனின்றும் அவனைக் காக்க வேணுமென்றால் ஒரே வழிதானிருக்கிறது. அவனை இளங் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பி விடுவதுதான் அது. அவன் சீர்திருந்துவதாயிருந்தால் அதற்கு வேறு மார்க்கமே கிடையாது — இதுதான் என் முடிவு.

மோதிரத்தைக் கடைக்காரனிடமே கொடுத்தேன், வைத்திருக்கும்படி சொல்லி. நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று என் வீட்டு மோதிரத்தைத் திருடி விற்க முயன்றான் என்று சந்திரன் மீது 'புகார்' கொடுத்து விட்டேன்.

சந்திரன் தண்டனை யடைந்து 'ரெபர்மேடரி ஸ்கூலு'க்கு அனுப்பப் பட்டான். அப்போது அவனுக்கு வயது பதினைந்தரை.


சந்திரனுடைய நன்மை ஒன்றையே கருத்தில் கொண்டு நான் செய்த இக் காரியம் ஊரில் பெரிய பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. என் செய்கையை ஆமோதித்தவர்கள் வெகு சிலரே; தூற்றியவர்கள்தான் பெரும்பான்மையினர். 'இரக்கமில்லா அரக்கன்' 'அனாதைச் சிறுவனை வைத்து ஆதரித்துச் சோறு போட இஷ்டமில்லாவிட்டால் விரட்டிவிடுவதுதானே! இப்படியா ஈரமின்றிச் சிறைக்கு அனுப்புவது!' 'ஊரார் பிள்ளையாக இருக்கக் கொண்டு இப்படிச் செய்தான்! தன் பிள்ளை திருடியிருந்தால் ஜெயிலுக்கு அனுப்புவானா!' என்றெல்லாம் அவர்கள் என்னைத் தூஷித்துக் கொண்டிருந்தது பராபரியாக என் காதுகளில் விழத்தான் செய்தது. சந்திரனிடத்தில் எனக்கில்லாத அன்போ, பாசமோ, அக்கறையோ அவர்களுக்கென்ன வந்து விட்டது!, சந்திரன் திருடனாகி அவன் வாழ்வே பாழடைந்து விட்டால் அதற்காக



இந்தப் பிரகிருதிகள் வருந்தப் போகிறார்களா, என்ன!

சந்திரன் சீர்திருத்தப் பள்ளியிலிருந்து விடுதலையாகவேண்டிய சமயத்தில் அவனைப் போய் அழைத்து வரலாம் என்று அங்கே போனேன் நான். ஒரு வாரம் முந்தியே விடுதலையடைந்து போய் விட்டானாம் அவன்! எனக்கு ஏமாற்றமாகவும் வருத்தமாகவும் இருந்தது.

இதற்கிடையில் என் ஒரே குழந்தையாகிய ரமா விவாகப் பருவத்தை அடைந்தாள். ஏற்கனவே வனப்பு மிக்க அவள் பருவப் பூரிப்பின் காரணமாக இப்போது தேவ கன்னிகையாகவே விளங்கினாள். அவளுக்கு விவாகம் செய்துவிட வேண்டும் என்று என் மனைவி அபிப்பிராயப் பட்டாள். "இதோ பார்! ரமாவுக்குக் கணவன் தேடுவதில் நாம் சிரமப்படவே தேவையில்லை. அவளை எவனாவது தானே வந்து கொத்திக் கொண்டு போய்விடுவான். அவளுக்கு இப்போதுதானே பதினைந்து வயது பூர்த்தியாகியிருக்கிறது! இன்னும் ஒரு வருஷம் போகட்டுமே!" என்றேன்.



ஆனால், அந்தோ! அந்த ஒரு வருஷத்துக்குள் எத்தகைய துர்ப்பாக்கியம் நேர்ந்து விட்டது! என் அருமை ரமாவுக்குத் திடீரென்று பெரியம்மை கண்டு இரண்டு மாத காலம் அவளைப் படாதபாடு படுத்தியது. அவளுடைய ஒப்பற்ற சௌந்தரியத்துக்கு முக்கிய காரணமான அவளுடைய மதிமுகம் கோரமாகி விட்டது.

நானும் என் மனைவியும் கண்ணீர் விட்டுக் கதறினோம்; ரமாவைப் பற்றியோ சொல்ல வேண்டியதே இல்லை, துயரக் கடலில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்தாள். அவள் வாய் விட்டு அழுவதில்லை; கண்ணீர் விடுவதில்லை; தன் துயரத்தை வெளிக் காட்டி எங்கள் துயரத்தை அதிகரிக்கக் கூடாதென்று. ஆயினும் அவளுடைய மனத் துன்பம் எத்தகையதாயிருக்கும் என்று ஊகித்து அறிந்து கொள்ள முடியாதா!

என் மகளின் துர்க்கதியைக் கண்டு ஊரிலுள்ள வம்பர்களுக்கு ஒரே கொண்டாட்டம். "அந்த அநாதைச் சிறுவன் சந்திரனுக்கு அவன் செய்த கொடுமை அவனைச் சும்மா விடுமா! அந்தப் பாவம் கைமேல் கூலி கொடுத்து விட்டது. அவன் பெண்ணைக் கோரப்படுத்தி அவனைப் பழி வாங்கிவிட்டது!" என்று கெக்கலி கொட்டினார்கள் என்பது என் காதுக்கு எட்டியது. நான் துணுக்குற்றேன். அவர்கள் கூற்றில் நியாயமிருக்குமோ என்று என் மனம் இலேசாகச் சஞ்சல மடைந்தது.

மேலும் ஒரு வருஷம் சென்றது. வயதான பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்காமல் எவ்வளவு நாள் வைத்துக் கொண்டிருக்க முடியும்! எனவே ரமாவுக்கு வரன் தேட முனைந்தேன். அவ்வளவாக நம்பிக்கையில்லை என்றாலும் அவளுக்கென்று ஒருவன் பிறக்காமல் இருக்க முடியுமா என்ற வேதாந்த வாக்கியத்தை மனத்தில் கொண்டு இடைவிடாது முயற்சி செய்யலானேன். ஒவ்வொருவராகப் பதின்மூன்று வரன்கள் ரமாவை வந்து பார்த்து விட்டுப் போனார்கள். ஏதேதோ சால்ஜாப்புச் சொல்லித் தட்டிக் கழித்து விட்டார்கள்.

அதற்கு மேல் ரமாவுக்காக வரன் தேட எனக்குத் துணிவில்லை. ரமா சொன்ன பிரகாரம் சும்மா இருந்து விட்டேன். ஆனால் உள்ளம் மட்டும் குமுறிக் கொண்டுதானிருந்தது. நாளாக நாளாக ஒருவிதச் சோர்வு என்னைப் பிடித்து என் மனத்தை அரித்துக் கொண்டே வந்தது. என் பழைய திடம் முழுதும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. ரமாவைப் பார்க்குந்தோறும் பரிதாபம் கலந்த ஓர் சோகம் என்னுள் பீறிட்டு எழும். 'அவள் இத்தகையதோர் இரங்கத்தக்க நிலைமைக்கு வந்ததற்குக் காரணம் என்ன! உத்தமப் பண்புகள் நிறைந்தவளாகிய என் ரமா என்ன பாவம் செய்தாள்! அவளை எதற்காக இப்படிப் பழி வாங்கினாய், ஆண்டவனே!" என்று மானஸீகமாகக் கடவுளை நோக்கிப் புலம்பினேன்.

கடவுள் அதற்கு யாதொரு பதிலும் சொல்லவில்லை. ஆனால் 'சந்திரனுக்கு நான் செய்து விட்டது கொடுமைதான். அதன் விளைவுதான் இது!' என்ற எண்ணம் சிறுகச் சிறுக என் மனத்தில் வேரூன்றிக் கொண்டிருந்தது.

மேற்படி எண்ணம் என்னை அடிக்கடி வதைக்கலாயிற்று. உள்ளமும், உடலும் சோர்ந்து ஒருவித பலவீனம் ஏற்பட்டுவிட்டது. நடைப் பிணம்போல் ஆகிவிட்டேன். சந்திரன் எங்கே இருக்கிறான், என்ன ஆனான் என்பது பற்றி யாதொரு தகவலுமில்லை. அவனைப் பார்த்து நான் செய்து விட்ட கொடுமைக்காகப் பச்சாத்தாபப் பட்டுக் கதறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டாலாவது என் பாவச் சுமை குறையாதா, என் பெண்ணுக்கு விடிவுகாலம் பிறக்காதா என்று ஏங்கினேன்.


"அப்பா, அப்பா! சந்திரன்!" என்று கூவினாள் ரமா ஒருநாள் காலை திடீரென்று. நான் திடுக்கிட்டுக் குழப்பத்துடன் பார்த்தேன் நிமிர்ந்து. ஒரு கையில் பெட்டியையும், மற்றொரு கையில் படுக்கையையும் பிடித்துக் கொண்டு சந்திரன் வந்து கொண்டிருந்தான்.

மரப்பாலம்


கல்கி ஆசிரியர் சோமு அவர்கள் எழுதும் சிறுகதை.

— அடுத்த இதழில் வெளியாகிறது. —


செல்வம் பெருக நிர்மாணத் திட்டங்கள்




நங்கல் பாரேஜ்
15,00,000 டன்களுக்கு மேலாக ஏசிசி சிமெண்ட் பக்ரா நங்கல் நிர்மாணத் திட்டத்திற்கு உபயோகிக்கப்படும்.



மலம்புழை அணைக்கட்டு
64,000 டன்களுக்கு மேலாக ஏசிசி சிமெண்ட் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.



துங்கபத்திரா அணைக்கட்டு
2,25,000 டன்களுக்கு மேலாக ஏசிசி சிமெண்ட் இதுவரை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.




கீழ்பவானி அணைக்கட்டு
இத்திட்டத்திற்கு 1,29,000 டன்களுக்கு மேலாக ஏசிசி சிமெண்ட் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.

உறுதியாக நிலைத்து நிற்க

ஏசிசி

சிமெண்டினால் கட்டப்பட்டது



ஜனவரி 29-ந் தேதியிலிருந்து பெப்ருவரி 12உ முடிய புனாவில் ஸ்ரீ புரந்தர தாஸர், தியாகய்யர் ஆராதனை உத்ஸவம் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவைத் திரு பாபநாசம் சிவன் அவர்கள் ஆரம்பித்து வைத்துச் சிறப்பித்ததுடன், மறுநாள் கச்சேரியும் செய்து ரஸிகர்களை மகிழ்வித்தார். புனாவரை வந்த திரு பாபநாசம் சிவன் அவர்களைப் பம்பாய்த் தமிழர்கள் சும்மா விடுவார்களா? திரு சிவன் அவர்களைப் பம்பாய்க்கு அழைத்துச் சென்றனர். அங்கு ஷண்முகானந்த சபையும், பம்பாய்த் தமிழ்ச் சங்கமும் திரு பாபநாசம் சிவன் அவர்களுக்கு அமோக வரவேற்பு அளித்து உபசரித்தன. திரு பாபநாசம் சிவன் அவர்களுக்கு ஷண்முகானந்த சபையார் பணமுடிப்பு அளித்துக் கௌரவித்தனர். வரவேற்பு விழாவில் திரு பாபநாசம் சிவன் தம் குமாரிகள் இருவருடன் கச்சேரி செய்த காட்சியை மேலே காணலாம். பக்கவாத்தியம் வாசித்தவர்கள் ஸ்ரீமதி மீனாக்ஷி விஸ்வநாதன் பிடில்; செல்வன் ராமு மிருதங்கம்.

மான ஒரு வாழ்க்கை சித்தித்தது எனக்கு. அங்கே சித்திரக் கலையில் எனக்குப் பயிற்சி அளித்தார்கள். அங்கிருந்து விடுதலையாகும்போது நல்ல தேர்ச்சியுள்ள சைத்ரிகனானேன். இங்கே வர வெட்கமாக இருந்தது. நேரே பம்பாய்க்குப் போய் விட்டேன். அங்கே ஒரு பிரபல சைத்திரிகரிடம் மேலும் பயிற்சி பெற்றேன். முதல் தர சைத்ரிகன் ஆனேன். ஒரு வார சஞ்சிகையில் பிரதம சைத்ரிகனாக இருக்கிறேன் இப்போது. முந்நூறு ரூபாய் சம்பளம், நல்ல புகழ். இவையெல்லாம் தங்களால் தானே சித்தித்தன!...... ரமாவுக்கு சேர்ந்து விட்ட துர்ப்பாக்கியம் எனக்குச் சமீபத்தில் தெரியவந்தது. வந்து பார்க்க வேணும் என்ற ஆவல் கட்டுக்கடங்காததாகி விட்டது. வெட்கத்தை உதறிவிட்டு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு வந்தேன்......"

இந்த ஏழு வருஷங்களில் எவ்வளவு சுந்தர புருஷனாக வளர்ந்து விட்டிருந்தான் அவன்!

பாய்ந்து அவனைத் தழுவிக் கொண்டேன், அவன் பெட்டி படுக்கைகளைக் கீழே வைப்பதற்குள்ளேயே! "சந்திரா, குழந்தாய்! என்னை மன்னித்து விட்டாயா! என் முகத்தில் விழிக்க மனம் வந்ததா உனக்கு!" என்று தேம்ப ஆரம்பித்தேன்.

அவன், "மாமா, இது என்ன பெரிய வார்த்தை! நானாவது மன்னிப்பதாவது! நான் சீர்திருந்துவதற்கு வழி வகுத்த மகான் தாங்கள்! அடியோடு பாழாகிப் படுகுழியில் விழுவதற்கிருந்த என்னைத் தடுத்தாட்கொண்ட பெருந்தகை நீங்கள்!" என்று தன்னை விடுவித்துக் கொண்டு சாமான்களைக் கீழே வைத்து விட்டு சாஷ்டாங்கமாக விழுந்து எனக்கு நமஸ்காரம் செய்தான்.


நான் பிரமித்து நின்றேன்.


அவன் கூறினான்: "மாமா! சீர்திருத்தப் பள்ளிக்கு என்னை அனுப்பி விராவிட்டால் நான் இன்று எந்த நிலைமையில் எங்கே திருப்பேனோ! அங்கே போனதினால் கௌரவ

"நல்ல நிலைமைக்கு நீ வந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியும் பெருமையும் அளிக்கிறது சந்திரா! ஆயினும் நான் உனக்குச் செய்தது கொடுமை தானே! ஏதோ உன்னுடைய பெருந்தன்மை காரணமாக அதை மறந்து இங்கே வந்தாய், நீ" என்று கூறினேன். இப்பொழுது என்னை இடைமறித்தான் அவன்:—"மாமா! நான் சொன்னது அவ்வளவும் சத்தியம்! நீங்கள் என்னைத் தடுத்தாட்கொண்டு என்னை ஆளாக்கியதற்கு ஒரு சிறு பிரதி உதவி செய்ய வேண்டும் என்பது என் கருத்து......ரமாவுக்கு விவாகம் ஆகவில்லையே என்ற கவலையை ஒழியுங்கள். அவளை முழு மனத்துடன் ஏற்றுக் கொள்கிறேன் நான்!"

நான் புளகாங்கித மடைந்தேன். "சந்திரா! உலகம் முழுதும் என்னைத் தூற்றட்டும்! என்னுடைய அந்தரங்க சுத்தியை நீ ஒருவன் அறிந்து கொண்டது போதும் எனக்கு! குரூபியான என் மகளை ஏற்றுக் கொள்ள முன் வந்த உன் தீரத்தையும், பெருந் தன்மையையும் எவ்வாறு போற்றுவேன் நான்!" என்று நெஞ்சம் தழதழக்கக் கூறினேன்.

மகாமக உற்சவத்துக்காக இலங்கையிலிருந்தும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலிருந்தும் அனேகம் யாத்ரீகர்கள் கும்பகோணத்துக்குச் செல்லுகிறார்கள். 25-2-56ம் தேதி மாலை 6-45 மணியிலிருந்து 7 மணி வரை இலங்கைவானொலித் தமிழ் ஒலிபரப்பில் நமது கொழும்புப் பிரதிநிதியும் 'வீரகேசரி'ச் செய்தி ஆசிரியருமான ஸ்ரீ கே. வி. எஸ். வாஸ் மகாமகத்தின் தத்துவத்தையும் கும்பகோணத்தின் ஸ்தல விசேஷத்தையும் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்துகிறார். ஸ்ரீ வாஸ் கும்பகோணத்துக்குச் செல்லுவதினால் அவருடைய சொற்பொழிவு ஒலிப்பதிவு செய்து கொள்ளப்பட்டு 25ம் தேதி யன்று ஒலிபரப்பப் படுகிறது.





1. 500 காலன்கள் டாங்க் ட்ரெயிலர்
2. டிராக்டர் ட்ரெயிலர்
3. ஸாக் டிரக்
4. தண்ணீர் கைவண்டி
5. (Pan Type) வீல் பாரோ

மேலே குறிப்பிடப்பட்டவை எங்களுடைய சிறந்த இலேசான என்ஜினீயரிங் தயாரிப்புகளில் சில. எங்கள் தயாரிப்புகளில் ஒவ்வொன்றும் முதல்தரமான சேவை யுடையதாயும் வாங்குபவர்களிடையே முதல் இடத்தை விசேஷமாகப் பெற்றும் விளங்குகிறது.

Simplex's

ஸிம்ஸன் & கோ லிட்.
மதராஸ்-2

வட இந்திய யாத்திரை. 30

மகா கவி பாரதியார் தமது தீர்க்கதரிசனத்தினால் யாரும் காணாத காட்சியைக் கண்டார். பாரதத்தாயின் மணிக் கொடி,—இந்திய தேசத்தின் சுதந்திரக் கொடி — வானளாவிப் பறப்பதை அவர் பார்த்தார். அந்த மணிக் கொடியைத் தாங்கி நின்ற கம்பத்தைச் சுற்றி அகில இந்தியாவையும் சேர்ந்த வீரர்கள் அணி வகுத்து நிற்பதைப் பார்த்தார். அந்த வீரர்கள் எப்படிப் பட்டவர்கள் 'என்பதை ஞானக் கண்களினால் கண்டறிந்தார். "ஆகா! இவர்கள் எத்தகைய வீராதி வீரர்கள்! தாயின் மணிக் கொடியைக் காப்பதற்காகத் தங்கள் உயிரையும் கொடுக்கக் கூடியவர்கள் அல்லவா!" என்று வியந்தார். அந்த வியப்பிலே பாடினார்.

"கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர்!—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற்குரியர் அவ் வீரர்—தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக்காப்பர்!"

இத்தகைய வீரர்களைப் பொதுப்படையாகப் பார்த்ததோடு பாரதியார் திருப்தியடைந்து விடவில்லை. அவர்கள் இந்திய தேசத்தின் எந்தெந்தப் பகுதியில் இருந்து வந்தார்கள் என்பதையும் தெரிந்து கொண்டார். பெருமிதத்தோடு அவர்களை வர்ணிக்கிறார். "ஆகா! எங்கிருந்தெல்லாம் அந்த மகா வீரர்கள் வந்திருக்கிறார்கள்! இதோ செந்தமிழ் நாட்டு வீரர்கள்! இதோ சிந்தை துணிந்த தெலுங்கர்கள்! அதோ கலனும் அஞ்சப் போரில் கலக்கும் மராட்டியர்கள்! அங்கே, பார்த்தனும் பீமனும் வாழ்ந்த பாஞ்சால நாட்டினர்கள்! இதோ நிற்பவர்கள் தூக்கத்திலும் தாய்நாட்டின் சேவையை மறவாத வங்க நாட்டு வீரர்கள்! இப்படி நாட்டின் எல்லா பாகங்களில் இருக்கும் கொடியைக் காப்பதற்காக அணிவகுத்து நிற்கும் வீரர்களை எப்படிப் பாராட்டுவது! அவர்கள் சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!" என்று கவியரசர் பாரதியார் துள்ளிக் குதிக்கும் வீரத் தமிழில் பரவசமாக வாழ்த்தினார்.

மகா கவியின் வாக்கு இன்றையதினம் பரிபூரணமாகப் பலித்திருப்பதை நேருக்கு நேர் பார்த்து ஆச்சரிய மடைந்தேன். ஆமாம், நீங்களும் அந்தக் காட்சிகளைப் பார்த்து வியப்பில் மூழ்கித் திளைக்கப் போகிறீர்கள்.

** ** **

வட இந்திய யாத்திரையில் மிகவும் முக்கியமான இடம் இதுதான். நமது சேனைகளை அது போர் புரியும் பூமியிலேயே அதன் கூடாரத்திலேயே போய்ப் பார்க்கப் போகிறோம். இந்தியாவின் அரசாட்சித் திறமையைக் காணப் போகிறோம். முதலில் ஜம்மு-காஷ்மீர் பகுதியில் யுத்தம் நடைபெற்ற இடங்களை எல்லாம் சுற்றிப் பார்ப்போம்.

பசுமை நிறைந்த பஞ்சாபிலிருந்து 'சென்ற ஜூன் மாதம் 26ந் தேதி காலையில் பத்தான் கோட் நகரம் வந்து சேர்ந்தோம். பஞ்சாபின் எல்லையில் இருக்கும் இந்த நகரம் ஒரு ராணுவ நகரம். நாடு சுதந்திரம் பெற்றுப் பாகிஸ்தான் பிரிந்து போவதற்கு முன் வரையில் பத்தான் கோட் சாதாரணமாகப் பஞ்சாபில் உள்ள ஒரு சிறு நகரமாகத்தான் இருந்தது. இன்று நிலைமை மாறி விட்டது.

முன்பெல்லாம் காஷ்மீருக்கு இந்தியாவிலிருந்து செல்வதற்கு ராவல்பிண்டி வழியாகச் செல்ல வேண்டும். ராவல்பிண்டியிலிருந்து உடி, பாராமுலா வழியாகக் காஷ்மீரில் உள்ள ஸ்ரீநகர் என்ற நகரம் வரை போய்ச் சேருவதற்கு நல்ல வழியிருக்கிறது. 1947-ம் ஆண்டில் பாகிஸ்தான் சர்க்கார் இந்த வழியில் யாரும் செல்லக்கூடாது என்று மூடி விட்டார்கள். மக்களின் போக்குவரத்து தடைப்பட்டது. ஆனால் அது கொள்ளைக் கூட்டத்தாருக்குச் சௌகரியமாகப் போய்விட்டது. இந்த வழியை அவர்கள் உபயோகப்படுத்திக் காஷ்மீர் மீது படையெடுக்க ஆரம்பித்தனர். 1949ல் யுத்தம் முடிந்த பிறகுகூட அந்தப் பாதையைப் பொது ஜனங்கள் உபயோகிக்கவில்லை.

இந்த வழியைத் தவிர காஷ்மீரத்துக்குப் போவதற்கு வேறு வழி கிடையாதா! இருக்கிறது. ஜம்முவிலிருந்து பனிகால் கணவாய்ப் பாதை வழியாகச் செல்லலாம். இந்தப் பாதையைக் குளிர்காலத்தில் நான்கு மாதங்களுக்கு

பகீரதன்



உபயோகப்படுத்த முடியாது! அங்கு பனி மூடிக் கிடக்கும். இந்த நாலு மாதங்களும் காஷ்மீரம் உலகத்தில் இருந்து தனியே எந்த விதமான தொடர்பும் இல்லாமல் பிரிந்து கிடக்க வேண்டியது தான்.

பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னால் ஸியால் கோட்டிலிருந்து ஜம்மு வரையில் ரயில் போக்கு இருந்தது. ஸியால்கோட் பாகிஸ்தானுக்குச் சேர்ந்ததும் அந்த ரயில் பாதையும் மக்களுக்கு உபயோகமில்லாமல் போய் விட்டது.

இந்தமாதிரி சூழ்நிலையில் காஷ்மீருக்குள் போவதற்கு எந்தவிதமான சாலை வசதியும் இல்லாத வேளையில் திடீரென்று யுத்தம் ஆரம்பமாயிற்று. நமது சைன்யங்கள் காஷ்மீருக்குள் போவதற்குப் பாதையே இல்லாமல் திண்டாடிப் போனார்கள். முதலில் நமது சைன்யங்கள் எல்லாம் டில்லியில் இருந்து விமான மூலமாகத்தான் ஸ்ரீநகர் போய்ச் சேர்ந்தார்கள். இப்படி எவ்வளவு சைன்யத்தை விமானம் மூலம் கொண்டு போய்ச் சேர்க்க முடியும்! ஆகவே பத்தான் கோட்டிலிருந்து ஜம்முவுக்குப் புதிதாகவே சாலை அமைத்தார்கள். சுமார் மூன்று கோடி ரூபாய் செலவில் பத்தான் கோட்டிலிருந்து ஜம்மு வரையில் எழுபது மைல் நீளம் காட்டிலும் மலையிலுமாக மிகப் பயங்கரமான இடத்தில் அருமையான சாலை அமைத்தார்கள்.



ஜம்முவில் நாலு நாள்

பத்தான்கோட் இன்றையதினம் பஞ்சாபின் எல்லையில் முக்கிய நகரமாகத் திகழ்வதற்குக் காரணம் காஷ்மீருக்குள் செல்லும் சாலை அங்கிருந்து ஆரம்பமாவதால்தான்.

அந்தப் புகழ்பெற்ற பத்தான்கோட் ரயிலடியைப் போய்ச் சேர்ந்ததும், ராணுவப் பொது ஜனத் தொடர்பு அதிகாரி மேஜர் I கபூரும் இன்னும் சில முக்கியமான ராணுவ அதிகாரிகளும் பத்திரிகாசிரியர்களை வரவேற்றனர். தங்கள் கையிலிருந்த சீட்டில் இருக்கும் பெயர் குறிப்புகளுடன் பத்திரிகாசிரியர்களைத் தனித் தனியே விசாரித்து அவர்களே தான் என்று ஊர்ஜிதம் செய்து கொண்டவுடன் எங்களைத் தங்களுடன் அழைத்துச் சென்றனர். இனி மேல் ஜம்முவில் இருக்கும் நாலு தினங்களும் ராணுவ அதிகாரிகளின் பாதுகாப்பில்தான் இருக்க வேண்டும். கபர்தார்!

மரண வாக்குமூலம்

பத்தான்கோட்டிலிருந்து நேரே ஜம்முவுக்குக் கிளம்பலாம் என்று முதலில் எண்ணினோம். இதற்குள் ஒரு பத்திரிகையாளர் "ஜம்முவைப் பார்ப்பதற்கு முன்னால் சிற்றுண்டியைப் பார்ப்போம்" என்றார்.

"இதோ சிற்றுண்டி தயாராக இருக்கிறது. எழுந்து வாருங்கள்" என்றார் மேஜர் கபூர்.

"சிற்றுண்டியைச் சாப்பிட்டு விட்டுக் கிளம்ப வேண்டியது தானே!"



"ஆமாம்" என்றார்.

காலைச் சிற்றுண்டி முடிந்ததும் ஒரு ராணுவ அதிகாரி பத்திரிகையாளர்கள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக வந்தார்.

"உங்கள் பெயர் என்ன?" என்றார்.

எங்கள் பெயர்களைச் சொன்னோம். ஒரு எழுத்துத் தவறாமல் எழுதிக் கொண்டார்.

பிறகு வயது, ஊர், விலாசம் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் கேட்டு எழுதிக் கொண்டார். கடைசியில் அந்தக் கடிதத்தில் கையெழுத்துப் போடச் சொன்னார். கையெழுத்துப் போடுவதற்கு முன்பு வேறு என்ன எழுதியிருக்கிறது என்று படித்துப் பார்த்துப் போடச் சொன்னார். படித்துப் பார்த்தோம்.

"இங்கிருந்து ஜம்முவில் ஜீப் வண்டியில் பிரயாணம் செய்யும் போது ஏதாவது அபாயம் ஏற்பட்டால் அதற்கு இந்திய சேனைகள் பொறுப்பு ஏற்காது" என்று எழுதியிருந்தது.

ஜீப்பில், அதிலும் ராணுவ வீரர்கள் ஓட்டும் ஜீப் வண்டிகளில் பிரயாணம் செய்வதற்கு என்ன பயம் என்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்தோம். ஆனால் ஜம்முவில் இமயமலை மீது ஜீப் வண்டியில் பிரயாணம் செய்யும் போதுதான் மரண வாக்குமூலம் எழுதி வாங்கிக் கொண்டது வெறும் சம்பிரதாயமல்ல என்று உணர்ந்து கொள்ள முடிந்தது. சாதாரணமாக மனிதர்களும், கோவேறு கழுதைகளும் பிரயாணம் செய்யும் ஒற்றையடிப் பாதையில் இரண்டு பக்கங்களிலும் இரண்டாயிரம் அடி மூவாயிரம் அடி ஆழமுள்ள பயங்கர இடங்களில் பிரயாணம் செய்ததை இப்பொழுது நினைத்தால்கூடக் குடல் தொண்டையில் வந்து அடைத்துக் கொள்கிறது. மயிர்க் கால்கள் குத்திட்டு நிற்கின்றன.

இதேபோலவே பூஞ்ச் நகரில் இருந்து ஸ்ரீநகருக்கு விமானம் மூலமாகப் பிரயாணம் செய்யும் போதும் ஒருதரம் மரணவாக்குமூலம் எழுதி வாங்கிக் கொண்டார்கள்.

இந்தச் சம்பிரதாயமான சடங்குகள் எல்லாம் முடிந்ததும் ஜம்முவுக்கு ஜீப் வண்டிகளில் பிரயாணமானோம். ஏழு ராணுவ ஜீப் வண்டிகள் ரயில் வண்டித் தொடர் போல் பத்திரிகையாளர்களைச் சுமந்து கொண்டு பத்தான்கோட் ஜம்மு சாலையில் ஓடிக்கொண்டிருந்தன. பத்தான்கோட் ஜம்மு சாலை வழவழப்பான கறுப்புச் சலவைக்கல் போட்டது போன்ற தார் போட்ட சாலை. ஒரு அப்பழுக்கும் அதில் காண முடியவில்லை. இரண்டுபுறத்திலும் ஒரே பசுமைக் காட்சி. இருபுறத்திலும் ஆங்காங்கு ராணுவ முகாம் கூடாரங்கள் தெரிந்து கொண்டிருந்தன.

சாலைக்கு ஓரமாக ரவி நதியிலிருந்து பிரிந்து வரும் கால்வாய் கம்பீரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதில் கிராமத்து மக்கள் குளித்துக் கொண்டும் துணி துவைத்துக் கொண்டும் இருந்ததைப் பார்த்த போது நாமும் அவர்களோடு சேர்ந்து ஆற்றில் குதித்து நீந்தி விளையாடலாமா என்று தோன்றியது. காரணம் காலை வேளையாக இருந்தாலும் அனல் காற்று அள்ளி வீசிக் கொண்டிருந்தது.

சாலைக்கும் கால்வாய்க்கும் இடையில் பத்தான் கோட்டிலிருந்து ஜம்முவுக்குப் புதிதாக ரயில் பாதை போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த வேலை மிகுந்த சுறுசுறுப்புடன் நடந்து கொண்டிருக்கிறது.

அதோ பத்தான் கோட்டில் ஒரு பஸ் போக்குவரத்து நிலையம் தெரிகிறது. ஜம்மு காஷ்மீர் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் காஷ்மீரம் போவதற்காகப் பிரயாணிகளை ஏற்றிக் காத்துக்கொண்டிருக்கின்றன. வழியில் ஆங்காங்கே நம்முடைய ஜீப் கார்கள் நிறுத்தப் படுகின்றன. அந்த அந்த இடத்தில் பரிசோதனை செய்கிறார்கள். இதற்கு 'செக் போஸ்ட்' என்று பெயர். இந்தப் பரிசோதனைகள் நடைபெறும்போதுதான் இன்னும் காஷ்மீர் பிரச்னை தீரவில்லை என்பது நினைவுக்கு வருகிறது.

இந்திய சர்க்கார் இங்கும் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். மதாபூர் என்ற கிராமத்தில் ரவி நதியைத் தேக்கி ஒரு அணை கட்டி, பல கால்வாய்கள் வெட்டிவிட்டிருக்கிறார்கள். அடாடா! அந்த அணையின் அழகை எப்படி வர்ணிப்பது! மிகுந்த கலை உணர்ச்சியுடன் கவனமாகக் கட்டியிருக்கிறார்கள். ஏதோ அணையைப் பார்க்கிறோம் என்ற உணர்ச்சியே ஏற்படவில்லை. எங்கோ சொப்பன உலகில் ஒரு பிருந்தாவனத்துக்கு மத்தியில் உள்ள பிரம்மாண்டமான பொற்றாமரைக் குளத்தைப் பார்ப்பதுபோலிருந்தது.

இந்த அணையையும், இன்னும் ஒரு பரிசோதனைச் சாவடியையும் தாண்டிய பிறகு ஜம்மு - காஷ்மீர் எல்லைக்குள் பிரவேசித்து விட்டோம். ஆமாம் ஜம்மு - காஷ்மீர் எல்லை என்று சாலையில் கொட்டை எழுத்தில் எழுதியிருக்கிறது. இதன் மூலமாகத்தான் தெரிந்து கொள்ள முடிகிறதே ஒழிய, பூமி அமைப்பைப் பார்த்தால் பஞ்சாபின் ஒரு பகுதியில் செல்லுவது போன்ற பிரமைதான் ஏற்படுகிறது.

இதோ லகன்பூர் வந்து விட்டோம். இங்கு ஜம்மு காஷ்மீர் சமஸ்தான சுங்கச் சாவடி இருக்கிறது. அதன் வாசலில் நம்முடைய கார்களை நிறுத்தினார்கள். நம் பெட்டி படுக்கைகள் எல்லாம் பரிசோதிக்கப்படுகின்றன. இதற்கு முன்பெல்லாம் அதாவது இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பெல்லாம் சுங்க வரியே உண்டு. நாம் எடுத்துச் செல்லும் சில சாமான்களுக்கும் கொண்டு வரும் சாமான்களுக்கும் நூறு பங்கு சுங்க வரி விதித்து வந்தார்கள். இப்பொழுது சுங்க வரி கிடையாது. ஆனால் பரிசோதனை மட்டும் நடைபெற்று வருகின்றது. சாதாரணமாகக் காஷ்மீர் செல்லுபவர்கள் ஜில்லா கலெக்டரிடமிருந்தும், ராணுவ அதிகாரியிடமிருந்தும் ஒரு உத்தரவுச் சீட்டு வாங்கி வர வேண்டும். அந்தச் சீட்டுகளையும் இங்கு பரிசோதனை செய்கிறார்கள்.


பயங்கரக் காட்டாறுகள்


பத்தான்கோட் சாலையில் செல்லும்போது இன்னும் சில விநோதங்களையும் காணலாம். இமயமலையின் மீதே சாலைகள் போட்டிருப்பதால் வழியில் பலப் பல காட்டாறுகள் குறுக்கிடுகின்றன. அந்தக் காட்டாறுகளில் தண்ணீரே இல்லை. ஒரு காட்டாற்றுக்கும் பாலம் இல்லை. ஆனால் ஆற்றின் இரு பகுதிகளிலும் இரும்புக் கம்பிகள் நட்டிருக்கிறார்கள். அதன் மேலே சிவப்பு வர்ணமும் அடியில்

ஆயிரத்து ஒன்று உபயோகங்கள் கொண்ட காபினெட்

இந்த ஆல்வின் காபினெட் எத்தனை விதங்களில் உதவும் என்பதை உங்களுக்கு உங்கள் சொந்த கற்பனைசக்திதான் விளக்க முடியும்! நாங்கள் சொல்வதெல்லாம் இந்த காபினெட் உறுதியானது. பூச்சி, புழு நெருங்க முடியாதது. அத்துடன் மிக்க பார்வையுடன் கூடியது என்பது தான். ஷெல்புகளுடனும் தனித்தனி அறைகளாகவும், பூட்டு, கண்ணாடி கதவுகளுடனும் சப்ளை செய்ய முடியும்.

* அளவு: 78"x36"x18"
தேவை போல் மாற்றக்கூடிய
நான்கு ஷெல்புகளுடன்: ரு 200/-





ஆல்வின்
யூடிலிடி
காபினெட்டுகள்

மிகவும் கவனித்து தயாரிக்கப்பட்டிருப்பதால் இந்த காபினெட்டுகள் ஸ்டேஷனரி சாமான்கள், தஸ்தாவேஜுகள், பைல்கள், புஸ்தகங்கள், ஆயுதங்கள், டின், கிளாஸ், பருத்தித் துணிகள், மற்றும் பலவித சாமான்கள் வைத்துக் கொள்வதற்கு மிக்க உகந்தது. யாதொரு ஆயுதமும் உபயோகிக்காமல் ஷெல்புகளை 2 அங்குலம் இடைவெளியுடன் அமைத்துக் கொள்ள சௌகரியமிருப்பதால் இந்த காபினெட்டின் மதிப்பு ஒருபடி உயர்ந்திருக்கிறது.

ஹைதராபாத்
ஆல்வின்
மெடல் ஒர்க்ஸ் லிமிடெட்

ஏஜண்டுகள்:

சென்னை, திருவாங்கூர்-கொச்சின், ஆந்திர ராஜ்யங்களுக்கு
அடிஸன் அண்டு கம்பெனி லிமிடெட்
158, மவுண்ட் ரோடு, சென்னை-2
எல்லா முக்கிய நகரங்களுக்கும் கிளைகள்

கூர்க் மற்றும் மைசூர் ராஜ்யத்திற்கு
அடிஸன் அண்டு கம்பெனி லிமிடெட்
செயின்ட் மார்க்ஸ் ரோடு, பெங்களூர்

வெள்ளை வர்ணமும் பூசப்பட்டிருக்கின்றன. வெள்ளை வர்ணம் பூசியிருக்கும் வரையில் தண்ணீர் சென்றால் அபாயமில்லை. கார்கள் போகலாம் என்று எழுதி வைத்திருக்கிறது.

இக் காட்டாற்றைப் பற்றி எங்கள் ஜீப்பை ஓட்டி வந்த ராணுவ அதிகாரி ஒரு நடுக்கிடக் கூடிய கதையைச் சொன்னார் :

ஒரு சமயம் அவரும் இன்னும் சிலரும் இந்தப் பாதையில் வண்டி ஓட்டிக் கொண்டு வந்தார்கள். திடீரென்று காட்டாற்றில் தண்ணீர் வந்துவிட்டது. முதலில் வெள்ளைக் கோடு தெரியும் வரையில் தண்ணீர் இருந்ததால் ஜீப் வண்டிகளை ஓட்டிக் கொண்டு சென்றார்கள். ஆற்றில் பாதிதூரம் செல்வதற்குள்ளாகவே தண்ணீர் திடுதிடென்று வந்து முன்னால் சென்ற இரண்டு ஜீப்பையும் அடித்துக் கொண்டு போய் விட்டது. அதில் இருந்த ராணுவ வீரர்கள், ராணுவ அதிகாரி ஆகியவர்களுடைய உடலை ஐந்து மைல்களுக்கு அப்பால் ஒரு வாரத்துக்குப் பிறகு கண்டு பிடித்தார்கள். ஜீப் வண்டி எங்கு சென்றது என்றே தெரியவில்லை. அப்படியானால் காட்டாற்றில் எந்த உருவத்தில் வெள்ளம் எப்படி வரும் என்று கற்பனை செய்து பாருங்கள்.

இந்தச் சம்பவத்தைச் சொல்லும் போது அந்த ராணுவ அதிகாரி உணர்ச்சி வசப்பட்டு விட்டார். அவர் கண்கள் கலங்கி விட்டன.

இதற்குப் பிறகு ஒவ்வொரு காட்டாறு குறுக்கிடும்போதும் எல்லாருக்கும் நடுக்கம் தான். என்ன செய்வது! வேறு வழியில்லையே!

ஒரு சில மைல்கள் பிரயாணம் செய்தவுடன் அந்தப் பக்கத்தின் தோற்றமே மாறி விடுகிறது! கண்ணுக் கெட்டிய தூரத்துக்குப் பார்க்கும் இடமெங்கும் ஒரே மலையும் காடும் தான்! மனிதர்கள் நடமாட்டமே இல்லை. ஒரு சிலர் தென்பட்டாலும் அவர்களும் குதிரையின்மீது வந்துகொண்டிருந்தார்கள்.

திடீர் திடீர் என்று சில கிராமங்களும் கண்ணில் படுகின்றன. ஆனால் அந்தக் கிராமங்களைப் பார்த்தால் திகைப்புத்தான் உண்டாகிறது! அவர்கள் எப்படி அந்த மலைக் காட்டில் தைரியமாக இருக்கிறார்கள் என்று வியக்கத் தோன்றுகிறது. வீடுகள் விசித்திரமாக இருக்கின்றன. காட்டுப் புற்களை எடுத்துத் தட்டி போல் முடைந்து அதையே சுவர் போல நாற்புறமும் வைத்திருக்கிறார்கள். அதைக் கொண்டே கூரையும் வேய்ந்திருக்கிறார்கள்.

அந்தக் கிராமத்து மக்கள் தரித்திரத்தின் சின்னங்களாகத் தோன்றினாலும் திடகாத்திரத்துடனும் செக்கச் செவேல் என்று பார்ப்பதற்கு அழகாகவும் காட்சி தருகிறார்கள்.

இதோ ஜம்மு !

மூன்று மணி நேர ஜீப் பிரயாணத்துக்குப் பின் பிரசித்தி பெற்ற தவி நதியின் பாலத்தைத் தாண்டியவுடன் "இதோ ஜம்மு வந்து விட்டது" என்றார் ராணுவ அதிகாரி.

எங்களுடைய பிரயாண ஆசை பூர்த்தியாகி விட்டதுபோல மகிழ்ந்தோம். யாத்திரை ஆரம்பமானதிலிருந்து ஜம்மு காஷ்மீரத்துக்கு எப்பொழுது போகப் போகிறோம் என்ற ஆவல் அடிஅடித்துக் கொண்டிருந்தது. அதிலும் ஜம்முவையும் காஷ்மீரத்தையும் பற்றிக் கேள்விப்பட்டிருந்த ஒரு அதிசயத்தை நினைத்து மேலும் ஆவல் அதிகமாயிருந்தது. "பாரத நாட்டில் பிறந்த ஒருவன் சாவதற்கு முன்னால் ஒருதரம் காஷ்மீரத்தைப் பார்த்து விட்டுத் தான் சாக வேண்டும்" என்று ஒரு பிரயாணப் புத்தகத்தில் எழுதி யிருந்ததைப் படித்திருந்தேன். அதனால் எல்லாம் என் ஆசை நிறைவேறி விட்டதை நினைத்து நினைத்து மகிழாமல் இருக்க முடியவில்லை.

யாத்திரைப் புத்தகத்தில் சொல்லி யிருந்தது ஓரளவு உண்மை என்பதை ஜம்முவில் போய் இறங்கியவுடனேயே தெரிந்து கொண்டோம். அனேகமாக எல்லாரும் அப்படியே மயங்கிக் கீழே விழுந்து விட்டார்கள். காரணம் வேறு ஒன்றுமில்லை. 120 டிகிரி வெயில்தான்.

வெயில் தாங்க முடியவில்லை என்று ஒரு பத்திரிகையாளர் குழாயிலிருந்து குளிர்ந்த தண்ணீரைக் குடிக்கலாம் என்று திருப்பினார். அடுத்த விநாடி "ஐயோ, போய்விட்டேன்" என்று பயங்கரமாக அலறினார்.

அடாடா! காஷ்மீரத்துக்குப் போகாமலே போய் விட்டாரே என்று அனுதாபப்படுவதற்குள் "என் வாழ்நாளில் இவ்வளவு சூடான தண்ணீரை நான் தொட்டுப் பார்த்ததில்லை" என்று குதித்தார்.

தொட்ட இடம் எல்லாம் சுட்டது. சூடு என்றால் உண்மையில் நெருப்புமேல் இருப்பது போல்தான் இருந்தது. ஜம்முவில் நாங்கள் அனுபவித்த வெயிலின் கொடுமையை வட இந்தியாவில் வேறு எங்குமே அனுபவிக்கவில்லை என்று துணிந்து சொல்லலாம்.

அறையில் உட்கார முடியாமல் சற்று வெளியில் வந்து நின்றோம். தூரத்தில் ஜம்முவின் தங்கக் கோயில் பன்னிரண்டு மணி வெயிலில் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தது. திரும்பிய இடம் எல்லாம் தங்கக் கோயில்கள் காட்சி அளித்தன. அந்தக் கோயில்களின் கோபுரத்தைப் பார்த்தவுடன் ஏதோ கங்கைக் கரையோரமாக உள்ள ஒரு புண்ணிய ஸ்தலத்துக்கு வந்துவிட்டது போன்ற மனப் பிரமை தான் ஏற்பட்டது!

இந்தச் சமயத்தில் லெப்டினன்ட் கர்னல் ஸ்ரீ வி. வி. தேவ் அவர்கள் அங்கு வந்து பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

வரும்பொழுதே, "வாருங்கள்! உங்களை எல்லாம்தான் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறோம்" என்று சொல்லிக்கொண்டே வந்தார்.

சட்டென்று கைக்கடிகாரத்தைப் பார்த்தார். "நாழியாகி விட்டது! கிளம்புங்கள் ராணுவ முகாமுக்குப் போகலாம்" என்று அவசரப்படுத்தினார்.

ராணுவ அதிகாரியல்லவா! மணி என்றால் மணிதான்! எல்லாம் அந்தந்த நேரத்தில் நடக்க வேண்டுமென்று,—இல்லை, நடத்தி வைக்க வேண்டும் என்ற கண்டிப்பு அவருடைய குரலில் தொனித்தது.

ஆகையால் இத்தனைநாள் இருந்ததுபோல் இனி இருக்க முடியாது. அது அது அந்த அந்த நேரத்தில் செய்தே முடிக்கப்படும். ஆகையால் உச்சிமீது சூரியனே இடிந்து விழுந்தாலும், ஊரே தீப்பற்றி எரிந்தாலும் ராணுவ முகாமுக்குப் பன்னிரண்டரை மணி வெயிலில் போயே ஆக வேண்டும். (தொடரும்)



ஆப்பக்கடை தாயம்மாளைத் தெரியாதவர்கள் இருக்கவே முடியாது. காலை ஆறு மணிக்குத் தன் கடையைத் திறந்து விடுவாள் தாயம்மாள். சூடான தோசையின் மணம் மூக்கைத் துளைக்கும். கடையைத் தாண்டிப் போகிறவர்கள் யாராக இருந்தாலும் அந்த வாசனைக்கு அடிமையாகி, 'ஆயா, ரெண்டு தோசை கொடு!' என்று வாங்கிச் சாப்பிடாமல் போக மாட்டார்கள். கடன் வியாபாரமே தாயம்மாளிடம் கிடையாது. 'கையிலே காசு, வாயிலே தோசை' என்பதுதான் அவளது பிரமாணம். 'தம்பி, காசை எடு!' என்று ரவுடி நல்லகண்ணுவைக் கூட மிரட்டும் துணிவு அவளுக்கு உண்டு.

தாயம்மாளுக்கு ஒரு பேத்தி இருக்கிறாள் என்பது ரொம்பப் பேருக்குத் தெரியாது. சமையற்கட்டை விட்டு அந்தப் பெண்ணை வெளியே வர விடமாட்டாள் தாயம்மாள். காரணம் கேட்டால், "காலம் கெட்டுக் கிடக்குது. நமக்கோ வியாபாரம். நாலுபேரு வந்து போற இடம். பொண்ணு நல்லா செப்பா யிருக்குது. எதுன்னுக்கும் பேச்சுக்கு இடம் வரக்கூடாது பாருங்க! இந்தப் பெண்ணை யாருக்காவது கட்டிக் குடுத்துட்டா என் கவலை விட்டுப் போகும்" என்பாள்.

காலை வேளை. வியாபார நெருக்கடியில் தாயம்மாள் யாரிடமும் அதிகமாகப் பேச மாட்டாள். மத்தியான ஓய்வு வேளையில்தான் கதை கதையாகப் பேசுவாள்.

என் வீட்டுக்கு எதிரில்தான் தாயம்மாளின் வீடு இருந்தது. கடையும் அதுவேதான். என் வீட்டுவாசலில் நின்றால் கடையில் நடப்பதெல்லாம் நன்றாகத் தெரியும்.

ரௌடி நல்லகண்ணு இந்தக் கடையில் ஆப்பம் வாங்கிச் சாப்பிடுவதை நான் அடிக்கடி கவனித்திருக்கிறேன். பாவம், கிழவியும் பெண்ணும் தனியாக இருக்கிறார்களே, இந்தப் பயலோ முரடனாயிற்றே, இவனால் ஏதும் வம்பு தும்பு ஏற்படாமலிருக்க வேண்டுமே என்ற கவலை எனக்கு. ஒரு நாள் இதைத் தாயம்மாவிடமே சொல்லி விட்டேன்.

"இன்னா பயம் சாமி! அந்தப் பயலு வாலை நீட்டினா ஒட்ட அறுத்துடுவேன். இந்தத் தாயம்மாவை என்னு நினைச்சிங்க!" என்று சவால் விட்டாள்.

ஊரில் சில இடங்களில் திருட்டுச் சாராயம் காய்ச்சுகிறவர்களைக் கண்டு பிடிப்பதற்காக விசேஷ போலீஸ் வந்திருக்கும் விஷயத்தைத் தாயம்மாள்தான் என்னிடம் சொன்னாள்.

"என்னமோ தாயம்மா! நீ ஜாக்கிரதையாக இரு. கண்ட பசங்களையெல்லாம் கடையில் வம்புபேச இடம் கொடுக்காதே!" என்று எச்சரித்தேன்.


ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணி இருக்கும். பத்திரிகை படித்துக் கொண்டிருந்தேன். தாயம்மாள் வந்தாள். தன்னுடன் பேத்தி பூவாயியையும் அழைத்துக் கொண்டு வந்தாள். "சாமி! இந்தப் பொண்ணுக்கு நீங்கதான் கொஞ்சம் புத்தி சொல்லணும்! புதிசா வந்திருக்கிற போலீஸ்காரத் தம்பி இதைக் கட்டிக்கிறேன்னு சொல்லுது. ரொம்ப நல்ல குணம். எனக்கும் அவனைப் பிடிச்சுப் போச்சு. ஆனா, இந்தப் பொண்ணுதான் மாட்டேங்குது. எனக்கோ வயசாயிப் போச்சு. சீக்கிரமா கண்ணாலம் கட்டிடலாம்னா, இது இப்படிச் சொல்லுது!" என்றாள்.

நான் பூவாயியிடம் பலவித புத்திமதிகள் கூறினேன். "எனக்கு இப்போ கண்ணாலமே வாணாம் சாமி!" என்று ஒரேயடியாக மறுத்துக் கூறி விட்டாள்.

மறுநாள் காலை ரௌடி நல்லகண்ணு ஆப்பம் சாப்பிட வந்தான் தாயம்மாளிடம். "ஆயா, அந்தப் போலீஸ் பயலுக்குப் பூவாயியைக் கட்டிக் கொடுத்தே—அப்புறம் நான் கெட்டவனா யிருப்பேன். வெட்டிப் போட்டுடுவேன். எனக்கு ஜெயிலு ஒண்ணும் புதிசு இல்லே!" என்று மிரட்டினான்.

"இந்தா, பாருங்க! கட்டிக்கப் போறவ நான்தானே! ஆயாகிட்டே என்ன பேச்சு!" என்று இடை மறித்தாள் பூவாயி.

நல்லகண்ணு போய் விட்டான். மறுநாள் காலை கிழவி கடையைத் திறக்கவே இல்லை. கடையின் வாசலில் ஒரே கும்பலாக இருந்தது. கிழவிக்கு உடம்பு சரியில்லை என்றார்கள்.



பெப்ருவரி 3ல் "சௌந்தர்ய நர்ஸரி"யின் வெள்ளி விழா சென்னையில் நடைபெற்றதல்லவா? அந்த விழாவில் விவசாய மந்திரி கனம் பக்தவத்சலம் பேசுவதையும், அவருக்கு அருகில் வெள்ளி விழாப் பேருரை நிகழ்த்திய திரு எஸ். கிருஷ்ணமூர்த்தி அமர்ந்திருப்பதையும், அவர்களுக்குப் பின்னால் நர்ஸரி ஸ்தாபகர் திரு பி. எஸ். சுவாமிநாதன் நிற்பதையும், அவருடைய குமாரர் திரு பி. எஸ். சந்திரமௌளி வரவேற்புரை நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம்.

"உடம்புக்கு ஒன்றுமில்லே, மனசுக்குத்தான் சாமி. இந்தப் பாவி மகள் அந்த நல்லகண்ணுப் பயலேத்தான் கட்டிக்கு வேன்னுது. நான் என்ன செய்யறது!" என்று கண்ணீர் விட்டுக் கதறினாள்.

"பூவாயியின் விருப்பப்படியே செய்து விடேன் தாயம்மா. அவளுக்கு நல்லகண்ணுவைத் தான் பிடித்திருக்கிறது. வேலப்பனைப் பிடிக்கவில்லே. அப்படித்தானே!" என்று சொல்லிப் பூவாயியைப் பார்த்தேன். அவள் ஒன்றுமே பதில் கூறவில்லே. பேசாமல், கடையைத் திறந்துவைத்து வியாபாரத்தை ஆரம்பித்தாள். போலீஸ்கார வேலப்பன் வந்தான். "ரெண்டு தோசை சட்னி" என்றான். பேசாமல் தோசையை அவன் முன் வைத்தாள் பூவாயி. வேலப்பன் தோசையைச் சாப்பிட ஆரம்பித்தான்..

"இதோ பார், பூவாயி! நான் கடைசித் தடவையா சொல்றேன். அந்த நல்லகண்ணுவை மறந்து விடு. அவன் திருட்டுச் சாராயம் காய்ச்சறான்னு போலீஸ்லே சந்தேகம் இருக்குது. அவன் என்றைக்காவது போலீஸ் கையிலே சிக்காமலிருக்க முடியாது. உனக்காகத்தான் சொல்றேன்."

"போதும், நிறுத்துங்க. அவரு சாராயம் காய்ச்சறாருன்னு நீங்க அவரைப் பிடிக்கிறது தானே! தெரியாம ஒன்னும் பேசாதீங்க."

"என்ன சொன்னே! நான் பொய்யா சொல்றேன்! பூவாயி! நான் உன்னேத்தான் கட்டிக்கப் போறேன்னு என் சிநேகிதனுங்க கிட்டே—ஏன்—இன்ஸ்பெக்டர் ஐயா கிட்டே கூடச் சொல்லிட்டேன். அவங்க என்ன நினைப்பாங்க என்னைப் பத்தி! நீ என்னைப் பார்க்கிற பார்வையும் பேசற பேச்சையும் பார்த்து உனக்கும் என் மேலே பிரியம்தான்னு னெனச்சுட்டேன். இப்பல்ல தெரியுது உன் வேசம்! உங்க ஆயாகூட 'என் பேத்தியை நீயே கட்டிக்க'ன்னு சொன்னுங்க. அதையெல்லாம் நான் நம்பிட்டேனே, நான்தான் பைத்தியக்காரன்."

"ஆமா, நான் உங்க கிட்டே சத்தியம் செய்து கொடுத்தேனு! இனிமே இந்த விஷயமா என் கிட்டே பேசாதீங்க" என்று ஆக்ரோஷத்துடன் சொன்னுள் பூவாயி.

காதலில் திடீரென்று ஏற்பட்ட ஏமாற்றம் வேலப்பனைப் பொறுமை இழக்கச் செய்து விட்டது. "அப்படியா சேதி!" என்று கூறிப் பூவாயியின் கன்னத்தில் 'பளீர்' என்று அறைந்து விட்டான். "ஐயோ, ஆத்தா!" என்று கூவியபடியே பூவாயி கீழே சாய்ந்தாள்.

"அட பாவி, என் குழந்தையைக் கொலை பண்ணிட்டியே!" என்று கிழவி பலமாக ஒப்பாரி வைத்தாள்.

"நல்லகண்ணுவை ஜெயிலிலே தள்ளல்லே, என் பேரு வேலப்பனில்லே" என்று சபதம் செய்து விட்டுப் போய்விட்டான்.

தாயம்மாள் நல்லகண்ணுவுக்கும் பூவாயிக்கும் திருமணம் நிச்சயித்து விட்டாள். என் வீட்டிலும் அதைச் சொன்னுள். இன்னும் ஒரு வாரத்தில் திருமணம் நடப்பதாக இருந்தது. நல்ல கண்ணுவும் "ஒழுங்காகக் கண்ணாலம் முடியட்டும். அந்த வேலப்பனைச் சீவிப் போட்டு விடுகிறேன்" என்று கருவிக் கொண்டிருந்தான்.

என் மாமனாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் தாம் குடும்பத்துடன் திருப்பதிக்குப் போவதாகவும், நானும் மனைவியுடன் வரவேண்டுமென்றும் எழுதியிருந்தார். இது தான் சரியான சமயம் என்று நான் மூட்டை கட்டினேன். பிரயாணச் செலவெல்லாம் என் மாமனார் தலையில் கட்டிவிடலாமல்லவா! என் மனைவிக்கும் ஒரே சந்தோஷம்.

மூட்டை முடிச்சுகளுடன் ரயில் ஏறி விட்டோம். எனக்கு மட்டும் பூவாயியைப் பற்றிய நினைவு அடிக்கடி வந்து கொண்டிருந்தது.

தாயம்மாள் கூட "கண்ணாலத்துக்கில்லாமெ போறீங்களே சாமி" என்று வருத்தப்பட்டாள். இரண்டு நாட்கள் திருப்பதியில் தங்கி ஏழுமலையானை ஆனந்தமாகத் தரிசனம் செய்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தோம். பஸ் வசதியாகக் கிடைத்ததால் அதிலேயே எல்லோரும் ஏறிக் கொண்டோம். பஸ்ஸில் உட்கார்ந்தவாறு தற்செயலாகத் திரும்பிப் பார்த்தேன். எனக்குப் பின்னால் பூவாயி உட்கார்ந்திருந்தாள். என்ன அதிசயம்! பக்கத்தில் நல்லகண்ணுவுக்குப் பதிலாகப் போலீஸ்கார வேலப்பன் சிரித்த முகத்துடன் உட்கார்ந்திருந்தான். எனக்கு என் கண்கள்மீதே சந்தேகம் வந்துவிட்டது. அருகிலிருந்த தாயம்மாள் தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்தவாறு, "ஐயாவுக்கு நம்ப முடி

யிலே போயிருக்கிறது. தம்பீ, வேலப்பா! அந்தக் கதையை ஐயாவுக்குச் சொல்லு!" என்று கூறினாள்.

"வணக்கம் ஐயா. நேத்துத்தான் திருப்பதியிலே கல்யாணம் நடத்துச்சு. எனக்கு 'ஹெட் கான்ஸ்டேபிள்' ஆக வேலையும் கிடைக்கப் போவுதுங்க. எல்லாம் பூவாயியாலேதான். கெட்டிக்காரப் பொண்ணு; கடைசி வரையிலே என்னைக் கட்டிக்க மாட்டேன்னுது. நானும் மொறப்பா இருந்துட்டேன். ஒரு நாளு ஒரு சின்னப் பையன் ஒரு கடிதாசு கொணர்ந்து கொடுத்தான். அதுதான் என் வாழ்வையே மாத்திடிச்சு. அதை இப்போது கூடப் பத்திரமா வைச்சிருக்கேன். இதோ பாருங்க!" என்று தன் மணி பர்ஸிலிருந்து மிகவும் ஜாக்கிரதையாக ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்தான். அதில் கோணலும் மாணலுமாக இப்படி எழுதியிருந்தது.

"பூவாயி எழுதிக் கொண்டது. இதைப் பார்த்தவுடனே, கம்புத் தோட்டத்துக்கு அப்பாலே ஒரு பாழடைஞ்ச மண்டபம் இருக்குது. அதுக்கும் பின்னாலே ஒரு குடிசை. அந்த இடத்திலேதான் நல்லகண்ணு சாராயம் காய்ச்சறான். இதை அவனே என்கிட்டே சொன்னான். அன்னிக்கு நீங்க கோபத்திலே அவனை 'ஜெயில்லே தள்ளிடுவேன்'னு சொன்னதைச் சொன்னேன். அவன் நல்லா குடிச்சிருந்தான். 'என்னைப் புடிக்க அவுங்க முப்பாட்டன் வந்தாலும் முடியாது'ன்னு சொல்லித் தவறுதலாக இந்த இடத்தையும் சொல்லி விட்டான். என்னை மன்னிச்சுடுங்க. எனக்கு எப்பவும் உங்ககிட்டத்தான் ஆசை.

நீங்க இந்தச் சாராயக் கேசுக்காகப் பாடு படறீங்கன்னு தெரிஞ்சுதான் இந்த நாடகம் நடிச்சேன். நான் நெனைச்சது போலவே நடந்திடுச்சு. உடனே புறப்படுங்க. சாக்கிரதை."

கடிதத்தைப் படித்து விட்டுப் பூவாயியைப் பார்த்தேன். அவள் வெட்கத்தினால் தலை குனிந்து கொண்டாள்.

"அந்த நல்லகண்ணுவையும் அவன் ஆளுங்க நாலு பேரையும் பிடிச்சுட்டேனுங்க. இந்தக் கேசு புடிச்சதிலே இன்ஸ்பெக்டர் ஐயாவுக்கு ரொம்ப சந்தோஷம். அவருதான் எனக்கு மேல் பதவிக்குச் சிபாரிசு செய்தாரு" என்றான் வேலப்பன் மகிழ்ச்சியுடன்.

"கடைசியிலே என் வயித்திலே பால் வார்த்துதுங்க இந்தப் பொண்ணு. எல்லாம் கடவுள் கிருபைங்க. இனிமே ஊரை விட்டே போயிடலாம். தோசைக்கடை நடத்த வேண்டாம்னு தம்பி சொல்லுது" என்று பெருமைப் பட்டுக் கொண்டாள் தாயம்மாள்.

பஸ் ஓரிடத்தில் நின்றது. நாங்கள் இறங்கினோம். பூவாயியிடமும் வேலப்பனிடமும் விடைபெற்றுக் கொண்டோம்.

"நானும் சாமியோட பட்டணத்துக்கு வந்துடறேன்" என்று பஸ்ஸிலிருந்து இறங்கினாள் தாயம்மாள்.

"நீ பேத்தியுடன் ஊருக்குப் போகவில்லையா, தாயம்மா! ஏன் ஊருக்குத் திரும்பறே!" என்று கேட்டாள் என் மனைவி.

"நான் எதுக்கம்மா! குழந்தைங்க நல்லா யிருக்கணும். எனக்கு நம்ப தோசைக்கடை தான் சரி. என் வாடிக்கைக் காரங்களெல்லாம் நாலு நாளா தோசை இல்லாமே தவிப்பாங்க" என்று சொல்லி விட்டாள்!

சிவன் கீர்த்தனைகள்

ஸ்வர அமைப்பு: செம்மங்குடி சீனிவாச ஐயர்

கீர்த்தனம் 22 — ராகம் தன்யாசி — ஆதி தாளம்

பல்லவி

வாணி அருள்புரிவாய் அணிகுல
வேணி மலரயன் ராணி உயர்கலை (வாணி)

அனுபல்லவி

பேணிப்புகழும் பாவாணர்க்கருளும் கக
பாணி சுரர்தொழும் புராணி சரணம் கலை (வாணி)

சரணம்

வீணா புஸ்தக தாரிணி பூரணி
வித்யாரூபிணி துக்க நிவாரணி
காணேன் உனையலாதோர் துணை பாரதி
கருணாகரி எம்மைக் காத்தருள் நீகதி (வாணி)

தன்யாசி ராகம் 8-வது மேளமாகிற ஹனுமத் தோடியில் பிறந்த உபாங்க ராகமாகும். ஔடவ ஸம்பூர்ணம். ரக்தி ராகம். சுபகரமான ராகம். காலை வேளையில் பாடுவதற்கு மிகவும் ஏற்ற ராகம். ஆரோஹணத்தில் ரிஷப தைவத வர்ஜம்.

ஆரோஹணம்: ஸ கா ம ப நி ஸ்
அவரோஹணம்: ஸ் நி த ப ம க ரி ஸ

இதில் வரும் ஸ்வர ஸ்தானங்கள் சுத்த ரிஷபம், ஸாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், சுத்த தைவதம், கைசிகி நிஷாதம் இவைகளாகும். நி ஸ / கா ம பா — த ப \ கா ரி ஸா — ரி ஸ் \ தா ப \ கா ரி ஸா — ப ஸ் \ தா ப — ப நி ப — ஸ்ரிநிஸ்பநிமப — இந்தப் பிரயோகங்கள் ராகச் சாயையை நன்கு விளக்கக் கூடியவை. மற்றவை லக்ஷ்யத்தில் கேட்டுப் பாடவேண்டும்.

(தன்யாசி ராகத்தை ஸ்ரீ வேங்கடமகி யவர்கள் 20-வது மேளமான (நாரீ ரீதி கௌளை யில்) நட பைரவியில் ஜன்யமான பாஷாங்க ராகமாகக் கூறியுள்ளார். அது அனுபவத்திற்கு ஒத்ததாக இல்லை.)

பல்லவி — 1 களை

1 ஸா ; நிதா, பா ; ம பா பக மா | பா ; ; ; | ; ; , ப நி ||
வா ணி - - அருள் பு - ரி வாய் க லை

2 ஸா , நி ரி ஸ் நி த பா ம த ப மக மா | பா ; ; ; | ; க மா ப நி ||
வா - ணி - - - - அ ரு ள் பு - ரி வாய் உ யர் க லை

3 ஸ் க் ரி ஸ் நி ஸ் தா பா ஸ்நிதபா மக மா | பா ; ; ; | ; க மா ப நி ||
வா - - - - - - ணி - அ-ருள்- பு - ரி வாய் அ ணி கு ல

ஸா,ரி ஸா,ரி நி ஸா , ; க மா ப நி | ரி ஸ் நி த பா ; | ; . ப நி ப நி ||
வே - - . ணி - ம ல ர யன் ரா - - - ணி உ யர் க லை

ஸ்க் ரி ஸ் நிதா, பா ; ம பா பக மா | பா ; ; ; | ; ; ; ; ||
வா- - - ணி - - அ ருள் பு - ரி வாய்

அனுபல்லவி

1 பா ; ப க மா பா பா நிபா, , நி | ஸா , க் ரி ரி ரி நி | ஸா ஸா நி ஸ் க்ரிஸ் ||
பே ணி - ப்பு க ழும் பா - வா - ண - ர்க்க - ரு ளும் அம்- பா- -

2 நிதா, பா ப க மா பா பா நிபா, , நி | ஸா . க் ரி ரி ரி நி | ஸா ஸா பா நி ||
பே- - - ணி - ப்பு க ழும் பா - - வா - ண - ர்க்க- ரு ளும் க க

ஸா ஸாம்க் க் ரி ஸா ஸ் நி தா பா நி | நி ஸ் நிதா, பா மா,த | பமகா மா , ப நி ||
பா - - - ணி - சு ர ர்- தொழும் பு ரா - - - ணி ச - ர - - ணம் க லை

நி க் ரி,ஸ் நி,ஸ்நி,ரி ஸ்நிதா பா ம பா க மா | பா ; ; ; | ; ; ; ; ||
வா- - - ணி - - - - - - - - அருள் பு ரி வாய்

சரணம்

1 கா மா பா ; மா,ப ம க ரி ஸா | நி ஸா கா மா | பா ; பா பா ||
வீ - ணா பு - - - ஸ்த க தா - ரி ணி பூ ர ணி

2 ; க மா பா தப ம க ப ம க ரி ஸா | ; நி ஸா க மா | பா ; பா பா ||
வீ - ணா - - பு - - - - ஸ்த க தா - ரி ணி பூ ர ணி

; க மா பா , பா நி ஸ் நிதா, பா | ; பா நி ப நி | ஸா ; ஸா ஸா ||
வி - - த்யா ரு - - பி - ணி | து க்க - நி | வா ர ணி

; பா க மா , பா நி ஸா ஸ் நி | க்ரா , ரீ ரீ ஸா | ஸா ரீ நி ஸா ஸா ||
கா - ணென் உ ன்ன ய லா - | தோ - ர் து ன்ன | பா - - ர தி

ப ம த ப ப க மா பா நி ஸா ஸா | ஸ் க் ம்ாப்ம் க் ரி ஸா | ஸாக்ரி ரீ ,நி ஸா ஸா ||
கா - - - ணே - - ன் உ ன்ன ய லா - | தோ - - - - - ர் து ன்ன | பா - - - - ர தி

/ரீ ஸா ஸா ஸ் ரி \ நி நி ஸ் \ பா ப நி | ப நி ஸாரிஸ் நி த பா | ப க மா பா நி ப ||
க ரு ணா - - க ரி - எம்மை - | க்கா - - - - - - த்தருள் | நீ - - க தி -

நி ஸ் க்ரீஸ் ஸா ஸ் ரி நி நி ஸ் பா ப நி | ப நி ஸாரிஸ் நி த பா | ப க மா பா நி ||
க - ரு - - ணா - - க ரி - எம்மை - | க்கா - - - - - த்தருள் | நீ - - க தி

ஸ் க் ரி ஸ் நி ஸ் தா பா
வா - - - ணீ - - - அருள் புரிவாய் }

வட்ட மேஜை

ராஜாஜியின் கதைகள்

அருமைக் குழந்தைகளே !

புது வருஷம் 1956 பிறந்தது. அன்றைய தினத்தை உங்கள் தாத்தா ராஜாஜி அவர்கள் மிகவும் அருமையான ஒரு கதையை வருஷம் பூராவும், ஏன், ஆயுள் முழுதுமே புத்தி கொடுக்கக் கூடிய கதையாக - எழுதி, ஆரம்பித்திருக்கிருர். அதுதான் 'கள் வந்த கதை.'

முன் காலத்தில் ஓலைகளில் நல்ல நல்ல நூல்களை ரிஷிகள் எழுதி வந்தார்கள். பிறகு படித்தவர்கள் கர்வம் மண்டைக்கு ஏறிச் சண்டை போட ஆரம்பித்தார்கள். அதன் விளைவு லக்ஷ்மி தேவி, சரஸ்வதி தேவி இருவர்களும் சேர்ந்து சாபம் கொடுக்கவே, அதே பனைமரத்தில் ஜனங்கள் கள்ளை இறக்க ஆரம்பித்தார்கள். குடித்துப் போதையை உண்டாக்கிக் கொண்டு, கொலை மூதற் கொண்டு புரிந்து குடும்பத்துக்கே நாசத்தைத் தேடினுர்கள். என்ன செய்கை !

இயற்கை அன்னை அணுவில் அபார சக்தியை வைத்திருக்கிருள். கடவுளுடைய சங்கற்பம் பஞ்சபூதப் பொருள்களாக வடிவம் எடுத்து நிற்கிறது. அதுவே அணுவிலுள்ள சக்தி. அந்த சக்தியைக் கொண்டு அணுகுண்டு தயாரித்து உலக நாசத்துக்காக ஏற்பாடு செய்கிருர்கள். தேவிகள் கொடுத்த சாபம் இன்னும் நீங்கவில்லை என்றுதான் தோன்றுகிறது.

நமக்குள்ளே இரு சக்திகள்போன்ற இரண்டு குணங்கள். நற்குணம் — துர்க்குணம் — இருக்கின்றன. நாம்தான் கெட்ட குணத்தை அடக்கி நற்குணத்தை ஓங்கச் செய்து வாழ்வைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மரங்கள் வருத்தப்படுவதைத் தாத்தா எழுதியிருப்பதைப் படித்தால் எத்தகைய கொடிய குடிகாரன்கூடத் திருந்த வேண்டும். 'கள் வந்த கதையைப் படிக்கப் படிக்க புத்தி விரிவாகும்' என்று குளத்தங்கரைப் பிள்ளையார் நம்புகிருர்!

அடுத்தது 'கல் மனம்'. 'கல் மனம்' என்ற சொல் அடிக்கடி எல்லாருடைய காதிலும் விழுகின்றது. இரங்காத மனதைத்தான் 'கல் மனம்' என்று சொல்லுகிறேம்.

தாத்தா கதையில் கல்லான செக்கின் மனம் கூட நல்ல உபதேசங்களைக் கேட்டுக் கரைந்துவிடுகிறது! அது புத்தி சொல்லி மனிதர்களின் மனதை மாறச்செய்ய வேண்டியிருக்கிறது!

வாஸ்தவம். மனிதர்கள் சில சமயங்களில் பாறைக்கல் மனம் படைத்தவர்களாக இருப்பதைப் பார்த்துக்கொண்டுதானே வருகிறேம்.

குழந்தைகளே! நீங்கள் கதையில் சுவாமியார் சொன்ன வாக்கைப் புரிந்துகொண்டு ஜீவகாருண்யத்துடன் நடப்பீர்களென்று உங்கள் தாத்தா நம்புகிருர்.

குளத்தில் அழகாய் நீந்தும் வாத்துக்களின் மேலும், தெருவில் திரியும் நாய்களின் மேலும் கல்லைவிட்டெறிந்து விளையாட வேண்டும்போல் தோன்றும். பட்டுப் பூச்சியையும், தட்டான் பூச்சியையும் பிடித்து வதை செய்யத் தோன்றும். சிட்டுக் குருவிகளைக் கல்லால் குறிபார்த்து அடித்து, குறி தவறுதலைப் பற்றிச் சந்தோஷிக்கத் தோன்றும். ஆனல் அதெல்லாம் செய்யக் கூடாது. ஜீவஹிம்சை செய்யாமல் இருந்தால் உங்கள் உபாத்தியாயர்களுடைய 'கல் மனமும்' கரைந்து உங்களுக்கு நிறைய 'மார்க்கு'கள் போடுவார்கள்.

தை மாதமும் பிறந்தது. எல்லோர் இல்லத்திலும் பாலும் பொங்கி மகிழ்ச்சியினுல் மனமும் பொங்கிற்று அல்லவா!

'பொங்கற் பரிசு' என்னும் கதையில் தாத்தா அன்பைத்தான் பரிசுகளில் ஒப்பற்ற பரிசாக எடுத்துக் காட்டியிருக்கிருர்.


குப்புவுக்கும் அல்லிக்கும் ஏற்பட்ட அன்பு தான் எவ்வளவு தூய்மையானது! ரூபாயில் அளவிட முடியாது. மன ஒற்றுமையைத் தூக்கிக் காட்டுகிறது.


குப்பு அன்பைக் கொட்டிக் கடிதம் எழுதினுன். அதை எவ்வளவு தடவை வாசித்தாலும் அல்லிக்குத் திருப்தியில்லை. திரும்பத் திரும்ப வாசிக்க வேண்டும் போல் இருந்தது! எல்லாப் பரிசுகளையும் விட அன்புதான் உயர்வு என்று தாத்தா கருதுகிருர்.

பிரதி வியாழக்கிழமை இரவும், தவறினுல் சனிக்கிழமை மத்தியானமும் தாத்தாவின் குரலிலேயே அகில இந்திய ரேடியோவில் அவர் கதையைக் கேட்கலாம்.

சென்னை
26—1—56

சுந்தரம்






கந்தையானாலும் சரி, காசிப்பட்டானாலும் சரி, கசக்கியுடுத்துவதே தமிழ் நாட்டு மரபு. காவேரி பார் சோப் எல்லாவித துணிகளுக்கும் ஏற்றது. அதன் நுரை ஆடைகளின் நூலிழைகளிடையே ஊடுருவிப் பாய்ந்து, அழுக்கை அகற்றி, வெள்ளைத் துணிகளை மேலும் வெண்மையாக்கவும், வர்ண ஆடைகளை மேலும் பிரகாசமாகவும் செய்கிறது.

ஆடைகளுக்கு ஆயுளை அளிப்பது

காவேரி
பார் சோப்



மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. :: சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்

ஆற்றங் கரையினிலே



பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை

58. திருவையாறு

வட நாட்டிலே பஞ்ச நதி பாயும் பழனத் திருநாடு 'பஞ்சாப்' என்று பெயர் பெற்றது. அவ்வண்ணமே ஐந்து ஆறுகள் அடுத்தடுத்துச் செல்லும் தென்னாட்டில் அமைந்த தலம் ஒன்று திருஐயாறு என்று அழைக்கப் பெற்றது. வடநாட்டில் உள்ள பஞ்சாப்பையும் தென்னாட்டில் உள்ள திருவையாற்றையும் பஞ்சநதம் என்னும் பெயரால் வழங்குவர் வடமொழியாளர்.

காவிரித்தாயின் திருக்கரத்தால் அணைக்கப் பெற்ற ஐயாற்றின் அழகினைக் கண்டார் திருநாவுக்கரசர்; ஆனந்தம் கொண்டார்.

"முத்திசையும் புனற்பொன்னி
மொய்பவளம் கொழித்துந்தப்
பத்தர்பலர் நீர்மூழ்கிப்
பலகாலும் பணிந்தேத்த
எத்திசையும் வானவர்கள்
எம்பெருமான் என இறைஞ்சும்
அத்திசையாம் ஐயாறர்க்கு
ஆளாய்நான் உய்ந்தேனே"

(பொன்னி - காவேரி; இறைஞ்சும் - வணங்கும்; ஆளாய் - அடியவனாய்)

என்று அகமகிழ்ந்து பாடினார். திருவையாற்றின் முத்திசையிலும் காவிரியின் கிளையாறுகள் பரந்து பாயும் அழகும், அவற்றில் மாசற நீராடி ஈசனார் கோவிலிற் போந்து வழிபடும் அடியார் கோலமும் திருநாவுக்கரசரது தேவாரத்திலே தெள்ளிதின் விளங்குகின்றன.

காவேரியாற்றிலே இறைவனுக்குரிய துறைகள் பல உண்டு. அத்துறைகளில் அமைந்த கோவில்களும் கோட்டங்களும் பலவாகும். ஆயினும், காவிரிக் கோட்டம் என்று தேவாரத்தில் சிறப்பிக்கப்பட்ட கோயில் திருவையாற்றுக் கோயில் ஒன்றே. "காவிரிக் கோட்டத்து ஐயாறுடைய அடிகளோ" என்று திருவையாற்றில் அமர்ந்த பெருமானைக் கதறி அழைத்தார் ஒரு திருத்தொண்டர்.

"விதிர்த்து மேகம் மழைபொழிய
வெள்ளம் பரந்து நுரைசிதறி
அதிர்க்கும்திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறுடைய அடிகளோ"

(விதிர்த்து - சிதறி; அதிர்க்கும் - முழங்கும்)

என்று அவர் ஓலமிட்டார். காவிரி நாட்டிலே கடுமழை பெய்தது; ஆற்றிலே புது வெள்ளம் பொங்கி எழுந்தது. இரு கரையிலும் நுரை செறிந்தது. கலங்கிச் சென்ற காவிரியின் இழுப்பும் சுழிப்பும் கண்டு

இரு கரையிலும் நின்ற மாந்தர் மனங் கலங்கினர். அப்போது அங்கு வந்து சேர்ந்தார் சுந்தரமூர்த்தி. ஆற்றைக் கடந்து திருவையாற்றை அடைவதற்கு வழி யொன்றும் காணாது "ஐயாறுடைய இறைவா! ஓலம்" என்று அரற்றினர். அந்நிலையில் வெள்ளம் வடிந்தது; அடியார் உள்ளம் மகிழ்ந்தது; காவிரிக் கோட்டத்தைச் சுற்றி வந்து கையாரத் தொழுதார்; நாவாரப் பாடினர் சுந்தரர்.

திருவையாற்றில் அருட்பெருஞ் சோதியாகக் காட்சி யளித்தார் ஈசன்.

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையா றகலாத செம்பொன் சோதீ"

என்று அவ்வொளியைத் தொழுதார் திருநாவுக்கரசர்.

திருவையாற்றுக் கோவிலைச் சூழ்ந்த செழுஞ் சோலையில் கலையும் பிணையும் களித்துத் திரியும்; களிறும் பிடியும் காதல் புரியும்; கடுவனும் மந்தியும் கொஞ்சிக் குலாவும். இத்தகைய இனிய சூழ்நிலையில் நெஞ்சாரத் தொழுதேத்தும் அடியார்க்கு அஞ்சேல் என்று அருள் புரியும் இறைவன் அமர்ந்திருக்கும் அழகிய கோலத்தைக்கண்டு நினைத்தார் திருஞானசம்பந்தர்.

"புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்று
அருள்செய்வான் அமரும் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்கும் திருவையாறே"

(ஐ - கபம்; முழவு-மத்தளம்; முகில்-மேகம்)

என்று பொன்மொழிகளால் போற்றினர். பிறவிப் பெருங் கடலில் விழுந்து வருந்தும் உயிர்களைக் கரையேற்ற வல்லவன் இறைவன் ஒருவனே! தஞ்சம் அடைந்தோரைத் தாங்கும் தகைமை வாய்ந்த தலைவன் ஒருவனே! போக்கற்றவர்க்குப் புகலிடமாய் அமைந்த புண்ணியமூர்த்தி ஒருவனே! இறுதிக் காலத்தில் பொறி கலங்கி, நெறி மயங்கி, அறிவழிந்து ஆவி அலமரும் பொழுது அபயம் அளிக்கவல்ல பெருமான் ஒருவனே! அவன் திருவையாற்றுக் காவிரிக் கோட்டத்தில் அமர்ந்துள்ளான் என்று அறிவுறுத்துகின்றார் திருஞானசம்பந்தர்.

அக்கோயிலிற் போந்து அகமுருகிப் பாடினர் பலர். ஆலயத்தைச் சுற்றி நடனமாடினர் நங்கையர். தானம் எழுந்தது! மத்தளம் அதிர்ந்தது. அம்முழக்கத்தைக் கேட்ட சில மட மந்திகள் இடியோசை என்று எண்ணி மரத்தின் மேல் விரைந்து ஏறின; மழை வருமோ என்று வானத்தைப் பார்த்தன. இவ்வாறு அலமந்த சில மந்தியையும் ஐயாற்றுப் பாட்டிலே காட்டி அடியாரை மகிழ்விக்கின்றார் திருஞான சம்பந்தர்.

திருவையாற்றுக்கு அருகே உள்ள தஞ்சையம்பதி, இராச ராசன் காலத்தில் சோழ நாட்டின் தலைநகர் ஆயிற்று. அதனால் பாடல் பெற்ற திருவையாறு பீடும் பெருமையும் உற்றது. பட்டத்தரசியாகிய உலோகமாதேவி அங்கே ஒரு திருக்கோயில்கட்டினாள். காவிரிக் கோட்டத்தின் வடக்குத் திருச் சுற்றில் அமைந்த அவ்வாலயம் 'உலோகமாதேவீச்சரம்' என்னும் பெயர் பெற்றது. இக்காலத்தில் உத்தர கைலாசம் என்று வழங்கும் கோயில் அதுவே.

அறம் வளரும் திருவையாற்றிலே அன்ன சத்திரம் பல உண்டு. அவற்றுள் மிகச் சிறந்தது சரபோசி மன்னன் நிறுவிய அறச் சாலையாகும். ஆற்றங்கரையில் அழகாக வீற்றிருக்கின்றது அரண்மனைபோன்ற அவ்வறச் சாலை. இப்போது நாட்டு மொழி பயிலும் மாணவர்களுக்கு உண்டியும் உறையுளும் தந்து உதவுகின்றது அந்நிலையம்.

'காசிக்கு வீசம் அதிகம்' என்று கருதப்படும் திருவையாற்றிலே பல்லாண்டு வாழ்ந்தார் திக்கெலாம் புகழுறும் தியாக ஐயர்.

அவர் புகழுடம்பு பெற்ற ஐயாற்றில் ஆண்டுதோறும் இன்னிசை வெள்ளம் பொங்கிப் பெருகுகின்றது. இத்தகைய ஐயாற்றை நெஞ்சால் நினை; வாயால் அழை என்று உருக்கமாகப் பாடினர் ஐயடிகள் காடவர்கோன்.

"குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி ஓய்ந்து நுரைத்தேறி - வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை"

என்பது அவர் அருளிய பொன்னுரை.

ஒரு திருத்தம்

கருவூர் என்ற 56-வது கட்டுரையில் வரும் "'உறையூரிற் பெரிது கருவூர்' என்று அக் கடிநகரைப் பாடினர் திருமங்கை மன்னன்" என்று வரும் வாக்கியம் "'உறையூரிற்......' பாடினர் பழைய உரையாசிரியர்" என்று இருக்க வேண்டும்.

ரகுபதி  ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

14. இயற்கை கடவுள் நியதியே

கடவுளினுடைய சட்டதிட்டங்கள் நமக்கு இன்னும் முற்றிலும் தெரியாது. அவை இயங்கும் விதமும் நாம் அறியோம். மேம்பட்ட பௌதிக விஞ்ஞானிகள் கண்டதும், சாஸ்திர தத்துவார்த்தம் கற்ற பண்டிதர்களினுடைய அறிவும் ஆண்டவனுடைய நியதிகளின் அடங்கலுக்கு ஒரு துகள் மாத்திரமே ஆகும். கடவுளை நான் என்னைப் பெற்ற தகப்பனைப் போல் ஒரு பூத உடல் கொண்டவனாக பாவிக்கா விட்டாலும் அதைவிட மிஞ்சிய அபார சம்பந்தம் கொண்டவனாகக் கருதுகிறேன். என்னுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு சிறு விஷயத்திலும் அவன் என்னை ஆட்படுத்துகிறான். ஒரு இலையுங்கூட அவன் ஆணையின்றி அசைவதில்லை என்பது என்னுடைய நிச்சயமான கருத்து. வெறும் உபசாரப் பேச்சு அல்ல. நான் விடும் ஒவ்வொரு மூச்சும் அவன் சம்மதத்தைப் பொறுத்து நிற்கிறது.

[ஹரிஜன் 16-2-34]

அவன் வேறு அவன் நியதி வேறு அல்ல. நியதியே கடவுள். ஆண்டவனுக்கு நாம் கூறும் குணங்கள் வெறும் இலக்கணங்கள் அல்ல. இலக்கணமே அவன். அவனே இலக்கணம். அவனே சத்தியம். அன்பு. நியதி - இன்னும் நாம் தேடிச் சொல்லக்கூடிய கோடிக் கணக்கான தத்துவங்களும்.

இயற்கை விதிகள் மாறாதவை. அவற்றுக்குப் புறம்பாக எதுவும் நடைபெறாது. அந்த விதிகளுக்கு விலக்கு என்பது இல்லை. இயற்கை விதிகளுக்கு விலக்காக நடைபெறுவதுதான் அற்புதம் என்றால் அவ்வித அற்புதங்கள் நடக்க இடம் இல்லை. அவனுக்குக் காலம் என்பது இல்லை. அவனுடைய காலம் முதலும், நடுவும், முடிவும் அளவும் அற்றது. நமக்குத் தான் இறந்த காலம், நிகழ் காலம், வருங் காலம் என்கிற கால பேதம். நாம் வாழும் நூறு ஆண்டுகள் அனந்த காலத்தில் எம்மாத்திரம்! ஒரு தூசித் துகளுக்கும் ஆகாது. [ஹரிஜன் 17-4-37]

தான் செய்திருக்கும் சட்டங்களை மாற்றும் உரிமையை ஆண்டவன் வைத்துக் கொள்ளவில்லை. அப்படி மாற்ற வேண்டிய அவசியம் அவனுக்கு என்னத்திற்கு? அனந்த வீரியமும் அனந்த அறிவும் பெற்றவன் அல்லவோ அவன்! கழிந்ததும், நிகழ்வதும், வருவதும் அனைத்துமே அவனுக்கு ஒரு சிரமமும் இன்றி ஒரே சமயத்தில் அவன் காண்பான் அல்லவா. ஆனபடியால் அவன் ஏன் எதையும் மாற்ற வேண்டும்? ஏன் எதையும் புனராலோசனை செய்ய வேண்டும்? திருத்தவோ மாற்றவோ சீர்ப்படுத்தவோ அவனுக்கு அவசியமில்லை.

[யங் இந்தியா 25—11—26]

பூவுலகில் நாம் வாழும் வாழ்க்கை மாதர்கள் அணிகிற உடைந்து போகும் கண்ணாடி வளையல்கள் மாதிரி, நிலையற்றது. ஒரு பெட்டியில் போட்டுப் பத்திரப்படுத்தினால் ஆயிரம் ஆண்டுகள் கூட அந்த வளையல்கள் நிற்கும். ஆனால் நம்முடைய ஆயுளோ ஒரு இமைப் பொழுதில் அழிந்து போகக் கூடும். ஆனபடியால் உயிருள்ளபோதே, இப்போதே, உள்ளங்களைச் சுத்தி செய்து கொள்வோம். ஏழையென்றும் தனன் என்றும் வித்தியாசப்படுத்தித் தருவதை ஒழிப்போம். ஒரு பூகம்பமோ வெள்ளமோ வேறேதும் விபத்தோ அல்லது நடை

ராஜாஜி



சென்ற ஜனவரி 29ம் தேதி தஞ்சையில் பத்திரிகையாளர் மகாநாடு நடைபெற்றது. சென்னையிலிருந்து ராமேசுவரம் வரையுள்ள பல பத்திரிகை நிருபர்கள் வந்திருந்தார்கள். தென்னிந்தியப் பத்திரிகையாளர் சம்மேளனத்தின் தலைவர் திரு வி. கே. நரசிம்மன் தலைமை வகித்தார். மகாநாட்டை மந்திரி திரு பக்தவத்சலம் திறந்து வைத்தார். மகாநாட்டில் பத்திரிகையாளர் சட்டத்தின் சாதக பாதகங்கள் பரிசீலிக்கப்பட்டன. இம் மகாநாட்டுக்கு 'ஹிந்து' பத்திரிகையின் துணை ஆசிரியர் ஸ்ரீ என். ரகுநாதய்யர், ஸ்ரீ காஸா சுப்பாராவ், ஸ்ரீ எச். டி. ராஜா முதலிய பலர் விஜயம் செய்து சிறப்பித்தனர். அன்று மாலை திருச்சி சகோதரிகளின் இனிய நடன விருந்தும் இருந்தது. மகாநாடு இவ்வளவு சிறப்பாக நடைபெற்றதற்குக் காரணஸ்தர்களாக இருந்த தஞ்சை ஸ்ரீ கிருஷ்ணராவ் அவர்களையும் ஸ்ரீ ஜெயராமன் அவர்களையும் பத்திரிகையாளர் அனைவரும் ஏகோபித்துப் பாராட்டினார்கள்.

முறையில் வரும் மரணமோ நம்மை வந்து எய்துவதற்குள் ஆண்டவன் முன்னிலையில் நிற்பதற்கு ஆயத்தம் ஆவோம். [ஹரிஜன் 2—2—34]

பெரிய உற்பாதங்கள் நாம் செய்த பாபங்களுக்குத் தண்டனையாக வருவதென்று மக்கள் எண்ணுவதுண்டு. நானும் அவ்வாறே எண்ணுகிறேன். உள்ளத்தில் உண்மையில் அந்தக் கருத்துத் தோன்றினால் அச்சமயங்களில் மக்கள் ஆண்டவனைத் தியானித்துப் பிரார்த்திப்பார்கள். செய்த பாபங்களுக்கு வருந்துவார்கள். உள்ளம் அழுக்கு நீங்கிப் புனிதமாவார்கள். ஆண்டவனுடைய சித்தத்தை நான் எம்மட்டும் அறிவேன். பெரும் விபத்துக்கள் அர்த்தமின்றி உண்டாவதாக நான் எண்ணவில்லை. பொருளற்ற இயற்கைச் சேஷ்டைகளாக அவற்றை நான் கருதவில்லை. உற்பாதங்களுக்கும் நியதிகள் உண்டு. சந்திரனும் சூரியனும் மற்ற கிரகங்களும் நியதிப்படி சுற்றிச் சஞ்சரிப்பது போலவே இந்த உற்பாதங்களும் நியதிக்கு அடங்கியவை. இந்த நியதிகள் நமக்குத் தெரியாதபடியால், அவற்றை விபத்து என்றும் தற்செயல் என்றும் உற்பாதம் என்றும் சொல்லி வருகிறோம். [ஹரிஜன் 2-2-34]

ஒவ்வொரு பௌதிகப் பெரு விபத்தும் ஆண்டவன் கருத்தைக் கொண்டே நடைபெறுகிறது. பூகம்பங்கள் எப்பொழுது நிகழும் என்று கணக்கிட்டுக் கண்டு பௌதிக சாஸ்திரம் வருங்காலத்தில் முன்னறிக்கை தரக்கூடும். சூரிய சந்திர கிரஹணங்களைக் கணக்கிட்டுச் சொல்வது போல் பூகம்பங்களையும் சொல்லும் காலமும் வரலாம். மானிட அறிவின் வெற்றி அந்த அளவுக்கும் செல்லலாம். ஆனால் அந்த வெற்றி அல்லது அதைப் போல நூறு வெற்றிகளும் நம்முடைய உள்ளங்களைச் சுத்தப் படுத்துமா? அது இன்றி என்ன பயன்? [ஹரிஜன் 8-6-35]

உள்ளத்தின் மலம் அகன்று செம்மை பெற வேண்டும் என்று விரும்புவோர் அனைவரும் சேர்ந்து பிரார்த்திப்போமாக. இத்தகைய விபத்துக்களை ஏன் ஆண்டவன் விதித்தான் என்பதை அவன் அருளால் காண்போமாக! நம்முடைய அகங்காரம் நீங்கி அடக்கம் பெறுவோமாக. ஆண்டவன் முன்னிலையில் நிற்கத் தகுதி பெறுவோமாக. கூடப் பிறந்த மக்களின், அவர்கள் யாரேயாயினும் அவர்களின், துன்பங்களிலும் துயரங்களிலும் சேர்ந்து பங்கு கொள்வோமாக. [ஹரிஜன் 8-6-35]



அத்தியாயம் 32

புதிய அனுபவம்


ஸ்ரீமதி ஹார்வியின் வீடு மிக நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. உள்ளே நுழைந்தவுடனேயே, அறையின் தோற்றம் என் மனத்தைக் கவர்ந்தது. ஒரு ஆங்கிலேயருடைய வீட்டை நான் பார்ப்பது அதுதான் முதல் தடவையாதலால் சற்றுப் பிரமிப்பாகக்கூட இருந்தது. கதவுகள், ஜன்னல்கள், மேஜை நாற்காலிகள் எல்லாம் அப்பழுக்கின்றிப் பளபளவென்று மின்னின.

அழகிய பூ வேலைகள் செய்த திண்டுகள் நாற்காலிகளை அலங்கரித்தன. கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடியதற்கு அடையாளமாக அறையின் மேலிருந்து வான வில்லின் பல வர்ணங்களையுடைய ரிப்பன்களும், பலூன்களும் தொங்கின. நான்கு மூலைகளிலும் சிறிய மேஜைகளின் மீது பல அலங்காரப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன.

ஒரு பக்கத்தில் வெண்கல நடராஜர் உருவமும், ஒரு அழகிய குத்து விளக்கும் வைக்கப்பட்டிருந்தன. இன்னொரு பக்கம் சலவைக் கல்லால் செய்த ஒரு 'தாஜ்மஹால்' பொம்மை வைக்கப்பட்டிருந்தது. நான் அவைகளைப் பார்ப்பதை ஸ்ரீமதி ஹார்வி கவனித்திருக்க வேண்டும்.

"இவை இரண்டும் இங்கே எப்படி வந்தன என்றுதானே யோசிக்கிறீர்கள்? போன வருஷம் இங்கே ஸ்ரீநிவாஸ் என்று ஒரு மாணவர் தங்கி இருந்தார். அவர் போகும்போது நடராஜ விக்கிரகத்தையும், குத்து விளக்கையும் கொடுத்து விட்டுப் போனார். அதற்கும் முன்னால் ஒரு முஸ்லீம் மாணவர் என் வீட்டிலேயே இருந்தார். அவர் இந்தத் தாஜ்மஹாலை எனக்கு இந்தியாவுக்குச் சென்றதும் அனுப்பினார். பாருங்கள்! என் வீட்டில் நிறைய இந்திய மாணவர்கள் இருந்திருக்கிறார்கள். அதனால் நீங்கள் கொஞ்சங்கூடக் கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு எப்படியெல்லாம்





வேண்டுமோ அப்படியெல்லாம் வசதிகள் செய்து கொள்ளலாம். நாம் மாடிக்குப் போய்த் தங்களுடைய அறையைப் பார்க்கலாமா?'' என்றார்.

நான் நேரே அவர் பின்னால் சென்றேன். ஸ்ரீமதி ஹார்வி திரும்பிப் பார்த்துவிட்டு, ''கோட்டையும் ஹாட்டையும் கழற்றி அங்கே இருக்கும் கோட் ஸ்டாண்டில் மாட்டிவிட்டு வாருங்கள்'' என்றார். அவர் அப்படிக் கூறும்படி நான் மெய் மறந்திருந்தது எனக்குக் கொஞ்சம் கூச்சமாக இருந்தது.

பிறகு அவருடன் மேலே ஏறிச் சென்றேன். மாடிப் படி மிகச் சுத்தமாக இருந்தது. அங்கெல்லாம் கூட அழகுப் பொருள்களை வைத்திருந்தார் ஸ்ரீமதி ஹார்வி. வீடே கிட்டத்தட்ட ஒரு பொருட்காட்சி மாதிரி இருந்தது. அழகழகான கண்ணாடிச் சாமான்களும், பொம்மைகளும், ரத்னக் கம்பளங்களும் எங்கும் காட்சியளித்தன.

என்னுடைய, அதாவது என்னுடையதாக இருக்கப் போகிற அறைக்குள் நுழைந்தேன். அங்கு அதிக சாமான்கள் இல்லை. ஒரு கட்டில், ஒரு அலமாரி முதலிய அவசியமான சாமான்கள்தான் இருந்தன. அதைச் சேர்ந்தாற்போல் இன்னொரு சிறிய அறையும் இருந்தது. ஒரு பக்கத்தில் அறையை உஷ்ணப் படுத்துவதற்காக, நெருப்பு உண்டாக்க ஒரு இடம் இருந்தது. அறை ஒரேயடியாக 'ஜில்' லென்று இருந்தது.

''ஒரு கணத்தில் நான் இங்கே உஷ்ணப்படுத்தி விடுகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே ஸ்ரீமதி ஹார்வி வெளியே போய் ஒரு வாளியை எடுத்து வந்தார். பளபள வென்று அது சுத்தமாக இருந்தது. அதிலிருந்து அவர் அடுப்பில் கரியை எடுத்துப் போட்டதும் நான் உண்மையிலேயே ஆச்சரியப்பட்டேன். அதை என்னால் வெளியிடாமலிருக்க முடியவில்லை.

''மிஸஸ் ஹார்வி! நீங்கள் உங்கள் சாமான்களை வைத்துக் கொண்டிருக்கும் அழகையும், உங்களுடைய சுத்தத்தையும் பார்த்தால் எனக்கு ஒரு பக்கம் ஆச்சரியமாக இருக்கிறது. இன்னொரு பக்கம் பயமாக இருக்கிறது'' என்றேன்.

நான் கூறியதைக் கேட்டு அவருடைய முகம் மலர்ந்ததைப் பார்த்ததும், வீட்டை நன்றாக வைத்துக் கொள்வதில் அவருக்கு எவ்வளவு பெருமை என்பது புலப்பட்டது. இதை நான் தெரிந்து கொண்டது பின்னால் எனக்கு ரொம்பச் சௌகரியமாக இருந்தது. அவருடைய திறமையைப் பற்றிப் புகழ்ந்து விட்டு நான் எத்தனையோ காரியங்களைச் சாதித்துக்கொண்டிருக்கிறேன்.

''என்ன பயம்?'' என்று கேட்டார்.

''உங்களுடைய அழகான வீட்டில் நான் ஒருவன் அவலக்ஷணமாக வந்து சேர்ந்து விட்டேனே என்றுதான் பயமாயிருக்கிறது.''

ஏதோ பிரமாதமான ஹாஸ்யத்தைக் கேட்டு விட்டதுபோல் அவர் சிரித்துக் கொண்டே என் அருகில் வந்து மெல்லிய குரலில், ''இல்லை! இல்லை! நீங்கள் என் வீட்டை இன்னும் அழகு படுத்தவே செய்கிறீர்கள். பக்கத்து அறையில் ஒரு ஜெர்மனிக்காரன் இருக்கிறான். அவன்தான் என்னுடைய வீட்டின் அழகைக் கெடுத்துக் கொண்டிருக்கிறான். எனக்கென்னவோ இந்திய மாணவர்களைத்தான் ரொம்பப் பிடிக்கிறது. மற்றவர்களாவது தேவலை. ஆனால் இந்த ஜெர்மனிக்காரர்களை எனக்கு அடியோடு பிடிப்பதில்லை'' என்று கூறினார்.

எனக்கு உடனே ஒரு ஊக்கம் பிறந்தது. அந்த ஜெர்மனி தேசத்து மாணவனுடன் பழக்கம் செய்து கொள்ள



வேண்டுமென்று ஆவலாக இருந்தது. ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. நான் 'அந்த மாணவன் எப்படி இருப்பான்? என்ன படித்துக் கொண்டிருப்பான்?' என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே ஸ்ரீமதி ஹார்வி நன்றாக நெருப்புப் பற்ற வைத்து விட்டார். இருண்டிருந்த அறையில் ஒளி விளையாடத் தொடங்கியது. நெருப்பின் ஒளியில் ஸ்ரீமதி ஹார்வியின் சிவந்த தலை இன்னும் சிவப்பாகத் தெரிந்தது.

அவர் என்னைப் பார்த்து, "எனக்குப் பழைய காலத்து விஷயங்கள்தான் பிடிக்கின்றன. நெருப்பை மூட்டியதும் இங்கே என்ன பிரகாசமாக இருக்கிறது பார்த்தீர்களா? அந்த அறையே எவ்வளவு அழகாக இருக்கிறது. நெருப்புக் கொழுந்துகள் எரிவதைப் பார்த்துக் கொண்டே நாம் பகற் கனவு காணும் இன்பம் வேறு எதிலாவது கிடைக்குமா? ஆனால் இப்போதெல்லாம் எதற்காகவோ சிலர் வாயு அடுப்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது பார்க்க அழகாகவா இருக்கிறது?" என்று கேட்டார்.


எனக்கு வாயு அடுப்பைப் பற்றி என்ன தெரியும்? ஆனாலும் ஸ்ரீமதி ஹார்வி கூறியதை நான் முழு மனத்துடன் ஆமோதித்தேன். "ஆமாம், ஆமாம். இந்த நெருப்பு எரிவதைப் பார்க்கும்போது இந்தியாவிலிருப்பது போலவே எனக்குத் தோன்றுகிறது. எனக்கு வீட்டை விட்டு வெளி தேசத்துக்கு வந்திருக்கிறேனென்றே தோன்றவில்லை" என்று கூறினேன்.

"ஆமாம். நீங்கள் வேண்டுமானாலும் பாருங்கள், உங்களுக்குச் சாப்பாடெல்லாம் நான் இந்திய முறையிலேயே சமைத்துப் போடுகிறேன். இங்கே வேண்டிய காய்கறிகள் கிடைக்கும். தக்காளி, உருளைக்கிழங்கு, வெங்காயம், பூண்டு......" என்று அடுக்கினார்.

"அட கடவுளே! இங்கு பூண்டுகூடக் கிடைக்குமா?" என்று மனத்துக்குள் வருத்தப்பட்டேன். எனக்குப் பூண்டின் வாசனையே பிடிக்காது.

பிறகு, "நீங்கள் ரொம்பச் சிரமப்பட வேண்டாம் மிஸஸ் ஹாரி! எனக்குச் சுத்த சைவ உணவு கொடுத்தால் போதும். அதில் உங்களுக்குத் தொந்தரவு ஒன்றும் இருக்காதே?" என்றேன்.

"தொந்தரவா? அதெல்லாம் கிடையவே கிடையாது. உங்களுக்கு முன்னால் இங்கே இருந்த ஸ்ரீநிவாசுக்கு நான் சுத்த சைவ உணவுதான் தயார் செய்து கொடுத்தேன். நான் இந்தியச் சமையல் செய்யக் கூடக் கற்றுக் கொண்டிருக்



கிறேன். தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள், ராங் ராய். அந்த நாற்காலியை அப்படி நகர்த்தாதீர்கள். அதன் மீது கோடுகள் விழுந்து விடும். என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்? ஆமாம். சமையலைப் பற்றிச் சொன்னேன். இப்பொழுதே போய் நான் நல்ல சூடான மணமான 'டீ' கொஞ்சம் கொண்டு வருகிறேன். இந்த அறை உன்னுடையதாகி விட்டது. இனிமேல் உன்னை ஆட்டிப்பற வேண்டும். நன்றாகப் படிக்க வேண்டுமல்லவா? முன்பு ஸ்ரீனிவாஸ்கூட நான் 'டீ' போட்டுக் கொடுத்தால்தான் படிக்க ஓடுகிறது என்று கூறுவார். ரொம்ப நல்லவர். ஆனால் சுத்தமாக இருக்கவே தெரியாது. எங்கு பார்த்தாலும் ஆரஞ்சுத் தோல்களைப் போட்டு வைப்பார். பூட்ஸிலிருக்கும் மண்ணைத் துடைக்காமல் உள்ளே யெல்லாம் வந்து வீட்டையெல்லாம் மண்ணாக்கி விடுவார்......." (நான் என்னுடைய பூட்ஸைப் பரிதாபமாகப் பார்த்தேன்!)

"அவர் வீட்டை விட்டுக் கிளம்பிய பிறகும், வந்தபிறகும் எனக்கு ஒரு மணி நேரம் வேலை இருக்கும்" என்று மூச்சு விடாமல் பேசி விட்டு வெளியே சென்றார். மழை பெய்து ஓய்ந்த மாதிரி இருந்தது எனக்கு.

அவர் சென்றதும், 'இவர் இவ்வளவு கண்டிப்புக்காரராக இருக்கிறாரே. எப்படித்தான் இரண்டு வருஷங்கள் இந்த வீட்டில் காலந் தள்ளப் போகிறோம்' என்று எனக்குக் கவலையாக இருந்தது. உதறலுக்குள் தலையிட்டுக் கொண்டாகி விட்டது. இனிமேல் உலக்கைக்குப் பயந்தால் முடியுமா என்று சமாதானப் படுத்திக் கொண்டேன்.

"தேனீர்" வந்தது. நல்லவேளையாக நன்றாகவே இருந்தது. அதைச் சாப்பிடும்போது வேறு பேசிப் பேசி என்னைத் திணறடித்து விட்டார் மிஸஸ் ஹாரி.

நான் அந்த ஜெர்மனி தேசத்து மாணவனைப் பார்க்க விரும்பினேன். ஆனால் அவரிடம் அதைச் சொல்லத் தயக்கமாக இருந்தது. அவனைப் பற்றிப் பேசும்போதே அவர் எவ்வளவு வெறுப்புடன் பேசுகிறார்?

கடைசியில் துணிந்து, "பக்கத்து அறையில் இருப்பவரின் பெயர் என்ன?" என்று கேட்டுவிட்டேன்.


"அவர் பெயர் ஸ்டீபான் ஹீம்மெல். கவான்டிஷ் ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சி செய்யும் மாணவர். எனக்கு இந்த ஆராய்ச்சி செய்யும் மாணவர்களைப் பிடிப்பதே இல்லை. இலக்கியமோ அல்லது என்ஜினீயரிங் படிப்போ படிக்கிறவர்களைத்தான் எனக்குப் பிடிக்கிறது. ஆராய்ச்சி செய்து என்ன கண்டு பிடித்துவிடப் போகிறார்கள்? இன்னும் அழிவுக்குத்தான் வழி தேடுகிறார்கள்" என்று கூறினார்.


"அப்படிச் சொல்லிவிட முடியுமா? உலகத்தில் இப்போது மோட்டாரும், விமானமும், பெரிய பெரிய தொழிற்சாலைகளும் நடப்பது ஆராய்ச்சி செய்வதினால்தானே?" என்றேன்.

"ஏரோப்ளேன் கண்டு பிடிக்கிறாக விட்டால் என்ன குறைந்து போய்விடும்? உலகம் இன்னும் கொஞ்சம் நிம்மதியாக இருந்திருக்கும். என் சகோதரர்கள் எல்லாரும் யுத்தத்தில் இறந்து போகாமல் இருந்திருப்பார்கள்!" என்றார்.

அவருக்கு ஜெர்மனிக்காரர்கள் மீது ஏன் கோபம் என்பது எனக்கு உடனே புரிந்து விட்டது. யுத்தம் நடந்தபோது (அதாவது முதல் உலக மகா யுத்தம் நடந்தபோது) அவருடைய சகோதரர்கள் ஜெர்மானியரோடு சண்டை செய்து


அதில் மூவகை செயல்!
உங்கள் பற்களை அதிக பத்திரமாகப் பாதுகாக்கிறது!
உங்கள் பற்களில் தொந்தரவு இல்லாமல் பாதுகாத்துக் கொள்க; உண்மையில் நல்ல பிரஷ் உபயோகியுங்கள் - கால்கேட் சாஸ்திரியமாக அமைக்கப் பெற்ற நைலான் பல் பிரஷ்! அது உங்கள் பற்களை ஏன் அதிக பத்திரமாகப் பாதுகாக்கிறதென்றால்—
• அது மூவகைச் செயலுடையது - இடுக்குகளில் நுழைகிறது. பல்லின் உட்புறமும் வெளிப்புறமும் நன்கு துலக்குகிறது. ஈறுகளைப் பக்குவமாக உறுதிப்படுத்துகிறது
• அது மூடப்பட்டுள்ளது - சுகாதார முறையில் பிளாஸ்டிக் குழாயில்
• அது சாஸ்திரீயமான உருப்பெற்றது - மேலும் கீழுமுள்ள பின்பற்களை சுலப முறையில் அதிக சுத்தமாக்குமாறு
• அது மிருதுவாகத் துலக்குகிறது - சன்னமான வெண்பகுதியைப் பாதிக்காது
கால்கேட்
டூத்பிரஷ் டீலக்ஸ்
COLGATE
ஆண்களுக்கு
பெண்களுக்கு
குழந்தைகளுக்கு
ஹார்ட், மீடியம், ஸாப்ட்
சுகாதார பிளாஸ்டிக் குழாயில்
TB6/7


தசை வலியா?
நோபெயின்
வலியை வேகமாக நிவர்த்திக்கிறது
NOPAIN
சுகாதாரமான சீலவைத்த டியூபுகளில்
ஒரு கல்கத்தா கெமிகல் தயாரிப்பு
தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை – 1





'அனாஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப் பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனாஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் :—

1. கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினாஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்கடிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளது.

அனாஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனாஸின்' ஹிருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனாஸினையே கேட்டு வாங்குங்கள்.

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது

A. 4

இறந்திருக்க வேண்டும். நான் ஊகித்தது சரிதானென்று உடனே தெரிந்தது.

"எனக்கு இரண்டு அண்ணன்மார்களும், ஒரு தம்பியும் இருந்தார்கள். மூன்று பேரும் யுத்தம் நடந்தபோது பட்டாளத்தில் சேர்ந்து யுத்தத்துக்குப் போனார்கள். எனக்கு அப்போது கல்யாணமாகி யிருக்கவில்லை. என் தந்தைக்கு வயதாகி விட்டது. மூன்று பேரும் யுத்தத்தில் இறந்து போய் விட்டார்கள். என் தகப்பனார் மனம் உடைந்து இறந்து போனார். நானும் என் தாயாரும் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. பிறகு நான் ஹார்வியைக் கல்யாணம் செய்துகொண்டேன். அதன் பிறகுதான் நிம்மதியாக வாழ்கிறேன்" என்றார்.

எனக்கு முதன் முறையாக அவருடைய கணவரைப் பற்றி நான் ஒன்றும் கேட்கவில்லை என்பது அப்பொழுதுதான் மூளையில் உறைத்தது.

"மிஸ்டர் ஹார்வி இப்போது வேலைக்குப் போயிருப்பார் அல்லவா?" என்று அவரிடம் கேட்டேன்.

"ஆம். அவர் லண்டனுக்குச் சாமான்களை ஏற்றிச் செல்லும் லாரியை ஓட்டிக் கொண்டு போயிருக்கிறார். நாளைதான் திரும்பி வருவார்" என்றார்.

பிறகு நான் ஸ்டிபான் ஹிம்மெல்லைப் பார்த்துப் பேச விரும்புவதாகக் கூறினேன். மிஸஸ் ஹார்வி அரை மனத்துடன் என்னைப் பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்றார்.

ஸ்டிபான் ஹிம்மெலுடன் நான் வெகு சீக்கிரத்தில் பழகி விட்டேன். அவனுடன் பழகப் பழக அவனுடைய தேச பக்தியும், வீர உணர்ச்சியும் புலனாகத் தொடங்கிற்று. அவனும் நானும் ஒரே வீட்டிலிருந்தது எனக்கு எவ்வளவோ பயன் அளித்தது. அதுவரை எனக்குத் தேசத் தொண்டு செய்வது முதலியவற்றில் அதிக ஊக்கம் இருந்ததில்லை. அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்று நினைத்திருந்தேன். ஹிம்மெலுடைய நட்பின் பயனாக ஒவ்வொருவருக்கும் தன் தேசத்தின் வளர்ச்சியில் எவ்வளவு பொறுப்பும் கடமையும் உண்டென்பதைத் தெரிந்து கொண்டேன். இத்தனை நாட்களாய் இதைத் தெரிந்து கொள்ளாமலிருந்து விட்டோமே என்று அவமானமாகக்கூட இருந்தது.

அத்தியாயம் 33

பனி நீங்கியது

நான் கல்லூரியில் சேர்ந்து ஒரு வாரத்துக்கெல்லாம் என்னுடைய உபாத்தியாயரான பேராசிரியர் மைக்கேல் ஆன்ட்ருஸிடம் ஒரு கட்டுரை எழுதிக்கொண்டு போய்க் கொடுத்தேன்.

பேராசிரியர் ஆன்ட்ருஸ் வயதானவர். முகம் குழந்தையைப் போல் களங்கமற்று இருக்கும். ஆனால் அவருடைய கண்களில் அறிவொளி வீசும். அவரைப் பார்த்த உடனேயே எனக்கு ரொம்ப மரியாதையும், அன்பும் ஏற்பட்டன. அவரிடம் என் கட்டுரையைக் கொடுத்துவிட்டுப் பேசிக் கொண்டிருந்தேன்.

பேச்சு முதலில் இங்கிலாந்தைப் பற்றித் தொடங்கி இந்தியா வரையில் சென்றது. பிறகு அவர் என்னைப் பற்றிக் கேட்டார். நான் தாய் தந்தை இல்லாதவன் என்று தெரிந்து அனுதாபத்துடன் பேசினார். ஆகவே நானும் மனம் விட்டுப் பேசினேன்.

அவர் பரிவோடு, "உலகத்தில் கஷ்டங்கள் அனுபவிக்கும் போதுதான் நமக்குப் பக்குவம் உண்டாகிறது. மனம் பண்படுகிறது. நமக்குச் சோதனைகள் வரும்போது கடவுள் நமக்கு நன்மை செய்கிறார் என்று சந்தோஷப்பட வேண்டும்" என்றார்.

பிறகு என்னைத் தம் வீட்டுக்கு வரும்படி அழைத்தார். ஒரு பேராசிரியர் ஒரு மாணவனுடன் பழகுவது போலவே அவர் பழகவில்லை. பொதுவாகவே கேம்பிரிட்ஜில் அது எனக்கு வியப்பாக இருந்தது. மாணவர்களும் ஆசிரியர்களும் ரொம்ப நெருங்கிப் பழகுகிறார்கள். இந்தியாவில் இருப்பது போல் அவர்கள் தயங்குவதில்லை.

பிறகு, "நீ ஐ. ஸி. எஸ். பரீட்சை எழுதப் போவதாகச் சொன்னாயே. அதற்கு வேண்டிய புத்தகங்களெல்லாம் படிக்கிறாயா? என்ன ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறாய்?" என்று அவர் என்னிடம் வினவினார்.

"நான்தான் சரித்திர ஆராய்ச்சியைக் கல்லூரியில் பாடமாக எடுத்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே அதையே ஐ. ஸி. எஸ். பரீட்சையிலும் எழுதிவிடுவேன். அரவிந்திடம் இப்போது வங்காள பாஷை கற்றுக் கொள்கிறேன். பரீட்சை எழுதுவதற்கு முன்னால் லண்டனில் கொஞ்ச நாள் யாரிடமாவது தீவிரமாக வங்காள பாஷையைக் கற்றுக் கொள்ளலாமென்று உத்தேசம். மற்றப்

படி பொதுவான விஷயங்களுக்கு வாசகசாலைகளில் நிறையப் புத்தகங்கள் படித்து விருத்திசெய்து கொள்கிறேன்.''

''உன் ஆங்கில நடை நன்றாக இருக்கிறது. அதனால் கட்டுரை எழுத நீ சிரமப்பட மாட்டாய் என்று நினைக்கிறேன். நீ இன்னும் எழுதிப் பழகினால் சரியாகிவிடும். உலக விஷயங்கள் எல்லாவற்றையும் நிறையப் பத்திரிகைகளும், புத்தகங்களும் படித்துத் தெரிந்து கொள். ஐ. ஸி. எஸ். பரீட்சைக்கு என்னவிதமான கேள்விகள் தான் கேட்பார்களென்று சொல்ல முடியாது'' என்று கூறினார்.

நான் அவருடைய யோசனைகளுக்கு நன்றி தெரிவித்து விட்டுக் கிளம்பினேன். மறுபடியும் அவர் தம் வீட்டுக்கு வரும்படி கூறினார்.



இரண்டு நாட்கள் கழித்து நான் அவர் வீட்டுக்குச் சென்றேன். நான் சென்றபோது அவர் வீட்டிலில்லை. அவரது மனைவியாரிடம் நான் யாரென்று தெரிவித்தேன்.

''இப்போது வந்துவிடுவார். உள்ளே வா. உனக்காக என் மகனும், மகளும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று கூறிக் கொண்டே உள்ளே அழைத்துச் சென்றார்.

மிஸ். மிரியம் ஆன்ட்ரூஸும், மிஸ்டர் ஜான் ஆன்ட்ரூஸும் எனக்கு அன்றே மிகவும் சிநேகமாகி விட்டார்கள். இரண்டு பேரும் என்னை மாற்றி மாற்றி இந்தியாவைப் பற்றிக் கேள்விகள் கேட்டுத் துளைத்து விட்டார்கள். அவர்களுடைய மாமா இந்தியாவில் வேலை பார்த்தவராம். அவர் இந்தியாவைப் பற்றித் தப்பும் தவறுமாகப் பல விஷயங்கள் கூறியிருந்தார். அவற்றையெல்லாம் கேட்டபோது எனக்கு ரொம்ப வேதனையாக இருந்தது.

அதிலும் ஒரு பேராசிரியரின் மகனும், மகளும், ''இந்தியாவில் நாகப்பாம்புகள் எங்கு பார்த்தாலும் சுற்றிக் கொண்டிருக்குமாமே?'', ''யாராவது யோகிகளும், சாமியார்களும் மந்திர வித்தைகள் செய்து கொண்டே இருப்பார்களாமே? முள்ளின் மீது படுத்துக் கொள்வார்களாமே? நெருப்பை மிதிப்பார்களாமே?'' என்பது போன்ற கேள்விகளைக் கேட்டது ரொம்பச் சங்கடமாக இருந்தது. இந்தியா என்றதும் முள்ளுப் படுக்கையும், நல்ல பாம்புகளும் தான் அவர்களுக்கு ஞாபகம் வருகின்றன என்றால் கொஞ்சம் கஷ்டமாக இல்லையா? அதற்கும் ஒரு படி மேலே போனால் சுதேச சமஸ்தான மன்னர்களைப்பற்றி அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அவர்களுடைய மாமாவுக்குச் சில மன்னர்கள் புலித்தோல்களும், யானைத் தந்தங்களும் பரிசளித்திருந்தார்களாம். அதனால் அவர்களுக்கு இந்தியாவில் யானைகளும், புலிகளும், சுதேச சமஸ்தான மன்னர்களும் உண்டு என்பது தெரிந்திருந்தது.

அன்று நான் அவர்கள் வீட்டிலிருந்து புறப்பட்ட போது சற்று மனக் குறையுடன் தான் புறப்பட்டேன். அவர்கள் எல்லோரும் ரொம்ப நல்லவர்களென்று எனக்குத் தெரிந்தது. ஆயினும் இந்தியாவைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த அபிப்பிராயங்கள் என் மனத்தைப் புண்படுத்தின. நான் அரசியல் வாழ்க்கையில் ஈடுபடாதவன் தான். ஆனாலும் நம் தேசத்தின் மீது எனக்கு ரொம்பப் பாசம் உண்டு. நமது இலக்கியச் செல்வங்களைப் பற்றியும், நமது இந்து மதத்தின் சிறப்பைப் பற்றியும் ரொம்பப் பெருமை உண்டு. மிரியமும், ஜானும் இவைகளையெல்லாம் கொஞ்சங்கூடத் தெரிந்து கொள்ளாமலிருந்தது எனக்கு வேதனையாக இருந்தது.

நான் வீடு திரும்பியபோது ஸ்டீபான் ஸிம்மெனும் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும், ''ஹல்லோ! டி ராய்! இந்தக் குளிரில் நீ இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' என்று கூறிக் கொண்டே மாடிப்படி ஏறிச் சென்றான். நானும் அவன் பின்னாலேயே சென்றேன். என் அறையில் நுழையப் போகும் சமயத்தில், ''இங்கு

வாயேன். நெருப்பு எரிகிறது. உஷ்ணப் படுத்திக் கொள்ளலாம்'' என்று கூப்பிட்டான். நானும் அவனைத் தொடர்ந்து அவன் அறைக்குச் சென்றேன்.

ஹிர்மெனுடைய அறையே ஒரு ஆராய்ச்சிச் சாலையாக இருந்தது. ஏதேதோ விசித்திரமான வடிவமுடைய கண்ணாடிக் குழாய்களும், பாட்டில்களும் ஜாடிகளும் அறை நிறைய அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒருகணம் கூட அவன் சும்மா இருக்க மாட்டான்.

"நீ இந்த ஆராய்ச்சி முடிந்ததும் என்ன செய்யப் போகிறாய்?'' என்று அவனைக் கேட்டேன்.

"நான் என் தேசத்துக்குப் போய் சேவை செய்வேன். எங்கள் நாட்டுக்கு இப்போது விஞ்ஞானிகள்தான் ரொம்ப முக்கியம். ஜெர்மனி, யுத்தத்தின் போது பட்ட கஷ்டங்களுக்குக் கணக்கு வழக்கு இல்லை. இப்போது நாங்கள் எங்கள் தேசத்தைப் புதிதாக நிர்மாணித்துக் கொண்டு வருகிறோம். அதற்கு நான் செய்யக் கூடிய சேவை இதுதான்'' என்று கூறினான்.

"இவ்வளவு உயர்வாக உங்கள் நாட்டைப் பற்றிப் பேசுகிறாயே? உங்கள் தேசத்தில் யூதர்களை மட்டும் அவ்வளவு கஷ்டப்படுத்துகிறாரே ஹிட்லர். அது நியாயமா? அவர்கள் மட்டும் மனிதர்கள் இல்லையா?'' என்று கேட்டேன்.


"உண்மைதான். ஆனால் யூதர்களால் நாங்கள் அடைந்திருக்கும் தொல்லைகளை நீங்கள் உணர முடியாது. ஜெர்மனியின் பணத்தையெல்லாம் அவர்களே எப்போதும் சுரண்டிக் கொண்டு விடுகிறார்கள். நியாயமாகக் கேட்டால் கொடுப்பதில்லை. எல்லா விதங்களிலும் ஜனங்களை ஏமாற்றிப் பணம் சேர்த்து விடுகிறார்கள். ஹிட்லர் அவர்களை ஒழிப்பதனால் ஜெர்மனிக்கு மொத்தத்தில் நல்லதுதான். யூதர்களைச் சும்மா விட்டு விட்டால் ஜெர்மனிக்கு மேலும் கெடுதல்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்குமே. இரண்டு கெடுதல்களில் எது குறைவான கெடுதல் என்றுதானே நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. உங்கள் தேசத்தில் நீங்களும் தான் சுதந்திரத்துக்காகப் போராடுகிறீர்கள். போராடினால் ஒன்றுமறியாத ஜனங்கள் சில சமயம் மடிய நேரிடுகிறது. அதனால் சுதந்திரத்துக்காகப் போராடுவது தவறா?''

"அப்படி நான் சொல்லவில்லை. எங்கள் மஹாத்மாஜி அஹிம்சா தத்துவம் போதிக்கிறார். ஆனால் ஹிட்லர் சர்வாதிகாரத்தையல்லவா செலுத்தி வருகிறார்? சர்வாதிகாரம் குடியரசாக முடியுமா?''

"உங்கள் தேசத்துக்கு அது சரியாக இருக்கலாம். இந்தியாவிடம் எனக்கு மிகுந்த பற்றுதல் உண்டு. ஆத்மீக வளர்ச்சியில் இந்தியா ரொம்ப உயர்ந்து விட்டது. ஆகவே அஹிம்ஸா தத்துவம் இந்தியாவுக்குப் பொருந்தும். எங்கள் நாட்டில் அப்படி இல்லையே! ஹிட்லரால்தான் எங்கள் நாடு மறுபடியும் தேசமாக உருவாகி இருக்கிறது. அவருடைய கண்டிப்பினால்தான் எல்லோரும் சரியாக வேலை செய்கிறார்கள். இல்லாவிட்டால் எங்கள் தேசம் தேசமாகவே இருக்காது. மேலும் காந்திஜி தெய்விக புருஷர்'' என்றான்.

எனக்கு அவன் அவ்வளவு தூரம் இந்தியாவைப் பற்றித் தெரிந்து கொண்டிருப்பதும், காந்திமகானைப் பற்றி மரியாதையுடன் பேசியதும் மிகுந்த சந்தோஷத்தை அளித்தன. ஆகவே நான் ஆசிரியர் வீட்டு அனுபவத்தை அவனிடம் கூறினேன்.

"இங்கு அநேகமாக எல்லோரும் அப்படித்தான் இருப்பார்கள், துரை. இவர்களுக்கு மற்ற நாடுகளை ஆண்டு வழக்கமாகிப் போய் விட்டது. ஆகவே மற்ற தேசங்களைப் பற்றி எவ்வளவு கொஞ்சமாகத் தெரிந்து கொள்ள முடி



ஸ்ரீ கே. ஆர். நாராயணய்யர் அவர்களின் புதல்வி சௌ. ஜானகிக்கும் இந்தியன் பாங்கைச் சேர்ந்த எஸ். சுப்பய்யாவுக்கும் பாகனேரியில் திருமணம் நடந்தேறியது. வாழ்க, மணமக்கள்!

யுமோ அவ்வளவு குறைவாகத்தான் தெரிந்து கொள்வார்கள்.''

"ஆமாம்! உனக்கு எப்படி இந்தியாவின் அரசியலைப் பற்றியும் இந்தியத் தலைவர்களைப் பற்றியும் தெரியும்?''

"நான் தவறாமல் உலக விவகாரங்களைப் படிக்கும் வழக்க முண்டு. மேலும் இந்தியா ஒரு பெரிய தேசம் அல்லவா? பகவத் கீதை ஒன்று போதுமே, அதை நிரூபிக்க'' என்றான்.

"நீ பகவத் கீதை படித்திருக்கிறாயா, என்ன? உனக்கு சம்ஸ்க்ருதம் நன்றாகத் தெரியுமா?''

"எனக்கு ஸம்ஸ்க்ருதம் அதிகமாகத் தெரியாது. இப்போது கல்லூரியில் படிக்கிறேன். ஆனால் பகவத் கீதைக்கு ஜெர்மன் பாஷையில் மொழிபெயர்ப்பு இருக்கிறது. அதை முழுதும் படித்திருக்கிறேன்'' என்றான்.

எனக்கு ஹிம்மெலின் பேச்சு ஆறுதல் அளித்தது. அவனுக்கு இந்தியாவின் மீது இருந்த நன்மதிப்பு எனக்கு ஒரு தென்பை அளித்தது. ஜெர்மனியில் யூதர்களைக் கொடுமைப் படுத்துவதற்கு அவன் ஆதரவாக இருப்பது கூட மறந்துபோய் விட்டது.

ஹிம்மெலுடன் பேசி விட்டு நான் என் அறைக்குச் சென்றேன். ஸ்ரீமதி ஹார்வி அங்கே ஏதோ சுத்தம் செய்து கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும், "ரொம்ப நேரமாய் ஹிம்மெலின் அறையில் பேசிக் கொண்டிருந்தீர்கள் போலிருக்கிறதே!'' என்றார்.

"ஆமாம், அவன் எவ்வளவு கெட்டிக்காரன் தெரியுமா? அவனுக்கு அசாத்திய மூளை!'' என்றேன்.

"எனக்கென்னமோ இந்த வெறும் மூளை வேலை செய்கிறவர்களை அவ்வளவாகப் பிடிப்பதில்லை. அவர்களுக்கு இதயமே இருப்பதில்லை. வெறும் அறிவு மட்டும் இருந்து என்ன பிரயோஜனம்? அதை உபயோகிக்க நல்ல வழி தெரிய வேண்டாமா? இதயம் இல்லாதவர்களுக்கு அறிவு எதற்கு? இந்த ஜெர்மனி தேசத்து மனிதர்களுக்கே மூளை மட்டும் உண்டு. இதயமே கிடையாது.''

நான் சிரித்து விட்டுப் பேசாமலிருந்து விட்டேன்.

மறுபடியும் நான் ஜானைப் பார்த்த போது, அவன் என்னை மறுபடியும் வீட்டுக்கு வரும்படி கூப்பிட்டான். இரண்டாவது தடவை பேச்சு இன்னும் சுவாரஸ்யமாக இருந்தது. நாலைந்து தடவைகள் அவர்களோடு பழகிய பிறகு எனக்கு அவர்களையும் ரொம்பப் பிடித்து விட்டது. இந்தியாவைப் பற்றி அவர்கள் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லையென்பதும், அவர்கள் ஆட்சித் திமிறினால் பேசவில்லையென்பதும் தெரிந்த பிறகு ரொம்ப நிம்மதி ஏற்பட்டது. ஜான் எனக்குப்பல உதவிகள்செய்தான்.

கேம்பிரிட்ஜ் முழுவதையும் சுற்றிக் காட்டினான். அவனும் படித்துக் கொண்டிருந்தபடியால் எனக்கு ரொம்பச் சௌகரியமாக இருந்தது. எனக்குப் பலரை அறிமுகம் செய்து வைத்தான். மிரியமும் படித்துக் கொண்டிருந்தாள். அவளும் ரொம்பப் பிரியமாகப் பழகினாள். என்னை இருவருமாக 'வெஸ்லி ஹவுஸ்' தேவாலயத்துக்கு ஒரு நாள் அழைத்துச் சென்று காண்பித்தார்கள்.

ஒரு நாள் நான் அவர்கள் வீட்டுக்குப் போயிருந்த போது ஸ்ரீமதி ஆன்ட்ரூஸ் என்னைப் பார்த்து, "உங்கள் பெயர் எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. சின்னப் பெயராக ஒன்று சொல்லுங்களேன். ஞாபகம் வைத்துக் கொள்ளச் சௌகரியமாக இருக்கும்'' என்றார்.

"என் பெயரே ரொம்பச் சின்னது தானே? வேண்டுமானால் 'ரை' என்று கூப்பிடுங்கள்'' என்றேன்.

அது முதல் அவர்கள் எல்லோரும் என்னை, "மிஸ்டர் ராய்'' என்றே அழைக்கத் தொடங்கினார்கள். முதலில் வேடிக்கையாக ஆரம்பித்துப் பிறகு அதுவே நிலைத்து விட்டது. அரவிந்த் கூட என்னைப் பார்த்து, "நான் ஒரு வங்காளி இருக்கும்போது உன்னை இப்படி வங்காளியாக்கி விட்டார்களே'' என்று பரிகாசம்செய்தான். ஹிம்மெலும் என்னை ராய் என்று அழைக்க ஆரம்பித்தான். ஆகவே மிஸஸ் ஹார்வியும் அப்பெயரையே கூப்பிடத் தொடங்கினார்.

இதற்குள் பனிகாலம் நீங்கி வஸந்த ருது உல்லாசமாகப் பவனி வரத் தொடங்கியது. (தொடரும்)



ஒரு தொழிலின் அவசியத்தை நிர்ணயிப்பது எப்படி?

ஒரு சைக்கிள், தையல் மிஷின் அல்லது ஒரு லாந்தல் விளக்கையோ ஒருவரிடம் காண்பியுங்கள். அவரிடமே வார்ப்பெடுத்த ஓர் எஃகுக்கட்டியையும் காண்பியுங்கள். நிச்சயமாக அவர் எஃகுக் கட்டியை திரும்பியும் பார்க்கமாட்டார். ஆயினும் தொழிற்சாலைகளிலும், இயந்திரங்களிலும், கட்டடங்களிலும்...மற்றும் நாம் நாள் தோறும் உபயோகிக்கும் நூற்றுக்கணக்கான பொருள்களைத் தயார் செய்ய எஃகானது இன்றியமையாதது.

இந்திய எஃகுத் தொழில் துவக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் நிரம்பவில்லை எனினும் இன்று நம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் அது ஒரு நிலைகாடியாக விளங்குகிறது. பிற நாடுகள் அணுக முடியாத குறைந்த அடக்க விலையில் சுமார் 17 லக்ஷம் டன் வார்ப்பெடுத்த எஃகு கட்டிகள் நம் நாட்டில் உற்பத்தியாகின்றன. இந்த 17 லக்ஷ டன்களில், 10 லக்ஷ டன்களுக்கு மேலான எஃகு, டாடா ஸ்டீல் தொழிற்சாலையிலேயே தயாரிக்கப்படுகிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட ஆரம்ப காலத்திலேயே சுமார் 20 லக்ஷம் டன்கள் எஃகு உற்பத்தி செய்ய டாடா கம்பனியார் திட்டம் செய்துள்ளனர்.

தனியார் தொழில் தேச நலனுக்காகப் பாடுபடுகிறது.

தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பெனி லிட்.

[illegible]

நான்தான் டீ

என்னை உலகெங்கும் அறிவர்...



என் கீர்த்தியைக் கண்டு உலகப் பிரமுகர்கள் கூட பொறாமைப் படுவர். ஆண்டு தோறும் 45 கோடி ராத்தலுக்குக் குறையாத அளவு நான் வெளியே அனுப்பப்பட்ட போதிலும், ஜனங்கள் இன்னும் அதிகமாக என்னைக் காண விரும்புகின்றனர். என்னுடன் பரிச்சயமாகுபவர்களின் பாஷையை எல்லாம் நான் அறிந்து கொண்டால், அநேகமாய் எல்லா நாடுகளின் பாஷையையும் நான் பேசமுடியும் என்று துணிந்து கூறலாம். இப்போது கூட உலகத்தேவையில் பாதியை நான் பூர்த்தி செய்கிறேன். ரஷ்யா, சீனா, பார்மோஸா, ஜப்பான் நீங்கலாக உள்ள உலகின் வருஷத்தேவை 120 கோடி ராத்தல். பிரிட்டன் தான் பெரிய வாடிக்கை நாடு. சென்ற வருஷம் அது மாத்திரம் 3270 லட்சம் ராத்தலை வாங்கியது. வருஷம் 4 கோடி ராத்தலுக்கு மேல் வாங்கும் யு. எஸ். 2-வது ஸ்தானத்தை வகிக்கிறது. மற்றும் அயர்லாந்துக்காரர், கனடாக்காரர், எகிப்தியர், ஐரோப்பியர் என பல உபாஸகர்கள் என்னைக் கொண்டாடுகிறார்கள். பல நாடுகளின் மக்களுக்கு ஒரு வாழ்க்கை முறையாகி விட்டேன். அங்கு தேநீர் வழங்குவது பரம்பரை விருந்தோம்பல் பாணி. கோடானுகோடி உலக மக்களை இணைக்கும் நேசப்பாலமாகிய என்னைப்பற்றி—இந்திய டீயைப் பற்றி—பெருமிதமடைகிறீர்கள் அல்லவா!

TEA BOARD INDIA

நான்தான் டீ — உலக நட்புறவின் சின்னம்

சபாஷ், சிந்தாமணி!

சிந்தாமணியின் அம்மாவுக்கு வீட்டில் நாட்டுப் பெண் வந்து பார்க்க வேண்டும்; புது வெள்ளிக் குத்துவிளக்கு வந்து வீட்டில் சுடர் விட்டு எரிய வேண்டும் என்று ஆசை. பிள்ளை ஊரையும் உலகத்தையும் இப்படிச் சுற்றித் திரிந்து வருவது அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

கண்ணுக்கு அழகான பிள்ளையைப் பெற்றாள்; அவனும் ஒரு வகுப்பிலும் அஸ்திவாரம் போடாமல் இண்டர் மீடியட் வரை பாஸ் பண்ணவே செய்தான். ஒரு நல்ல சர்க்கார் உத்தியோகத்திலும் சேர்ந்து மாதம் பிறந்தால் கை நிறையச் சம்பளமும் வாங்கி வந்தான். வயதும் இருபத்தைந்து ஆயிற்று. யுக்தமான இளங்காளைப் பருவம். ஒரே பிள்ளை. தகப்பனாரும் இல்லை. தாயாருக்குத் தன் பிள்ளைக்குக் காலா காலத்தில் கல்யாணம் செய்துபார்க்க வேண்டுமென்று ஆசை இருக்காதா?

கல்யாணம் என்று சொன்னால் சிந்தாமணி முதலிலெல்லாம் 'முறுக்கு'ப் பண்ணிக் கொள்ளுவான். உலகத்தில் கல்யாணம் பண்ணிக் கொண்டு திண்டாடியவர்களது கதைகளையெல்லாம் எடுத்துச் சொல்லுவான். அம்மாவின் பொறுமையை இந்த வசத்தில் மீறிய பிறகு, இப்போதெல்லாம் சிந்தாமணி ஒரு விதமான தந்திரத்தைக் கையாண்டு வந்தான்.

அதுதான் பெண் பார்க்கப் போகும் தந்திரம்! இது வரை திருச்சிராப்பள்ளி, மதுரை, கரூர், ராமேசுவரம், தஞ்சாவூர் ஆகிய இடங்களுக்கெல்லாம் அம்மாவுடன் சென்று பெண் பார்த்து விட்டு வந்து அலுத்தாற் போல் பதில் சொல்லிக் கொண்டு வந்தான்.

ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வொரு குறை சொல்லிக் கொண்டு வந்தான். மதுரைப் பெண்ணைப் பற்றிச் சிந்தாமணி சொன்னதுதான் மிகப் பெரிய அதிர்வேட்டாக இருந்தது அவன்* அம்மாவுக்கு. "மதுரைப் பெண், மீனாட்சி அம்பிகையைப் போலவே இருக்கிறாள். ஆனால் அம்மா, இத்தனை அழகு கூடாது! 'பார்யா ரூபவதி சத்ரு' என்று பெரியவர்கள் சொல்லவில்லையா?" என்று வினயமான பாவனையில் ஒரு வேதாந்தத்தைச் சொல்லுவதுபோல் பெரியபோடாகப் போட்டான் சிந்தாமணி!

'இந்தப் பிள்ளைக்கு எப்போதுதான் கல்யாணமாகுமோ?' என்று விசாரப்பட ஆரம்பித்து விட்டாள் அவன் அம்மா.

இப்படி இருக்கும்போதுதான், தஞ்சாவூர் ஜில்லாவில் அய்யம்பேட்டையைச் சார்ந்த வையச்சேரி கிராமத்திலிருந்து பட்டாமணியம் வைத்தியநாதனின் குமாரத்தி மங்களாம்பாளின் ஜாதகம் வந்தது.

இந்த ஜாதகம் சம்பந்தமாகச் சிந்தாமணிக்குக் கூடக் கொஞ்சம் சபலம் இருந்தது. இந்தச் சபலம் இரண்டு விதத்தில் இருந்தது.

ஒன்று, பட்டாமணியம் வைத்தியநாதனுக்கு வையச்சேரியில் பதினைந்து வேலி நிலத்துக்கு மேல் இருந்தது. அவ்வளவும் கடாற்றுப் பாய்ச்சலில் நெல்லாகிய பொன்னாக விளையும் பூமி. இரு போகமும் உளுந்தும் பயறுமாக வைத்தியநாதனுக்குச் செல்வத்தில் குறைவில்லை. வையச்சேரியில் பெரிய வீடு; ஒரே பெண். சொத்துப் பூராவும் அந்தப் பெண்ணுக்குத்தான். அதாவது, சிந்தாமணி அந்த மங்களாம்பாளைக் கல்யாணம் செய்து கொண்டானால், அவன் மூலமாகச் சொத்துப் பூராவும் அவனுக்கே வந்து சேரும்.





இன்னொரு காரணம் இருந்தது அல்லவா? அது அந்த சாட்சாத் மங்களாம்பாளைப் பற்றியே தான்!

இப்போது கும்பகோணத்தில் வேலையாக இருக்கும் சிந்தாமணிக்கு அதற்குள் இளமை நினைவுகள்—அய்யம் பேட்டை ஹைஸ்கூலில் படித்த நினைவுகள்—மறந்து போய்விடுமா என்ன? சொல்லப்போனால் ஐந்தாறு வருஷங்களுக்கு முன்புதானே நடந்தவை அவை!

குலமங்கலத்திலிருந்து அய்யம் பேட்டைக்குச் சென்று படித்துக் கொண்டிருந்தான் அவன். மங்களாம்பாளோ வையச்சேரியிலிருந்து வந்து படித்தாள். அவள் எப்போதும் வில் வண்டியில்தான் வருவாள். வயல் சாகுபடி நடக்கும் காலத்தில் வண்டி சுற்று வழியாகத் தஞ்சாவூர் சாலை வழியாக அய்யம் பேட்டைக்கு வர வேண்டும். ஆனால் அறுவடையாகி, வயலெல்லாம் தரிசாகக் கிடக்கும் காலத்தில், வயலுக்கு நடுவில் வண்டிப் பாதையில் வண்டி வரலாம். இப்படி வையச்சேரியிலிருந்து அய்யம் பேட்டைக்கு வரும் பாதை, குலமங்கலத்தின் வழியாகத்தான் வரவேண்டும்.

இந்தப் பாதையில் ஒரு நாள் பள்ளிக்கூடத்துக்கு வண்டியில் வந்து கொண்டிருந்தாள் மங்களாம்பாள். கன்னிப் பருவத்தை எட்டிப் பிடிக்க இருக்கும் பருவம்; நல்ல வாளிப்பான உடம்பில் சலவை செய்த சிற்றாடையும் பாவாடையும் வர்ணங்களாய்ச் சொரிந்தன. மாநிறமான மேனியானாலும் குறு குறுப்பான முக காந்தியினால் அழகி என்று சொல்லும் படியாக இருந்தது. எஃகுப் பட்டைகள் வெள்ளிப் பட்டைகளாக ஜொலிக்க அடித்திருந்த பெரிய வில்வண்டியில், திருவண்ணாமலை மாட்டுச் சந்தையில் பலவிதமான பேரக் குழப்பங்களையும் தாண்டி வாங்கப்பட்ட உயர்ந்த ரக நெல்லூர்க் காளைகள் பறந்துவர மங்களாம்பாள் அமர்ந்து வரும் அழகே அலாதியாக இருக்கும்.

வண்டிக்காரன் அண்ணாமலை அன்றைக்கு உடம்பு சுகமில்லாமல் இருந்தான். அன்றைக்கு மங்களாம்பாளுக்கு ஸ்கூலில் பரீட்சையாதலால் அண்ணாமலை கட்டாயமாக வண்டி ஓட்டிக்கொண்டு வந்தே தீர வேண்டியிருந்தது. 'குழந்தை பஸ்டு கிளாஸில் பாஸ் செய்ய வேணும். அதை விட எனக்கு உடம்பு பெரிசில்லை' என்று சொல்லிக்கொண்டு வந்துவிட்டான் அவன்.

ஆனால் வண்டி குலமங்கலத்தை நெருங்கும் போதே அவனுக்குக் குளிர் ஜுரம் வந்து விட்டது. கைகளில் பிடித்திருந்த மூக்காணிக் கயிறு நழுவ ஆரம்பித்தது.

அவனுடைய நிலையைப் புரிந்து கொண்டாள் மங்களாம்பாள். "இங்கேயே வண்டியை நிறுத்தி அவிழ்த்து விட்டு விடு, அண்ணாமலை. நான் நடந்தே போய் விடுகிறேன் பள்ளிக்கூடத்துக்கு" என்றாள்.

"இன்னும் இரண்டு கல் தூரம் இருக்கே, அம்மா!" என்றான் அண்ணாமலை. ஜுர வேகம் அவனுடைய பதட்டமான குரலில் தோன்றியது.

"பரவாயில்லை. வண்டியை நிறுத்து!..." என்று உத்தரவிட்டாள் மங்களாம்பாள்.

ஆனால் அடுத்த கணம், "ஏனப்பா, அண்ணாமலை! எனக்கும்தான் பரீட்சைக்கு நேரமாகி விட்டது. நான் வண்டியை ஓட்டிப் போகிறேன். நீ மெதுவாக வா. அங்கே ஸ்கூல் மைதானத்தில் அவிழ்த்து, வைக்கோல் போட்டுவிட்டு நான் போகிறேன்..." என்ற குரல் வண்டியையொட்டி முன்னால் வந்தது.

தலையை எட்டிப் பார்த்தாள் மங்களாம்பாள்.

ஆறுவது பாரத்தில் படித்துக் கொண்டிருந்த சிந்தாமணியேதான்! போன வாரம் வாராந்திர 'மீட்டிங்கில்' 'பெண் கல்வி அவசியமா?' என்ற பேச்சுப் போர் அரங்கத்தில் பிரதான ஸ்தானம் வகித்து, 'பெண்கள் சமூகத்தின் தூண்கள்!' என்று வாதாடிய சூரன் சிந்தாமணியே தான்!

முதலில் மங்களாம்பாளுக்கு வெட்கமாக இருந்தாலும், அண்ணாமலையின் நிலையை உத்தேசித்தும், இன்னும் பத்து நிமிஷத்தில் ஆரம்பமாக இருக்கும் பரீட்சையை உத்தேசித்தும் ஒப்புக் கொண்டாள்.

அண்ணாமலை இறங்கிக் கொண்டான். சிந்தாமணி அவன் ஸ்தானத்தில் போய் உட்கார்ந்து கொண்டான்.

"தம்பி, சிந்தாமணி! நம்ம ஊர்க் காளை ரகம் என்று நினைச்சப்புடாதே. அசல் நெல்

ஜூர் ரகம்; ஜாக்கிரதையாக ஓட்டு!'' என்று எச்சரிக்கை செய்தான் அண்ணுமலை.

"சரி, சரி!" என்றான் சிந்தாமணி.

வண்டி புறப்பட்டது, 'ஜல்ஜல்' என்ற மணி யோசையை எழுப்பிக் கொண்டு.

கொஞ்சம் தூரம் ஓடிற்று. அவன் பேச வேண்டுமென்று அவனுக்கு ஆசை. 'அவன் தான் முதலில் பேசட்டுமே; சமூகத்தில் பெண்களுடைய முன்னேற்றத்தைப் பற்றி அப்படி விளாசினுனே!' என்று அவனுக்கு எண்ணம்.

சமூகத்தில் பெண்களுடைய முன்னேற்ற மானது சிந்தாமணியைத் தோற்கும்படி யாகச் செய்து விட்டது. அவன்தான் சில வார்த்தைகளை உதிர்த்தான்.

"மணி ஒன்பதேமுக்காலாகி விட்டது!"

"ஆமாம்..." என்றான் மங்களாம்பாள்.

"இன்னும் பதினைந்து நிமிஷத்தில் பள்ளிக்கூடத்தில் இருக்க வேண்டும்... ஹை!...ஹை!..." என்று சாட்டைக் குச்சியைத் திருப்பிக் குத்து சக்கரல் காளைகளைக் குத்த ஆரம்பித்தான் சிந்தாமணி.

"மாட்டை வருத்தாதீர்கள். பாவம், வாயில்லா ஜீவன்கள். நமக்குப் பரீட்சை என்று அவைகளுக்குத் தெரியுமா?..."

"ஆமாம். உனக்கு இன்றைக்கு என்ன பரீட்சை?" என்று கேட்டான் சிந்தாமணி.

"கணக்கு!"

"கணக்குப் பரீட்சை என்றால் கணக்குப் பண்ணி முன்னுடியே ஊரைவிட்டுப் புறப் பட வேண்டாம்?"

"உங்களுக்கு இன்றைக்குச் சரித்திரப் பரீட்சை என்பதற்காக மெதுவாகப் புறப் பட்டீர்களாக்கும்!"—மங்களாம்பாள் சரியாகத் திருப்பினுள்.

"சரித்திரப் பரீட்சையாக இருந்தால் போகவே மாட்டேனே! எனக்கும் இன்றைக்குக் கணக்குப் பரீட்சையல்லவா!"


"சரிதான்! ரொம்பக் கணக்குப் பண்ணித்தான் வந்திருக்கிறீர்கள்! ஸ்கூல் மைதானத்தில் வண்டியை அவிழ்த்து விட்டு விட்டு, மாட்டுக்கு வைக்கோல் போட்டு விட்டு நீங்கள் பள்ளிக்கூடத்து ஹாலில் நுழைவதற்குள் பரீட்சை ஆரம்பித்துப் பத்து நிமிஷம் ஆகிவிடும்!"

"கணக்குப் பரீட்சைக்கு வந்தாலும் வராவிட்டாலும் எனக்கு ஒன்றுதான்!..." என்று சொன்ன சிந்தாமணி, "இந்தா... ஹை! ஹை!...ச்சு..." என்று மாடுகளை விரட்டினுன்.

அன்றைக்குப் பரீட்சைக்கு 'லேட்'டாகத் தான் போனுன். கேள்வித் தாளில் கேட்டிருந்த கணக்குகளில் எல்லாம் அவனுக்கு மங்களாம்பாளே தெரிந்தாள்!

அப்படிப்பட்ட மங்களாம்பாளின் ஜாதகம் வந்திருக்கிறது என்றால் சிந்தாமணிக்கும் ஆசையில்லாமல் போய்விடுமா?

ஞாபக மறதி!



தாயும் பிள்ளையுமாகக் கும்பகோணத்திலிருந்து அய்யம்பேட்டைக்கு ரயிலேறினார்கள். ஒரு மணி நேரத்தில் அய்யம்பேட்டை ஸ்டேஷன் வந்து விட்டது.

பட்டாமணியம் வைத்தியநாதனும் வண்டிக்காரன் அண்ணாமலையும் ஸ்டேஷனுக்கு வந்து அவர்களை வரவேற்றார்கள். அண்ணாமலை, சிந்தாமணியைப் பார்த்துப் புன்னகை செய்தான். நேற்று நடந்ததைப் போலவே அவனுக்கு அந்தச் சம்பவம் ஞாபகத்தில் இருந்தது.

“அன்றைக்கு வில் வண்டியைச் சாரத்தியம் பண்ணிய ஆசாமி, இன்றைக்கு மங்களாம்பாளின் வாழ்க்கைத் தேரையே சாரத்தியம் செய்ய வந்து விட்டான்” என்ற சந்தோஷத்தில் கிழவன் அண்ணாமலைக்கு வாயெல்லாம் பல்லாக இருந்தது.

வில் வண்டி புறப்பட்டது, வையச்சேரியை நோக்கி. அப்போதும் வயல்கள் தரிசாகக் கிடந்த காலம். குலமங்கலத்துத் தெருக்கள் வழியாகவே வண்டி சென்றது. சிந்தாமணியின் மனத்தில் சிந்தனை வட்டமிட்டது. மங்களாம்பாள், இந்த நாலு வருஷ காலத்துக்குள் எப்படி மாறியிருப்பாள்? பருவத்தின் பூரிப்பு அவள் உடலில் எப்படிப்பட்ட வசந்த உரு எடுத்திருக்கும்?

இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டு பிடிப்பதில் லயித்திருந்த அவன், எதிரே உட்கார்ந்து கேள்விகளுக்கு மேல் கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்த பட்டாமணியம் வைத்தியநாதனின் கேள்விகளுக்கு ஏதோ தட்டுத் தடுமாறிப் பதில் சொல்லி வந்தான்.

மங்களாம்பாள் நமஸ்காரம் செய்து விட்டு அவன் எதிரே நின்றபோது, உண்மையிலேயே பிரமித்து விட்டான் சிந்தாமணி. அழகு அங்கே அவன் எதிரே கொலுவாக நின்று கொண்டிருந்தது. புஷ்பத்துக்கு நடுவில் புஷ்பமாகவும், இயற்கை மேனிக்கு நடுவில் சுவர்ண மயமான கழுத்தில் 'சவரன்' மாலைகளாகவும் நின்று கொண்டிருந்தாள் சௌபாக்கியவதி மங்களாம்பாள்.

“கொஞ்சம் பாடம்மா...” என்று அம்மா சொன்னது சிந்தாமணிக்குப் பிடிக்கவில்லை. அவளுடைய மதுரமான குரலைத்தான் இதற்குமுன்பே அவன் கேட்டிருக்கிறானே! இப்படி அவளைப் பாடச் சொன்னால் அவள் என்ன நினைத்துக் கொள்ளுவாள்?

அப்போது மங்களாம்பாள் அவனைப் பார்த்த ஒரு பார்வை, “பாட்டு என்ன? கணக்குப் பரீட்சை வைத்தால் கூடத் தேறி விடுவேன். மாட்டை அவிழ்த்துவிட்டு, வைக்கோல் போட்டுவிட்டுச் சென்று பரீட்சையைக் கோட்டை விடமாட்டேன்!” என்று சொல்லுவது போலிருந்தது.

மங்களாம்பாள் பாடினாள்.

அவர்கள் ஸொஜ்ஜி, பஜ்ஜி சாப்பிட்டார்கள். “எல்லாம் குழந்தையே தன் கையால் பண்ணியது” என்று பட்டாமணியம் வைத்தியநாதன் பெருமையோடு சொல்லிக் கொண்டார்.

“அதற்கென்ன, திவ்யமாக இருக்கிறது” என்றாள் சிந்தாமணியின் அம்மா. 'இப்போது அல்லவா நல்ல அம்மா!' என்று நினைத்துக் கொண்டான் சிந்தாமணி.

அவர்கள் விடைபெற்றுக்கொண்டார்கள்.

“ஊருக்குப் போய் நாளைக்கே கடுதாசி போடுகிறோம்!” என்றாள் அவன் அம்மா.

'நாளைக்குக் கடுதாசி போடுவதை இன்றைக்கே வாய் வார்த்தையாகச் சொல்லி விடக் கூடாதா? இந்த அம்மாவுக்கு ஆனாலும் இப்படி 'ரிஸர்வேஷன்' கூடாது...' என்று நினைத்துக் கொண்டான் சிந்தாமணி. 'நாமா இப்படி நினைக்கிறோம்' என்றுகூடச் சிந்தாமணிக்குத் தோன்றியது.


அவர்கள் வாசலுக்கு வந்தார்கள்.

'பளிச்' என்று சிந்தாமணிக்கு ஒரு காட்சி முன்னால் தெரிந்தது.

வாசலையொட்டி யிருந்த 'காமரா' அறையின் ஜன்னலண்டை அவள்—மங்களாம்பாள்தான் — நின்று கொண்டிருந்தாள். மாட்டின் மூக்கணாங் கயிற்றைப் பிடித்து இழுப்பதுபோல் பாவனை செய்து, சிந்தாமணியைப் பார்த்துக் கேலியாகச் சிரித்து விட்டு ஜன்னலிலிருந்து மறைந்துவிட்டாள்.

சிரஞ்சீவி சிந்தாமணிக்கும் சௌபாக்கியவதி மங்களாம்பாளுக்கும் சுபமானதொரு முகூர்த்தத்தில் வையச்சேரியில் கல்யாணம் விமரிசையாக நடக்கவே செய்தது.

அவனுடைய நண்பர்களும், “சிந்தாமணிக்கு ஈடு சிந்தாமணிதான்!” என்று கொஞ்சம்கூட ஆட்சேபணை இல்லாமல் ஒப்புக் கொண்டார்கள்.



முன்பு
"என் உடைகள் சீக்கிரமாகக் கிழிந்துவிட்டன !"
இப்போது
"என் உடைகள் சுத்தமான வாஷ்வெல் பார் சோப்பை உபயோகிப்பதால் அதிக வெண்மையாக இருப்பதுடன் அதிக நாள் நீடித்து வருகின்றன.
K.S.49
நூறு சதவிகிதம் சுத்த எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட வாஷ்வெல் பார் ஸோப், உடைகளில் அழுக்குகள் அடையாமல் தடுப்பதற்கு உத்தரவாதமாக இருப்பதுடன், அடிக்காமலும் கசக்காமலும் உடைகள் முற்றிலும் சுத்தமாக வெளுக்கும்படி செய்கின்றன.
எனவே, வாஷ்வெல் சோப் உங்களுடைய உடைகளை நன்றாக வெளுப்பதுடன் நீடித்த காலம் உழைக்கவும் உதவியாக இருக்கிறது.
கேரளா
வாஷ்வெல் பார் ஸோப்
சுத்தமான எண்ணெ மூலப்பொருள்
WASHWELL BAR SOAP
கேரளா சோப் இன்ஸ்டிட்யூட்
கோழிக்கோடு
சென்னை சர்க்கார் கைத்தொழில் &
வியாபார இலாக்காவின் ஒரு பகுதி



பாக் செய்யப்படாத வில்லைகளை வாங்குவதில் ஜாக்கிரதையாய் இருங்கள்!

பாக் செய்யப்படாத வில்லைகள் வயிற்றுக் கோளாறு செய்யும் அமிலப் பொருள்களை உண்டாக்கக்கூடியதால், புதிய 'ஆஸ்ப்ரோ' வில்லைகளை ஆவியினின்றும் நீர்த்திவலைகளினின்றும் பாதுகாக்கும் பொருட்டுத் தனித்தனியாக சீல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் புதிய 'ஆஸ்ப்ரோ' அபாயமில்லாதது. இது இருதயத்தையோ, வயிற்றையோ பாதிக்காது. துர்ப்பழக்கம் ஏற்படுத்தக் கூடிய மருந்துகள் இதில் கிடையாது.

நவீன முறையில் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட புதிய 'ஆஸ்ப்ரோ' துரிதமாக வேலை செய்கிறது. அதனால் தலைவலி, உடம்புவலி, ஜலதோஷம், ஜுரம் முதலியவைகளினின்றும் நிவாரணமளிக்க, சாப்பிட்ட மூன்று விநாடிகளில், அதனுடைய வேலையைத் துரிதமாக ஆரம்பிக்கிறது.

அபாயமில்லாத துரித நிவாரணம் உங்களுக்குக் கிடைக்கும் —

புதிய 'ஆஸ்ப்ரோ' வில்லை



'ஆஸ்ப்ரோ' ஸீல்டைட் துண்டுகளையே வாங்குங்கள்.

★ வயிற்றுக் கோளாறு உண்டாக்கும் அமிலப் பொருள்களிலிருந்து காப்பாற்றும்.

★ எப்பொழுதும், எந்த சமயத்திலும், எந்த இடத்திலும் எளிதாக உபயோகிக்க கையில் எடுத்துச் செல்லக் கூடியது.

★ அல்பமான, ஆரோக்கியமுள்ள மூன்று வில்லைகளின் விலை இரண்டு அணாதான்.

278

கடைகளில் விற்கப்படும் எல்லா 'ஆஸ்ப்ரோ' வில்லைகளும் புதிய 'ஆஸ்ப்ரோ' வில்லைகளே.

டி.கே.சியின் கடிதங்கள்

எஸ். மகராஜன்

ரஸிகமணி மாணவனாக இருந்த காலம். சுமார் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன். அந்தக் காலத்துத் தமிழ் வசனநடை, ரொம்பப் படித்தவர்கள் கையிலகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த, வழக்கொழிந்த தமிழ்ச் சொல்லில்,நவநாகரிகக் காட்சிகளைவருணித்துக் கொண்டிருந்தார்கள், நாவலாசிரியர்கள் கூட.

தங்கசாலை வீதியிலே நடக்கும் காதல் காட்சியை, சங்க இலக்கியத்தைக் கரைத்துக் குடித்த முதுபெரும்புலவர் ஒருவர், கீழ்க்கண்டவாறு வர்ணிக்கிறார் :—

"அவ் வீட்டின் மாடத்தும்பர், ஓர் அறையின் கண்ணே யின்னிசைப் பாட்டும், மன்னிசைக் கல்வியும் வல்லளாய், எழிலும் குணமும் மிடைந்த பூங் கொம்பராய் மிளிர் தரும் ஓர் இளம் பருவத்துப் பெண் தனது வார்குழல் கோதி முடித்துக் கொண்டு நின்றாள். அப்போழ்தத்து. கரிய மாலனைய காளை யொருவன் அவட்குப் பின்புறல் போந்து. அவடன் விழிகளிரண்டையும் தன்னிருகையா லிறுகப் புதைத்துக் கொண்டு நின்றான். அன்னணம் ஒருவன் கண் புதைத்த துணர்ந்த அந் நங்கை, 'நீ என்னைத் தொடற்பாலை யல்லை' என்றனள்."

இப்பேர்ப்பட்ட கரடுமுரடான, விறைத்துப்போன பாஷையிலே நாடோடி சம்பவங்களைத் தமிழாசிரியர்கள் விஸ்தரித்து வந்தார்கள். பிரம்மாண்டமான சர்க்கஸ் யானை, ஐம்பொறிகளையும் அடக்கி ஒருமுகப்படுத்திக் கீழே கிடக்கும் பட்டாணிக் கடலையை எடுப்பதில் மூக்கி முனைந்து எப்படித் திக்குமுக்காடுமோ அப்படி அவஸ்தைப் பட்டார்கள் அந்தக் காலத்துத் தமிழ் எழுத்தாளர்கள். கருத்துக்கு ஒவ்வாத வார்த்தைப் படாடோபமும், திருகுமுருகலும், சுவையற்ற கோணல்த் தமிழும் புலமை வேஷம் போட்டுக்கொண்டு நடமாடிய காலம் அது.


அந்தக் காலத்தில் பள்ளி மாணவனாக இருந்த ரஸிகமணிக்கு இந்தக் கொடுங்கோன்மையெல்லாம் தாங்க முடியவில்லை; உரைநடை எப்படி யிருக்க வேண்டும் என்ற ஆராய்ச்சியில் இறங்கி, சில முடிவுகளுக்கு வந்தார்கள். எடுத்துக் கொண்ட விஷயத்தை, உண்மையோடும், நேருக்கு நேர் சொல்லக் கற்றுக் கொள்ள வேண்டும். கருத்தும், சொல்லும் சுகமாய்க் கலந்து கை கோத்து நடக்க வேண்டும். அடுப்பங்கரையில் பெண்கள் பேசுகிற தமிழிலே எவ்வளவு ஆற்றலும், உணர்ச்சியும் இருக்கின்றன. நாட்டுப்புறத்திலே பட்டிக்காட்டான் பேசுகிற தமிழிலே வகை வகையான சுவை யிருக்கிறதே. விஷயத்தைக் குறி பார்த்து அடித்தமாதிரி யல்லவா, அவன் சொல்லி விடுகிறான். இதை யெல்லாம் சிரத்தையோடு தமிழ்ப் புலவர்கள் ஆராய்ந்து கொச்சையை அகற்றி விட்டு, நாடோடித் தமிழிலுள்ள ரஸத்தைப் பிழிந்து தமிழ் வசனத்தில் பெய்து விட வேண்டும். அப்போதுதான் தமிழ் எழுத்துக்கு வல்லமையும், வளமும் ஏற்படும் என்று டி. கே. சி. வற்புறுத்தி வந்தார்கள். பேச்சுத் தமிழின் வளைவு, நெளிவுகளோடும், பம்மல் பாய்ச்சல்களோடும் பழகினால்தான், ஒரு எழுத்தாளனுடைய தனித் தத்துவம், அவனுக்கே உரிய நடையில் வெளிப்படும். நடை என்றால் என்ன என்பதை அபூர்வமான தெளிவோடும், அதிகாரத்தோடும் ரஸிகமணியின் கடிதம் கீழ்க்கண்டவாறு விளக்குகிறது :

"ஆங்கில ஆசிரியர்கள் 'ஸ்டைலை'ப் பற்றி என்ன எல்லாமோ எழுதுகிறார்கள். எழுத்தில் முக்கியமான காரியம் அதுதான் என்று சொல்லுவார்கள். ஆனால், அது எளிதில் அமைகிறதில்லை என்றும் சொல்லுவார்கள். ஆங்கில ஆசிரியர்களது ஸ்டைல் இன்னது, இப்படி இருக்கிறது என்றும் நமக்கு எளிதில் தெரிகிறதில்லை. ஏதோ தெரிகிறது—இருட்டுக்குள் ஆனை இளங் காணுகிற கணக்கில்த்தான்.

ஆனால் தமிழுக்கு வந்தால் (பண்டித உலகத்தை விட்டு வெளியேதான்) இன்னது ஸ்டைல் என்று லகுவாய்த் தெரிகிறது. ஏன், அன்னம்மாள் தங்கம்மாளுக்கு எழுதிய கடிதத்தில் அவளுடைய தனித் தத்துவம் வெகு ஜோராய்த் துள்ளி ஓடுகிறது. கருத்தும் சொல்லும் சுகமாய்க் கலந்து கை கோத்து நடக்கின்றன. பெண் குழந்தைகளைப் பார்த்து நாம் பயப்பட வேண்டியதாய்த்தான் இருக்கிறது.

கவி என்பதற்கு வந்தால் கம்பரிடத்தில்த்தான் ஸ்டைல் என்று சொல்ல வேண்டி யிருக்கிறது. தற்காலத்துக் கவியில் தேசிக விநாயகம் பிள்ளை அவர்களது கவியில்த்தான் ஸ்டைல் இருக்கிறது. கவியில் அவர்களது எளிய தூய உள்ளம் பளிங்கில் வைத்தமாதிரி தெரிகிறது.

அவர் யோசனை!








ஆனாலும் இந்த ஸ்டைலில் ஒரு சங்கடம் இருக்கிறது. அதாவது எழுதுகிறவர்க்கு அது தெரியாது என்று சொல்லலாம். ஏனென்றால் அவருக்கே தெரியாமல் அனாயாசமாய் வருவது அது. நாம் தெருவிலோ, ரோட்டிலோ நடந்து போகிறோம் (மிலிட்டரி மார்ச் அல்ல.) இயல்பாக நடக்கிறோம். அந்த நடையில் நூற்றுக் கணக்கான அம்சங்கள் இருக்கின்றன. ஏன் இருக்காது. உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையும் எத்தனையோ எலும்புக் கட்டுகள், தசைகள், நரம்புகள் எல்லாம் சேர்ந்து ஒரு கணக்குப்படி ஒத்து வேலை செய்கின்றன. நாம் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லலாம்.

ஆனால் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் நடையின் தனிப் பண்பை உடனே கண்டு கொள்ளுகிறார்கள். ஆயிரம்பேர் நடந்து போய்க் கொண்டிருக்கலாம். ஆனாலும், நம் முகத்தைப் பாராமலே, நம்முடைய நடையை இனம் கண்டு கொள்ளுகிறார்கள். நடையில் (உடம்பு சம்பந்தமாகத்தான்) எல்லாருக்கும் ஸ்டைல் வந்து விடுகிறது. காரணம் என்ன! பாடமாக வைத்துப் பள்ளிக்கூடத்தில் நடையைக் கற்பிப்பதில்லை. ஆனால், எழுத்தில் ஸ்டைல் வர மாட்டேன் என்று சாதிக்கிறது. பள்ளிக்கூடத்துப் பயிற்சிதான் காரணம். மனுஷ தத்துவத்தை எடுத்துவிட்டு, எந்திர தத்துவத்தை மாணவர்களுக்குள் புகுத்திவிடுகிறது. இந்த எந்திர தத்துவத்தின் கோணல்கள், "முத்தி, முத்தி"க் கடைசியில் பரிமேலழகர், நச்சினார்க்கினியர்களாக முடிகின்றன.

நடையில் ஸ்டைல் இருக்கவேண்டும் என்றால் (கால் இருந்தால் போதாது) உடலுக்குள் உயிர் இருக்க வேண்டும். அது போல எழுத்தில் ஸ்டைல் இருக்க வேண்டும் என்றால் (வார்த்தைகள் இருந்தால் போதாது) உள்ளத்தில் உயிர், அதாவது உண்மை உணர்ச்சி இருக்க வேண்டும்.

ஏதோ "டைம்ஸ் சப்ளிமென்டுக்கு"க் கட்டுரை எழுதுவது போல் எழுத்து நீண்டு விட்டது. பிள்ளையார் இப்படி ஆயிற்று. இருக்கட்டும். தாங்கள் இருக்கும்போது, எந்தக் கஷ்டமான விஷயத்தையும் தைரியமாய் எழுதத் தோன்றுகிறது. பேசக்கூடத் தோன்றும் அல்லவா! அப்படியே எழுதவும் தோன்றுகிறது."

மேற்கண்ட கடிதத்தைப் படிக்கும்போது, பேச்சைக் கேட்பது போன்ற பிரமை நமக்கு ஏற்படுகிறது. ஆனால் பேச்சுத் தமிழை அப்படி அப்படியே காகிதத்தில் எழுதிவிட்டால்,சுவையுமிருக்காது; ஸ்டைலும் இருக்காது. டி.கே.சி. கடிதத்திலுள்ள ஒவ்வொரு சொல்லிலும், எழுத்திலுமே பொருள் முட்டித் ததும்பிக் கொண்டு நிற்கிறது; அபாரமான தெளிவும் உணர்ச்சியும், ஒளியும் இருக்கிறது. வெறும் கொச்சைப் பேச்சை வைத்துக் கொண்டு இந்த மாதிரி ஜால வித்தைகள் பண்ணி விட முடியாது. வருஷக் கணக்கிலே. பேச்சுத் தமிழின் உயிர் நிலையை ஆராய்ந்து, அதன் மர்ம ஸ்தானத்தை உணர்ந்து அனுபவித்து, இந்த அனுபவத்தால் பெற்ற மொழி அறிவைக் கலைப் பாங்கோடு கையாளக் கற்றுக் கொண்டால்தான், டி. கே. சி. யைப் போல, பேச்சுத் தமிழுக்கு எழுதும் வன்மையைக் கொடுக்க முடியும்.





பம்பாயில் கலை விழா

சென்ற ஜனவரி மாதம் கந்தர்வ லோகமே பூலோகத்துக்கு வந்து விட்டதோ என்று வியப்புறும் வண்ணம் இருந்தது ஸ்ரீ ஷண்முகானந்த சங்கீத சபாவின் சங்கீத நாட்டிய நாடக விழா.

சுமார் ஆறுயிரம்பேர் அமர்ந்து கச்சேரி கேட்கும்படி அற்புதமான முறையில் சங்கீத அரங்கை அமைத்திருந்தனர்.

விழா வழக்கம்போல் தியாகராஜர் பூஜையோடு காருகுறிச்சி திரு அருணாசலம் குழுவின் நாகஸ்வர இசையுடன் ஆரம்பமாயிற்று. இந்த ஆண்டு சங்கீத விழாவுக்கு இந்திய சர்க்கார் செய்தி, ஒலிபரப்பு இலாகா மந்திரி திரு கேஸ்கர் தலைமை வகித்துச் சிறப்பித்தார்.

நாடக விழாவுக்கு டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் தலைமை வகித்தார். விழாவில் கலந்து கொண்ட கலைஞர் குழுவினரையும் விழாக் காட்சிகள் சிலவற்றையும் படத்தில் காணலாம்.

1. ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் கச்சேரி. 2, 5. நாடகக் கலைஞர் திரு டி. கே. ஷண்முகம் குழுவினருக்குப் பம்பாயில் ''கல்கி'' கிளைக் காரியாலயத்தில் நடைபெற்ற வரவேற்பு உபசரிப்புக் காட்சிகள். 3. ஸ்ரீமதி கமலாவின் பரத நாட்டியம். 4. திரு கேஸ்கர் பேசுகிறார். 6. அரியக்குடியின் இன்னிசைக் கச்சேரி. 7. செம்மங்குடியின் இசை விருந்து. 8. சபா ரஸிகர்களின் கூட்டம். 9. மதுரை மணி ஐயரின் இன்னிசை.





ஏழு வயதுப் பெண்

இரு சகோதரர்கள் ஒரு சமயம் யாத்திரை போனார்கள். இவர்களில் ஒருவன் பணக்காரன்: மற்றவன் ஏழை. ஏழை ஒரு பெண் குதிரையை வைத்திருந்தான்; பணக்காரன் ஆண் குதிரையை வைத்திருந்தான். இரவு நேரம் கழிப்பதற்காக அவர்கள் ஓரிடத்தில் தங்கினார்கள்.

இரவில் ஏழையின் குதிரை ஒரு குட்டியை ஈன்றது. அந்தக் குதிரைக் குட்டி உருண்டு உருண்டு போய்ப் பணக்காரனின் வண்டியின் பக்கத்தில் போய்க் கிடந்தது. அதனால் மறுநாள் காலை பணக்காரன் தன் ஏழைச் சகோதரனை எழுப்பி, "தம்பி, எழுந்திரு! எழுந்திரு! என் வண்டி நேற்று ராத்திரி ஒரு குதிரைக் குட்டியை ஈன்றிருப்பதைப் பார்" என்றான்.

ஏழை எழுந்திருந்தான். "வண்டி எப்படிக் குட்டி போடும்? என் பெண் குதிரையல்லவா குட்டி போட்டிருக்க வேண்டும்!" என்றான் ஏழைச் சகோதரன்.

"உன் குதிரை ஈன்றிருந்தால், அந்தக் குட்டி உன் குதிரையின் பக்கத்தில் அல்லவா கிடக்கும்!" என்றான் பணக்காரன்.

இப்படி அவர்களுக்குள் சண்டை மூண்டது. இருவரும் நியாயம் பெற நீதி மன்றத்துக்குப் போனார்கள். பணக்காரன் நீதிபதிகளுக்கு நிறைய லஞ்சம் வழங்கினான். ஏழைக்கோ, உண்மையைத் தவிர வேறு ஒன்றும் இருக்கவில்லை. கடைசியில் வழக்கு ஸார் அரசன் முன்னிலைக்கே போய் விட்டது. ஸார் மன்னன் இரு சகோதரர்களுக்கும் சொல்லியனுப்பி வரவழைத்தான். இருவருக்கும் நான்கு புதிர்கள் போட்டான்: "உலகிலேயே மிகுந்த பலமும் வேகமும் கொண்டது எது? மிகுந்த பருமனுடையது எது? மிகுந்த மிருதுவானது எது? மிகுந்த அன்புக்குரியது எது?" என்று கேட்டு விட்டு இவற்றிற்கு விடை கண்டு பிடித்துக் கொண்டு வர மூன்று நாட்கள் அவகாசமும் கொடுத்தான்.

மொழிபெயர்ப்பு: எஸ்.வி.எஸ்

பணக்காரன் சற்று நேரம் யோசித்தான். அவனுக்கு ஊர் வம்பு பேசும் தன் சினேகிதியின் ஞாபகம் வந்தது. அவளைக் கலந்து ஆலோசித்தால் இப் புதிர்களுக்கு விடை கிடைத்துவிடும் என்று முடிவு செய்து அவளைத் தேடிக் கொண்டு போனான்.

வம்புக்காரியின் வீட்டையடைந்ததும் அவன் மிகுந்த உபசாரம் செய்து வரவேற்றான். பிறகு, "ஏன் உன் முகத்தில் இவ்வளவு சோகம் குடி கொண்டிருக்கிறது?" என்று கேட்டான்.

"அதை என்னவென்று சொல்லுவேன்! ஸார் மன்னன் எனக்கு நான்கு புதிர்கள் போட்டிருக்கிறார். அதற்குச் சரியான விடையளிக்க மூன்றே நாட்கள்தான் அவகாசம் கொடுத்திருக்கிறார்!" என்று துயரம் நிரம்பிய குரலில் சொன்னான்.

"அப்படியா! அவை என்ன, என்ன சொல்லு, பார்ப்போம்!" என்றான்.

"முதல் புதிர் இதுதான்: 'உலகத்திலேயே மிகுந்த சக்தியும் வேகமும் பொருந்தியது எது?' என்பதுதான்!"

"புதிராம் புதிர்! இதற்கு விடை என் கணவரின் சிவப்புக் குதிரைதான்! சாட்டையால் ஒரு தட்டுத் தட்டினால் போதும், என்ன வேகமாக ஓடும் தெரியுமா? முயலைக் கூடத் தோற்கடித்துவிடும்!" என்றான்.

"சரி, இதோ இரண்டாவது புதிர்: உலகிலேயே மிகுந்த பருமனானது எது?" என்று கேட்டான். இதற்கும் அந்த அம்மான் யோசிக்கவில்லை.

"நாங்கள் வளர்க்கும் இரண்டுவயதுப் பன்றிதான். அது இப்பொழுதே எவ்வளவு பருத்து விட்டது தெரியுமா? அது

எழுந்து தன் கால்களில் நிற்கக்கூட முடியாத அளவுக்குப் பருத்துவிட்டது'' என்றான்.

"அப்புறம், மூன்றாவது புதிர்: 'மிகுந்த மிருதுவான பொருள் எது?'" என்றான்.

"இறகு மெத்தைதான்! அதைவிட மிருதுவானது இருக்கமுடியும் என்று கனவிலாவது நினைக்க முடியுமா?" என்றான்.

"சரி, கடைசிப் புதிர்: 'உலகிலேயே மிகுந்த பிரியமானது எது?'"

"என் பேரன் இவானுஷ்காதான். அவன்தான் பிரியமானவன்!"

"எனக்கு இப்பொழுது விடைகள் தெரிந்து விட்டன! தாயே, உனக்குக் கடவுள் நீண்ட ஆயுள் தரட்டும்!" என்று வாழ்த்தி விட்டுப் புறப்பட்டான்.

ஏழையோ அழுது கொண்டே வீட்டுக்குப் போனான். அவனுக்கு ஒரு ஏழு வயதுப் பெண் உண்டு. அந்தப் பெண்ணைத் தவிர வேறு யாரும் கிடையாது. அவள்தான் அவனை வீட்டு வாசலிலேயே வரவேற்றாள்.

"அப்பா! நீ ஏன் பெருமூச்சு விட்டுக் கொண்டும், அழுது கொண்டுமிருக்கிறாய்?" என்று அந்த ஏழு வயதுப் பெண் மிகுந்த பரிவுடன் கேட்டாள்.

"அம்மா! நான் அழாமல் என்ன செய்வேன்? ஸார் மன்னன் நான்கு புதிர்கள் போட்டிருக்கிறான். அதற்கு விடை ஆயுள் முழுதும் யோசித்தாலும் கண்டு பிடிக்க முடியாதே!" என்று அங்கலாய்த்தான்.

"அந்தப் புதிர்கள் என்னவென்ன, அப்பா?" என்று கேட்டாள் பெண்.

"குழந்தை, இவைதானம்மா!" என்று புதிர்களை ஒவ்வொன்றாகச் சொன்னான்.

இவற்றைக் கேட்டதும் பெண் சொன்னாள்: "அப்பா, இதற்காகக் கவலைப்படாதீர்கள். நீங்கள் ஸார் அரசனிடம் நேரே போய், அவர் கேட்ட புதிர்களுக்குப் பின்வருமாறு பதில் சொல்லுங்கள். உலகில் மிகுந்த பலமும் வேகமும் கொண்டது காற்று. பருமனானது பூமி; ஏனெனில், அதன் மீது வசிப்பவர்களையும், அதில் வேரூன்றி வளர்பவைகளையும் உணவூட்டிக் காப்பாற்றுகிறது. எவ்வளவு மிருதுவான படுக்கையில் படுத்துக் கொண்டாலும் மனிதன் தன் தலைக்கடியில் கையைத்தான் வைத்துக் கொள்ளுகிறான். அதனால் உலகிலேயே மிகுந்த மிருதுவானது கை. உலகிலேயே எல்லாருக்கும் பிரியமானது தூக்கம் என்று பதில் சொல்லி விட்டு வாருங்கள்" என்றாள்.

இரு சகோதரர்களும் ஸார் முன்னிலையில் தோன்றித் தங்கள் தங்கள் விடைகளைக் கூறினார்கள். அதைக் கேட்ட ஸார் மன்னன் ஏழையைப் பார்த்து, "இந்த விடைகள் நீயாக ஊகித்தவையா, அல்லது வேறு யாராகிலும் சொல்லிக் கொடுத்தார்களா?" என்று கேட்டான்.



சமீபத்தில் ஆலந்தூர் ஆர்ட்ஸ் அகாடமியில் நடைபெற்ற தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை விழாவில் முன்னாள் லெப்டினன்ட் கவர்னரும், நிதிகமிஷனின் தலைவருமான திரு கே. சந்தானம் தியாகராஜசுவாமிகளின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

"மேன்மை பொருந்திய மன்னரே! எனக்கு ஒரு பெண் இருக்கிறாள். அவளுக்கு வயது ஏழு. அவள்தான் இப்புதிர்களுக்கு விடைகளைக் கற்றுக்கொடுத்தாள்."

"உன் பெண் அவ்வளவு புத்திசாலியா? அப்படியானால் இந்தப் பட்டு நூலைக் கொண்டு அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு துண்டாக அவளைப் பின்னச் சொல்லி, எடுத்துக் கொண்டு வா!" என்றான் ஸார் மன்னன்.

ஏழை அந்தப் பட்டு நூலை வாங்கிக் கொண்டு சோகமே உருவமாக வீட்டுக்குப் போனான். தன் பெண்ணைப் பார்த்து, "நமக்குச் சொல்லி முடியாத கஷ்டம் வந்திருக்கிறது. இந்தப் பட்டு நூலைக் கொண்டு துண்டைப் பின்ன வேண்டும் நீ என்று ஸார் கட்டளையிட்டிருக்கிறார்" என்றான்.

"இதற்காக வருத்தப் படாதீர்கள்" என்றாள் அந்த ஏழு வயதுப் பெண்.

அவள் ஒரு குச்சியை எடுத்துத் தன் தந்தையிடம் கொடுத்து, "அப்பா, இதைக் கொண்டு போய் மன்னரிடம் கொடுத்து, இந்த நூலை நெய்வதற்கு இக்குச்சியைக் கொண்டு தறி செய்யக் கூடிய தொழிலாளியைக் கண்டுபிடிக்கச் சொல்லுங்கள்!" என்று கூறினாள்.

அவனும் அரசனிடம் போய்த் தன் மகள் கூறியதைத் தெரிவித்தான். அடுத்தாற்போல் நூற்றைம்பது முட்டைகளைக் கொடுத்து, "இவற்றை உன் மகளிடம்

கொண்டு போய்க் கொடுத்து, நாளைக் காலைக்குள் அடைகாத்து எனக்கு நூற்றைம்பது குஞ்சுகள் அனுப்பி வைக்கச் சொல்" என்றான் மன்னன்.

ஏழை முன்னைவிடத் துயரம் தோய்ந்த முகத்துடன் வீட்டுக்குத் திரும்பினான்.

ஏழு வயதுப் பெண், "இதற்காக வருத்தப்படாதீர்கள், அப்பா!" என்று தேற்றினாள். பிறகு தன் தந்தையைப் பார்த்து, "அப்பா! ஸார் மன்னனிடம் போய் இக் குஞ்சுகளுக்கு 'ஒருநாள்–சோளம்' தேவைப்படுகிறது என்று கூறுங்கள். அதாவது, வயலை உழுதல், விதைத்தல், விளைதல், அறுவடை செய்தல், போரடித்தல் ஆகிய எல்லாக் காரியங்களும் ஒரே நாளில் முடிந்த சோளமாக இருக்க வேண்டும் என்று கூறுங்கள்! இல்லாவிட்டால் இந்தக் குஞ்சுகள் தொடாது என்று கூறி விடுங்கள்" என்றாள்.

இந்த விஷயத்தை ஸாரிடம் கூறினான்.

"உன் மகள் இவ்வளவு புத்திசாலியா! அப்படியானால் நாளை அவளை இங்கே வரச் சொல். வரும்போது அவள் உடை உடுத்தியும் வரக் கூடாது, உடை உடுத்தாமலும் வரக் கூடாது; காலால் நடந்தும் வரக் கூடாது, குதிரைமீதும் வரக்கூடாது. எனக்குப் பரிசுப் பொருள் கொண்டு வரவும் கூடாது, கொண்டு வராமலும் இருக்கக் கூடாது!" என்றான்.

இதைப் பற்றி யோசித்தான் ஏழை. "புத்திசாலியான என் பெண்ணால் கூட நிறைவேற்ற முடியாத தந்திரமாக அல்லவா இருக்கிறது! இனி நான் தொலைந்து போனேன்" என்று தீர்மானித்தான்.

ஆனால் அவனுடைய பெண் சொன்னாள். "அப்பா வருத்தப்படாதே! வேடர்களிடம் போய் எனக்கு ஒரு உயிரோடு கூடிய முயலையும் ஒரு காடைப் பறவையையும் வாங்கி வாருங்கள்" என்றாள். அப்படியே அவனும் வாங்கி வந்தான்.

மறுநாள் காலை அந்த ஏழு வயதுச் சிறுமி தன் ஆடைகளைக் களைந்து எறிந்து விட்டு, மீன் வலையை உடலில் சுற்றிக் கொண்டாள். கையில் காடையைப் பிடித்துக் கொண்டாள். முயலின் மீது உட்கார்ந்து கொண்டு, அரமனைக்குப் போனாள்.

ஸார் மன்னன் அவளை அரமனையின் வாசலிலேயே சந்தித்தான். அந்தப் பெண், மன்னனைப் பார்த்ததும் வணக்கம் செலுத்தி "அரசே, இதோ உங்களுக்கொரு பரிசு!" என்று காடையை நீட்டினாள். அரசன் அப்பறவையைப் பிடிக்கும் தறுவாயில், அது வான வெளியில் பறந்து தப்பிவிட்டது!

"பேஷ்!" என்றான் மன்னன். "நான் சொன்னபடியே எல்லாம் செய்து விட்டாயே! சரி, இப்பொழுது எனக்கு இந்த விஷயத்தைச் சொல்! உன் தகப்பனார் பரம ஏழை என்பது எனக்குத் தெரியும். பின் நீ சாப்பாட்டுக்கு என்ன செய்கிறாய்?"

"என் தந்தை ஆற்றில் வலை வீசுவதில்லை. வறண்ட பூமியில்தான் வலை வீசி மீனைப் பிடிக்கிறார். அந்த மீன்களை நான் வீட்டுக்கு என் மடியில் கட்டிக் கொண்டு போகிறேன்......" என்றாள்.

"அசட்டுப் பெண்ணாக இருக்கிறாயே! எந்த தேசத்தில் வறண்ட நிலத்தில் மீன் இருப்பதைப் பார்த்திருக்கிறாய்! அசடு! மீன்கள் தண்ணீரில் அல்லவா வசிக்கும்!" என்றான் மன்னன்.

"ஆனால் தாங்கள் அறிவாளியாயிற்றே! தாங்கள் எங்கே வண்டி குட்டி போடப் பார்த்திருக்கிறீர்கள்? பெண் குதிரை அல்லவா குட்டி போடும்!" என்றாள்.

இதைக் கேட்ட பிறகு மன்னன் குதிரைக் குட்டியை அந்த ஏழைக்குக் கொடுத்து விடும்படி உத்தர விட்டான்!

சென்னை எழும்பூரில் உள்ள "இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி"யின் ஆதரவில் நடைபெற்று வரும் பரதநாட்டியப் பள்ளியை அனைவரும் அறிந்திருப்பார்கள். பந்தணைநல்லூர் பாணியில் பயின்ற நட்டுவ ஆசிரியர் திரு சொக்கலிங்கம் பிள்ளையின் தலைமையில் இந்தப் பள்ளி நடைபெற்று வருகிறது. இதில் டாக்டர் ரத்னவேலு சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி குமாரி சுசரிதா பரதநாட்டியம் பயின்று, பன்னிரண்டு வயதுக்குள்ளாகவே அமெரிக்கா முதலிய நாடுகளுக்



கெல்லாம் சென்று பரத நாட்டியம் ஆடிப் புகழ் பெற்றிருக்கிறார். சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி இதய நோய் சிகிச்சைக்காக நிர்மாணிக்கவிருக்கும் தனிப் பகுதிக்காகக் குமாரி சுசரிதாவின் பரத நாட்டிய உதவிக் கச்சேரி ஒன்று இம் மாதம் நடைபெற விருக்கிறது.

ரஸிகர்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் குமாரி சுசரிதாவின் நாட்டியத்தைப் பார்ப்பதன் மூலம் நல்ல பரதநாட்டியம் பார்த்த திருப்தியுடன் இதய நோயாளிகளுக்கு உதவிய புண்ணியத்தையும் பெறலாம்.



அந்த இருமலை நிறுத்துக-

தொண்டை ரணத்தை சமனமூட்டி குணப்படுத்துக. மார்பு மற்றும் சுவாசப்பை அடைப்பை நீக்குக. எல்லாம் க்ஷணத்தில் முடிக்க.



PEPS

பெப்ஸ் சாப்பிடுங்கள்.

உலக பிரசித்தி பெற்ற

தொண்டை, மார்புவலி நிவாரண மாத்திரைகள்.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



பெப்ஸ் தொண்டை, மார்புவலி நிவாரண மாத்திரைகளில் சமனமூட்டி, குணப்படுத்தும் சரக்குகள் அடங்கியுள்ளன. பெப்ஸை சுவைக்கும்போது இந்த சரக்குகள் ஆவியாக மாறி ஸ்வாசத்துடன் தொண்டை, சுவாசக்குழாய் மூலமாக சுவாசப் பைக்குச் செல்லும் நோயின் ஆரம்ப ஸ்தானத்திற்கே சென்று வேலை செய்கின்றன. இதனால்தான் பெப்ஸ் கைகண்ட ஔஷதமாயும் உலக பிரசித்தி பெற்றும் விளங்குகின்றது. பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டை ரணத்தை சமனமாக்கி, கபத்தை உடைத்து அடைப்பை நீக்குவதுடன் இன்ப்ளூயன்ஸா மற்றும் பிரசங் [illegible] சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.

மதராஸுக்கு ஸோல் ஏஜண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்

நான் அறிந்த ரஸிகமணி

ஸி. ரங்கராஜன்

என் தந்தையார் பால ஸரஸ்வதி கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் பல வருஷங்களுக்கு முன், 'என் அத்தை' என்ற தலைப்பில் பத்துப் பாடல்களை, ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் அத்தை மீது செய்து அரங்கேற்றினார்கள். சாதாரணமாகப் புலவர் குழாத்திடை 'கையறு நிலை'ச் செய்யுளாகக் கருதப்பட வேண்டிய அவை இலக்கியப் புகழ் பெறும்படியாகச் செய்தவர் ரஸிகமணி டி. கே. ஸி. அவர்கள்தாம்.

ரஸிகமணி அவர்களைப் பற்றி நான் கண்டும், கேட்டும் அறிந்த விஷயங்கள் பல. அவற்றில் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ரஸிகமணி அவர்கள் முதன் முதலாகப் பதிப்பித்து வெளியிட்ட கம்பராமாயணப் புத்தகத்தை நான் படித்து அனுபவித்துக் கொண்டிருந்தேன். சில பாட பேதங்கள் அதிலே உள்ளன. பாட்டின் ஸ்வரூபத்தையே சில இடங்களில் மாற்றியிருக்கிறார்கள். ஏட்டுப் பிரதிகளின் ஆதாரமில்லாமல் கூட அப்படிச் செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்ததற்குக் காரணமும் காட்டியிருக்கிறார்கள்.

ஆனால் பண்டிதர்கள் அதனை ஒத்துக் கொள்ளவில்லை. ஏட்டுப் பிரதிகளில் காணப்படாத பாட பேதங்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த மாதிரியான பாடல்களில் ஒரு பாடல் :

"மாதர்கள் கற்பின் மிக்கார்
கோசலை மனத்தை ஒத்தார்"

என்று தொடங்குகிறது பாட்டு. இந்தப் பாட்டின் கடைசி மூன்று அடிகளை அப்படியே வைத்துக் கொண்டு முதல் அடியைச் சிறிது மாற்றி,

"மாதர்கள் வயதின் மிக்கார்
கோசலை மனத்தை ஒத்தார்"

என்று போட்டு விட்டார்கள் டி. கே. ஸி.

தமிழ்ப் புலவர்கள் இதனை ஒத்துக் கொள்ளவில்லை. ஏட்டுப் பிரதியின் ஆதாரம் இல்லாமல் எப்படித் திருத்தலாம் என்று வெகுண்டார்கள்.

இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பிறகு ஒருநாள் நான் எங்கள் வீட்டிலிருந்த பழம் சுவடிகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என் தந்தையார் சேமித்து வைத்தவைகள். அவற்றில் ஒன்று கம்ப ராமாயணச் சுவடி. ஏடுகளைத் தள்ளிக் கொண்டிருந்தேன். ஏடுகள் ஒன்றோடு ஒன்று ஒட்டி, பிரிபடாமல் இருந்தன. சிரமப்பட்டுத் தள்ளினேன். அந்த முயற்சியில் சில ஏடுகள் முறிந்து போயின. அயோத்யா காண்டத்தில் கைகேயி சூழ்வினைப் படலம் வந்தது. கூர்ந்து படித்தேன். 'மாதர்கள்' என்று தொடங்கிற்று ஒரு பாட்டு. என்ன ஆச்சரியம்! என்ன விந்தை! என் கண்களையே நான் நம்பவில்லை.

"மாதர்கள் ஆண்டின் மூத்தார்
கோசலை மனத்தை ஒத்தார்"

என்றிருந்தது அந்தத் திருப்பாட்டின் முதலடி!

அந்த நிமிஷத்தில் என் உடல் நிறையைக் கணக்கிட்டிருந்தால் ஒரு பத்துப் பவுண்டாவது அதிக கனமுடையவனாக இருந்திருப்பேன் என்று நினைக்கிறேன்.

அந்தக் கணமே ஓடிப்போய் ரஸிகமணி அவர்களிடம் அந்தப் பிரதியைக் காட்டத் துடித்தது என் உள்ளம். ஆனால் சில அசௌகரியங்களால் அங்ஙனம் அப்பொழுது செய்ய இயலவில்லை.

* * *

ஒருசமயம் தேரழுந்தூர் கம்பர் மகா நாட்டுக்கு ரஸிகமணி அவர்கள் விஜயம் செய்து விட்டுச் சென்னைக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்த பொழுது மாயூரத்தில் ரயில்வே நிலையத்தில் அவர்களைக் கண்டு நான் ஏட்டுப் பிரதியில் கண்ட பாடத்தைச் சொன்னேன். கேட்ட அவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அந்தப் பிரதியை அவர்கள் பார்க்க விரும்பினார்கள். அந்த ஒற்றை ஏட்டை மட்டுமாவது பிரித்து எடுத்து அனுப்பச் சொன்னார்கள்.

டி. கே. ஸி. அவர்கள் தம்முடைய உள்ளுணர்வினாலேயே யூகித்துக் கண்ட பாட பேதங்கள் பழைய ஏட்டுச் சுவடிகளிலும், பிற்காலத்தே அகப்பட்டிருக்கின்றன என்பதற்குப் பல சம்பவங்கள் கூறுவதுண்டு. அவற்றில் இந்தச் சம்பவத்துக்குச் சான்று என்னிடமிருந்த ஏட்டுப் பிரதி என்பதில் எனக்கு மகிழ்ச்சி.

குப்புசாமியின் வீட்டுக்கு அவனுடைய மருமகன் கண்டியிலிருந்து வந்தான். குப்புசாமியின் மனைவி மக்கள் எல்லாருக்கும் வெகு மகிழ்ச்சி. பெரிய விருந்துக்கு ஏற்பாடு நடந்தது. மூன்று வருஷத்துக்கு மேலாயிற்று, அவர்கள் மருமகன் சுப்புவைப் பார்த்து. கண்டியிலிருந்து குழந்தைகளுக்கு ஏதேதோ சாமான்கள் கொண்டு வந்திருந்தான். துள்ளிக் குதித்து விளையாடினார்கள்.

* * *

"நாதா, குஞ்சுகளில் ஒன்று குறைந்திருக்கிறதே" என்றது கோழி தன் சேவலைப் பார்த்து.

"நேற்று ராத்திரி இருந்தது. இன்று பார்க்கிறேன், இல்லை" என்றது.

"பருந்து தூக்கிப் போச்சோ என்னவோ?" என்றது சேவல்.

"ராத்திரி பருந்து வராதே. பகலில் இந்நேரத்துக்குள் வந்திருந்தால் நமக்குத் தெரிந்திருக்குமே?" என்றது கோழி.

"நம்ம வீட்டு எஜமானி எடுத்துக் கொண்டு போய் விட்டிருப்பாள்" என்றது சேவல்.

"அவர்களுக்கு என்னத்துக்கு நம்முடைய குழந்தை?" என்றது தாய்க் கோழி.

"பைத்தியக்காரி! உனக்குத் தெரியவில்லை. சும்மாவா வீட்டில் வைத்து நம்மை வளர்க்கிறார்கள்?" என்றது சேவல்.

"என்னத்துக்கு வளர்க்கிறார்கள்? குஞ்சை எடுத்துக் கொண்டு என்ன செய்கிறார்கள்?"

"ஐயோ! சொன்னால் நீ சங்கடப்படுவாய்."

"சொல்லு, பார்க்கலாம்."

"கழுத்தைத் திருகிக் கொன்று சமைத்துச் சாப்பிடுகிறார்கள்."

"ஐயோ!" என்று சொல்லிக் கோழி கீழே மூச்சின்றி விழுந்தது.

பிறகு எழுந்து, "என்ன சொன்னாய்? இப்படியும் உண்டா?" என்றது.

"நாம் புழுவைக் கண்டு கீறிக் கொத்தி விழுங்குகிறோமோ இல்லையோ? அப்படியே இந்த அரக்கர்கள் நம்முடைய குஞ்சுகளைத் தின்னுகிறார்கள். பச்சையாகத் தின்ன அவர்களுக்கு முடியாது. அதனால் அடுப்பில் வைத்துச் சமைத்துத் தின்கிறார்கள்."

"நீ இருந்து என்ன பயன்? காலை பலமாகக் கத்துகிறாயே, மகா வீரனைப்போல் கொக்கரகோ என்று ஊர்முழுதும் கேட்கும்படி கூப்பாடு போடுகிறாயே! நம்முடைய குஞ்சுகளைக் காப்பாற்ற உன்னால் முடியவில்லையா?" என்றது தாய்க் கோழி.





கோழியின் விசாரம்





"என் கண்ணே! நான் அவர்களோடு சண்டை போட முடியுமா? காலையில் வெளிச்சம் கிழக்கே கண்டதும் என் உள்ளேயிருந்து சத்தம் தானாக உண்டாகிறது. நான் அதை அடக்க முடியாது. நான் வீரன் என்று காட்டிக்கொள்வதற்காகவா கூவுகிறேன்? சில சமயம் சண்டையும் பிடிப்பேன். ஆனால் இந்தத் தடியன்களோடு நான் சண்டை பிடிக்க முடியுமா? அவர்கள் கைகளில் தடியும் கத்தியும் பிடித்துக் கொண்டு ஜகத்தை ஆண்டு வருகிறார்கள்" என்று சேவல் சொல்லி ஒரு கத்துக் கத்திற்று.

"பருந்தே தேவலை போலிருக்கிறது" என்றது தாய்க் கோழி.

அதற்குள் ஒரு பூனை வந்தது. பெண் கோழி உடனே குஞ்சுகளைக் கூப்பிட்டுத் தன்னைச் சுற்றிப் பக்கத்தில் வந்து அடங்கி நிற்கச் செய்தது. மறைந்துபோன குஞ்சை அப்போது மறந்து விட்டது. புதுக் கவலையில் பழைய துயரம் மறைந்து போச்சு.


பிறகு பெரிய நாய் ஒன்று ஓடி வந்தது. பூனை ஒரே ஓட்டமாக வேப்ப மரத்தின்மேல் ஏறிக் கொண்டது. அங்கே இருந்த அணில் பாய்ந்து சென்று மேலே நுனிக் கிளையில் இலைகளுக்கு இடையில் கொஞ்ச நேரம் மறைந்திருந்து. அங்கிருந்து இன்னொரு செடிக்குத் தாவிப் போய்க் கிச்சு கிச்சென்று சத்தம் போட்டது.

உள்ளே சுப்புவும் குப்புசாமியும் இலங்கையில் வேலை செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகளும் சுற்றி உட்கார்ந்து கொண்டு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"அநியாயம், அநியாயம்!" என்றாள் குப்புசாமி மனைவி. அவரவர்களுக்கு அவரவர்களுடைய சங்கடம்!

ராஜாஜி




புதுப் பழ சத்துக்கள்
கரும்புச் சர்க்கரை
க்ளுகோஸ்
த்தமான பால்
பாதாம்
வெண்ணெயும் தாவரக் கொழுப்பு சத்தும்
எவற்ருல் மார்ட்டன் மிட்டாய்களும் டாபிகளும் செய்யப்பட்டவை?
மார்ட்டன் பண்டங்கள் சாதுள்ள, இனிமையான மிட்டாய் கள் மட்டுமல்லாமல், உடல் வளர்ச்சியும் தெம்பும் தரும் பால், வெண்ணெய், க்ளுகோஸ், சர்க் கரை போன்றவையும் கொண்டவை. அளவைப் பற்றிக் கவலையில்லாமல் நீங்களும் குழந்தைகளும் சாப்பிட லாம், ஏனெனில் அதிகத் தெம்பு தந்து பலப்படுத்துகின்றன.
மார்ட்டன் — உணவும் ஆகும் மிட்டாய்!



32. மதுரநாயகம் எங்கே?

ரமணி போனபின்பு அவனுக்குப் பதிலாக நாடக சபாவிலே வேறொரு பையனைச் சேர்த்திருந்தார்கள். அவன் பெயர் சிங்காரம். சிங்காரம் சுத்த சோம்பேறி. பெரிய தூங்குமூஞ்சி. ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாக மணி அடித்தால்தான் அவன் ஆடி அசைந்து வருவான். வந்து, "ஏன் சார், என்னையா கூப்பிட்டீர்கள்?" என்று சாவதானமாகக் கேட்பான்.

மதுரநாயகத்துக்குச் சிங்காரத்தைப் பிடிப்பதே இல்லை.

"உனக்கு முன்னாலே இருந்தானே ரமணி, அவன் எவ்வளவு சுறுசுறுப்பாயிருப்பான்! எப்படி நடந்து கொள்வான்! அவன் இருந்த இடத்திலே நீயும் இருக்கிறாயே! அவன் கால் தூசுக்குக் கூட நீ சமானமாவாயா?" என்று அவர் அடிக்கடி கூறுவார்.

சிங்காரம் ரமணியைப் பார்த்ததே இல்லை. அப்படியிருந்தும், மதுரநாயகம் கூறுவதைக் கேட்டுக் கேட்டு ரமணி மேல் அவனுக்கு ஒருவித வெறுப்பு ஏற்பட்டு விட்டது. அத்துடன், "ரமணி திரும்பவும் வந்து விட்டால், நம்மை நிச்சயம் வீட்டுக்கு அனுப்பி விடுவார் இந்த மதுரநாயகம். ஆகையால், கடவுளே, ரமணி கிடைக்கவே கூடாது" என்றும் தினந்தோறும் வேண்டிக் கொள்வான்.

ஒரு நாள் சிங்காரம் வழக்கம்போல் தபால் ஆபீசுக்குப் போனான். கடிதங்களை வாங்கிக் கொண்டு திரும்பி வந்தான். வரும்போது, தற்செயலாக அவன் மதுரநாயகத்துக்கு வந்திருந்த ஒரு கார்டைப் பார்த்தான். அதில் 'ரமணி' என்ற கையெழுத்தைக் கண்டதும், அவன் திடுக்கிட்டான். உடனே, கார்டில் என்ன எழுதியிருக்கிறது என்று படித்துப் பார்த்தான். பிறகு, "அடடே! இந்த ரமணிப் பயல் மதுரையில் அல்லவா இருக்கிறான்! இந்தக் கார்டை மதுரநாயகம் பார்த்தால் ஆபத்துத்தான்! உடனே அவனுக்குத் தந்தி கொடுத்து இங்கே வரவழைத்து விடுவார்! அவன் வந்து விட்டால், நமக்கு நிச்சயம் சீட்டுக் கொடுத்து விடுவார். ஆதலால் இந்தக் கார்டை மதுரநாயகத்திடம் காட்டவே கூடாது" என்று தீர்மானித்தான். மறு நிமிஷமே அதை வழியிலேயே கிழித்தெறிந்து விட்டான்!

அதற்குப் பிறகு, மதுரையிலிருந்து எந்தக் கடிதம் வந்தாலும், சிங்காரம் கிழித்துப் போட்டு விடுவான். இந்த விஷயம் மதுரநாயகத்துக்குத் தெரியாதல்லவா? அதனால் அவர், 'ரமணி இப்போது எங்கே இருக்கிறானோ! எப்படி இருக்கிறானோ!' என்று கவலைப் பட்டுக் கொண்டேயிருந்தார்.

*   *   *

மதுரநாயகம் பதில் எழுதவில்லையே என்ற குறையைத் தவிர, ரமணிக்கு வேறு குறையே இல்லை. சிற்சபேசனும், காமாட்சி அம்மாளும் சொந்தப் பிள்ளையைப் போலவே நினைத்து அவனிடம் அன்பாக இருந்தார்கள். மாலதியும் சொந்த அண்ணனைப் போலவே அவனைக் கருதி வந்தாள்.

சிற்சபேசனும் காமாட்சி அம்மாளும் தினமும் மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போவார்கள். போகும்போது ரமணியையும் மாலதியையும் கூடவே அழைத்துச் செல்வார்கள். ரமணிக்கு மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போவதென்றாலே ஆனந்தம்தான்! அங்கே ஒவ்வொரு தூணிலும் உள்ள அழகிய சிலைகளைப் பார்த்துப் பார்த்து அவன் பரவசப் படுவான். மேலும், அங்குள்ள திருவிளையாடல் சிற்பங்களைக் காட்டிக் காட்டி மாலதிக்கு அவன் பல கதைகளைச் சொல்லுவான். ரமணியும் மாலதியும் கை கோத்துக் கொண்டு அந்தப் பெரிய கோயிலை ஆனந்தமாகச் சுற்றி வருவதே அழகாகத் தானிருக்கும். மதுரைக்குத் தெற்கே ஐந்து மைல் தூரத்திலுள்ள திருப்பரங்குன்றத்துக்குச் சிற்சபேசன் வெள்ளிக்கிழமை தோறும்



பக்திச் செல்வத்தையே மூலதனமாகக் கொண்டு பல்லாண்டுகளாக, இதிகாச புராண உபந்யாசங்களும், நாம சங்கீர்த்தன பஜனைகளும் தினந்தோறும் நடத்தி ஆஸ்திகத்தையும் தெய்வ நெறியையும் பரப்பி வரும் புரசை வைதிக சபையின் ஆதரவில், கங்காதரேசுவரர் அக்ரஹாரம் சந்தான கணபதியின் சன்னிதியில் 22–1–56 விருந்து 26–1–56 வரையில் ஸ்ரீ ராதாகல்யாண மகோத்சவம் அமோகமாக நடைபெற்றது. சென்னை நகரத்தின் பல இடங்களிலிருந்தும் பஜனை கோஷ்டிகளும் பாகவதோத்தமர்களும் விஜயம் செய்து உற்சவத்தைச் சிறப்பித்தனர்.

போய் வருவார். அப்போதும், ரமணி அவர் கூடவே செல்வான். வடக்கே பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள அழகர் கோயிலுக்குக் கூட ஒரு தடவை எல்லோருமாகப் போய் வந்தார்கள். ரமணியின் அப்பா இறந்த பிறகு, மதுரையில் ஒரு பணக்காரர் வீட்டிலே அவன் கொஞ்சநாள் வேலைக்கு இருந்திருக்கிறான். அப்போது அவன் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைக் கூடச் சரியாகப் பார்த்ததில்லை. ஆனால், இப்போதோ அவன் சிற்சபேசன் செல்லும் இடத்துக்கெல்லாம் செல்கிறான்!

ரமணி மதுரைக்கு வந்து இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன. இன்னும் ஒரு வாரத்தில் பர்மாவுக்குப் புறப்பட வேண்டும். சென்னைக்குப் போய், அங்கிருந்து கப்பல் ஏறிப் பர்மாவுக்குப் போக வேண்டும் என்பதை ரமணி தெரிந்து கொண்டான். உடனே, அவனுக்கு ஓர் ஆசை தோன்றியது. 'சென்னைக்குப் போனதும், மதுரநாயகத்தை எப்படியாவது பார்த்துவிட வேண்டும். அவரைப் பார்க்காமல் போனால் என் மனம் நிம்மதி அடையவே அடையாது' என்று நினைத்தான்.

அன்று, சிற்சபேசன் காமாட்சி அம்மாள், மாலதி, ரமணி நால்வரும் சென்னைக்கு ரயிலில் புறப்பட்டார்கள். ரயிலில் மாலதியும் ரமணியும் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டார்கள். ரயில் ஓடும்போது வெளியிலிருக்கும் தந்திக் கம்பங்களும் மரங்களும் எதிர்த்திசையில் ஓடுவது போலவும், தாங்கள் அசையாமல் ஒரே இடத்தில் நிற்பது போலவும் ஏற்படும் பிரமையைக் கண்டு வியந்து பேசிக்கொண்டே போனார்கள். ஆனால் அதற்குள் இருட்டி விட்டது. வெளியில் ஒன்றும் தெரியவில்லை.

சென்னையை அடைந்ததும் அங்கிருந்த ஒரு பெரிய ஹோட்டலில் தங்கினார்கள். அன்று புதன் கிழமை. வெள்ளிக்கிழமை கப்பல் புறப்பட்டு விடும். ஆகையால், அன்றே மதுரநாயகத்தைச் சந்தித்து விட வேண்டும் என்று ரமணி ஆசைப்பட்டான். உடனே சிற்சபேசனிடம் தன் ஆசையைக் கூறினான். அவனைத் தனியாக அனுப்பச் சிற்சபேசனுக்கு மனமில்லை. "சரி வா, நானும் வருகிறேன். அந்த நல்ல மனிதரை நானும் தெரிந்து கொள்ள வேண்டாமா?" என்று கூறி அவனுடன் அவரும் கிளம்பினார்.

இருவரும் ஒரு 'டாக்ஸி' எடுத்துக்கொண்டு நாடகக் கொட்டகை இருக்கும் இடத்துக்கு வந்தார்கள். அவர்கள் வந்தபோது, நாடகக் கொட்டகையின் முன்னால் எந்தவிதமான அலங்காரமும் இல்லை. வழக்கமாக வெளியில் வைத்திருக்கும் வர்ண விளம்பரங்களையும் காணோம். எந்நேரமும் திறந்து கிடக்கும் வெளிக் கதவும் நன்றாகப் பூட்டப்பட்டிருந்தது!

இந்தக் காட்சியைக் கண்டதும் ரமணி திடுக்கிட்டான். "இப்படி ஒருநாளும் இருக்காதே! கதவு கூடப் பூட்டப்பட்டிருக்கிறதே!" என்றான்.

"ஒருவேளை இப்போது நாடகம் நடத்தவில்லையோ என்னவோ!" என்றார் சிற்சபேசன். அத்துடன், "எதற்கும் யாரையாவது கேட்டுப் பார்க்கலாமே! அதோ அந்தக் கடையில் விசாரிப்போம்" என்றார்.

அதற்குள் ரமணி, "வேண்டாம். மானேஜர் வீட்டுக்கே நேராகப் போவோம். இங்கே பூட்டப்பட்டிருப்பதால், நிச்சயம் அவர் வீட்டில்தான் இருப்பார்" என்றான். உடனே மதுரநாயகம் இருக்கும் வீட்டை நோக்கி 'டாக்ஸி'யைப் போகச் சொல்லும்படி சிற்சபேசனிடம் வேண்டினான் ரமணி.


சற்று நேரத்தில் மதுரநாயகத்தின் வீட்டின் முன்னால் டாக்ஸி வந்து நின்றது. ஆனால், அங்கும் அதே நிலைதான்! அந்த வீட்டின் வெளிக் கதவும் பூட்டப்பட்டிருந்தது! ரமணிக்கு ஒன்றுமே புரியவில்லை! (தொடரும்)

திட்டத்தின் முன்னேற்றம் நெம்பர் 4

நீர்ப்பாசனமும் மின்சக்தியும்

விவசாயிக்கு அவரது நிலங்களுக்கும் போதிய ஜலவசதி கிடைப்பது அத்தியாவசியமாகும். தொழில்களில் உற்பத்தி அதிகரிப்பதற்கு நாடெங்கிலுமுள்ள வீடுகளுக்கும், பண்ணைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் போதிய மின்சக்தி கிடைக்கவேண்டும். மின்சக்தி மற்றும் நீர்ப்பாசன வேலைகளுக்காக ரூ. 653 கோடி ஒதுக்கப்பட்டதன் பயனாக, பலவகைப்பட்ட உபயோகமுள்ள நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களாகிய பக்ரா நாங்கல், தாமோதர் பள்ளத்தாக்கு கார்ப்பொரேஷன், ஹிராகுட் மற்றும் துங்கபத்ரா அணைத்திட்டங்கள் மிக துரிதமாக அபிவிருத்தியடைந்து வருகின்றன. சாம்பல், கோஸி, முதலிய புதிய திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான சிறு நீர்ப்பாசனத் திட்டங்களும் அநேக மின்சக்தி உற்பத்தித் திட்டங்களும் பூர்த்தியாகிவிட்டன.

இந்த சாதனைகளினால் ஏற்கெனவே பொதுமக்களுக்கு விசேஷமான அனுகூலங்கள் ஏற்பட்டு வருகின்றன. உபரியாக 9½ மில்லியன் ஏகர் நிலங்கள் சீர்திருத்தப்பட்டு, பயிர்ச்செய்கை நடத்தப்பட்டு வருகின்றது. 1956 மார்ச் மாதத்திற்குள் 18,30,000 கிலோவாட்டுகள் மின்சக்தி உற்பத்தி ஆகிறது. பலவகைத் திட்டங்களும் பூர்த்தியாகி பூரண அபிவிருத்திபெற்ற பிறகு, புதிதாகப் பயிர்ச் செய்கைக்குத் தருவிக்கப்பட்ட நிலத்தின் பரப்பு 22 மில்லியன் ஏகராவும், உபரி மின்சக்தியின் அளவு 2.3 மில்லியன் கிலோவாட்டாகவுமிருக்கும். குறிப்பிடத்தக்க இவ்வெற்றியை நோக்குங்கால் எதிர்காலத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் இன்னும் அமோகமான வெற்றி கிடைக்குமென்பது தெளிவாகிறது.



மக்களின் சுபீட்சத்திற்கான மக்களின் திட்டம்



Parry's
பாரி கம்பெனியார்
மோதிரம் போன்ற மிட்டாய்களை
இப்பொழுது வழங்குகிறார்கள்
பட்டர்ஸ்காச் ரிங்ஸ்
பெப்பர்மின்ட் ரிங்ஸ்
Parry's



அடைந்த மூக்கைத் துரிதமாகச் சுத்தி செய்கிறது!
VICKS Inhaler
விக்ஸ் இன்ஹேலர்!



ஆஹா, போட்டால்... போடணும்
மைதீன் புகையிலை
போன் 41
தந்தி "MYDEENCO"
E.S.மைதீன் & கோ
கும்பகோணம்.

ரவிசந்திரிகா

சோமு

45. மங்களம்

சொக்கி ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவான் என்று இலஞ்சிச் சாமியார் அறிவிப்புச் செய்து விட்டார். ஆனால் சொக்கி சாமியாரைப் பார்த்துப் பலமாக ஒரு சிரிப்புச் சிரித்தான்.

"என்ன சாமி! என்னைப் போயிப் பிரசங்கம் பண்ணச் சொல்லுறீங்க சாமி! ஒங்களுக்குத்தான் எல்லாம் தெரியுமே! நீங்களே சொல்லிப் போடுங்க சாமி!" என்றான் சொக்கி. இலஞ்சிச் சாமியார் இதை எதிர்பார்த்தவர் போல, வெகு பலமாகச் சிரித்தார்.

"ஏஞ்சாமி! இவங்க எல்லாரும் வர்றதுக்கு முந்தி இப்பத்தானே ஒங்ககிட்டே எல்லா விவரமும் சொல்லி முடிச்சேன். இப்பம் மறுபடியும் இவுங்க முன்னாலே எப்படிச் சாமி சொல்லச் சொல்லுறீங்க. நான் மாட்டேஞ் சாமி!"

இப்படிச் சொல்லி அந்தக் கூட்டத்துக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டு விட்டு, மின்னலைப் போல அங்கிருந்து பளிச்சிட்டு மறைந்தான் சொக்கி.

சிரித்துக்கொண்டே இலஞ்சிச் சாமியார் பேச ஆரம்பித்தார்:

"அதோ! கல்யாணியும் சாவித்திரியும் வந்துவிட்டார்கள். இனி நான் பேச ஆரம்பிக்கலாம். கவனமாகக் கேட்கிறீர்களா!

"நண்பர்களே, இந்தப் பொதிகை மலைக் குடியிருப்பைப் பற்றியும் பளிஞர்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியும் தர்ஸ்டன் போன்ற மேனாட்டு அறிஞர்கள் பக்கம் பக்கமாக எழுதி யிருக்கிறார்கள். பல மேனாட்டு அறிஞர்கள் இந்த மலைக் குடியிருப்பை வந்து பார்த்துப் படங்கள் எல்லாம் எடுத்துப் போயிருக்கிறார்கள். ஆனால் யாரும் இவர்களுடைய விநோதமான பழக்க வழக்கங்களின் காரணங்களை ஆராயவில்லை. ஆனால் எல்லாரையும் மிக மிகப் பெரிய அதிசயத்தில் ஆழ்த்தியது இந்தப் பளிஞர் தலைவனுடைய இரு தார விவாகந்தான். நான் இந்தக் குடியிருப்புக்கு வந்ததும் இந்தப் பழக்கத்தின் காரணத்தை ஆராய்ந்தேன். அகவல் மகனோடு பேசிப் பார்த்தேன். கந்தப்பனும் சொக்கியும் தனித்தனியாக என்னிடம் வந்து இதையே ஆலோசித்தார்கள். கடைசியில் சம்பிரதாயத்துக்கு மாறுபடாத ஒரு முறையில் கந்தப்பனுடைய இஷ்டத்தின்படியே ஏகபத்தினி விரதத்தை அவன் அனுஷ்டிப்பதில் பிசகில்லை என்று முடிவு செய்து விட்டோம்."

இப்படிச் சாமியார் சொன்னதும் டாக்டர் சுரேஷ் பலமாகக் கை தட்டினார். உடனே அங்கிருந்த மற்ற எல்லாரும் கரகோஷம் செய்தார்கள். சாமியார் தம்முடைய பேச்சை மேலும் தொடர்ந்தார்:

"இந்தப் பளிஞர் குடியிருப்பில் எத்தனையோ பல ஆண்டுகளாக அணைந்துவிடாமல் பாதுகாக்கப்பட்டு வருகிற நெருப்புக்குக் காவலாகப் பளிஞர் தலைவனின் இரண்டு மனைவியர்களும் அமர்த்தப்படுகிறார்கள். மற்றப்படி இந்தப் பழக்கத்துக்கு வேறு எவ்வித ஆதாரமும் அவசியமும் இல்லை. எவ்வளவு புனிதமான நெருப்பாக இருந்தாலும் அதைக் காத்து வருவதற்காக மனிதர்களை நியமிப்பது என்பது அர்த்தமில்லாத செயல். இதை உத்தேசித்துச் சொக்கி ஒரு புதிய தீர்மானத்துக்கு வந்திருக்கிறான். அதாவது தான் வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போது தன்னுடைய கொம்பன் யானையிடம் இந்தப்

பொறுப்பை ஒப்படைக்கலாம் என்று கருதுகிறான். 'கதி கயை கதா கண் கடு' என்று அவன் ஒரு உத்தரவு போட்டுவிட்டால், கொம்பன் யானை அந்தப் பக்கம் இந்தப்பக்கம் அசையாமல் நிலையத் தாண்டிக் கொண்டே யிருக்கும். கானு பாஷையில் அத்தனை தூரம் கட்டுப்பட்ட யானை அது. எனவே கந்தப்பனுக்கு இரண்டாவது மனைவி என்றுஒரு அபாக்கியவதி ஏற்பட்டு, அவன் நெருப்பைக் கிளறிக்கொண் டிருப்பதோடு தனது உள்ளத்தின் நெருப்பையும் கிளறிக் கொண்டே இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆகையால் சகோதர சகோதரிகளே! கந்தப்பனுடைய வலது கையைச் சொக்கி பிடிக்கிறான் என்றால், அவனுடைய இடது கையைப் பிடிப்பது இந்தச் சொக்கி குடியின் கொம்பன் யானை என்பதை இப்பொழுது தெரிவித்துக் கொள்கிறேன்!"

இவ்வாறு சாமியார் சொல்லி நிறுத்தியதும் கூட்டத்தில் கை தட்டல் வானமே இடிந்து விழும்படியாக முழங்கியது. கல்யாணி அம்மாளும் தன் துயரங்களை யெல்லாம் இரண்டு கைகளாலும் தட்டி விடுபவளைப் போலப் பலமாகக் கை தட்டினாள்!

* * *

பௌர்ணமிக்கு முந்திய இரவு. சொக்கி குடியிலே மரங்களும் செடிகளும் எல்லாம் பூக்களும் கனிகளுமாகத் தொங்குவதற்குப் பதிலாக, ஒரே மின்சாரக் குமிழ்களாகப் பூத்துக் காய்த்துக் கனிந்து தொங்கிக் கொண்டிருந்தன! எங்கோ ஒரு மூலையில் ஒரு 'டைனமோ' வேலை செய்து



கொண்டிருந்தது. காடெல்லாம் நகரமாகக் காட்சி தந்தது. சந்திரனும் நட்சத்திரக் கூட்டங்களும் வானத்திலிருந்து இறங்கி வந்து அந்தச் சொக்கி குடியிலே கூடாரம் அடித்து நிற்பது போல இருந்தது அந்த ஒளி மயமான காட்சி.

மறு நாட் காலை சொக்கி குடியின் மந்திரக் கன்னி, எதிர்காலத் தலைவி, அல்லியரசாணி சொக்கிக்குத் திருமணம்.

கந்தப்பனைச் சுற்றி அவனுடைய நண்பர்கள் பரிகாசப் பாடல்கள் பாட ஆரம்பித்தார்கள் :-

கொய்யா மரத்து மேலே
  கொம்புப் பழம் உறங்கும்

கொம்புப் பழம் விழுந்தாக்
  குயிலா நினைவு வரும்.

கன்னனைச் சோலையிலே
  கனிஞ்ச பழம் உறங்கும்

கனிஞ்ச பழம் விழுந்தா
  கன்னு நினைவு வரும்.

மாமரத்து உச்சியிலே
  மாங்காப் பழம் உறங்கும்

மாங்காப் பழம் விழுந்தா
  மயிலா நினைவு வரும்!

" இவ்வாறு ஆடவர் கோஷ்டி கந்தப்பனை வேடிக்கை பண்ணிக் கொண்டிருந்தது. மற்றொருபுறம் சொக்கியை சுற்றி அவளுடைய



சேடிப் பெண்கள் பரிகாசம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.


கருமலையிலே கல்லுருட்டி
  கன்னிமார் எல்லாம் கூடிக்கிட்டு
மூணு முழத்தில் அடுப்புக்கட்டி
  முத்துக் குடங்கொண்டு பால்காய்ச்ச
காய்ச்சின பாலும் கசக்குதேன்பா
  கட்டித் தயிரும் புளிக்குதேன்பா
வேப்பம் பட்டை இனிக்குதேன்பா
  வெள்ளைப் பிஞ்சும் கசக்குதேன்பா!

இப்படியாகப் பாட்டிலும் கூத்திலும் இரவுப் பொழுது கழிந்தது. அதிகாலையில் கிழக்கே வானம் வெளுத்துச் செவ்வெயில் பின்னிப் பிணைந்து மலையிலே உருள ஆரம்பிக்கும் போது, பளிஞர்களின் கொம்பொலி உதய சூரியனை வரவேற்றது. கொம்பொலியைத் தொடர்ந்து, தாரையும், தம்பட்டமும் ஒலித்தன. இடக்கு, பம்பை, சச்சரி, உருமி முதலிய தாள வாத்தியங்கள் இவற்றைத் தொடர்ந்தன. சொக்கி குழல் என்று புனிதமாக அழைக்கப்படும் புல்லாங் குழல் போன்ற வாத்தியம், மற்ற வாத்தியங் களுக்கு மத்தியிலே ஒரு ராஜ வாத்தியமாக எழுந்தது. சங்கம் ஒலித்தது. கொட்டு முழங்கிற்று. மலைக் காட்டிலே கேட்கிற 'தோலொத்து' என்ற வாத்தியம் ஆதார சுருதியை ஒலிக்க, மற்ற வாத்தியங்கள் எல்லாம் உல்லாசமான தெம்மாங்கு இசையைப் பொழிய ஆரம்பித்தன.

சொக்கி குடியின் அணையாத நெருப்புக்கு முன்னால் டாக்டர் சுரேஷும் உஸ்தாத் மீரானும் நின்று கொண்டார்கள். அருகிலே நாகரத்தினம், அப்புலிங்கம், ராமநாதன் ஆகிய கோஷ்டி நின்று கொண்டது. இவர்களை யடுத்து முதியோர் கோஷ்டி. இவர்களைச் சுற்றிப் பளிஞர்கள் மொய்த்து நின்றார்கள். கல்யாணி அம்மாள், சாவித்திரி யம்மாள் உள்ளிட்ட பெண்கள் எல்லாரும் சேர்ந்து கோஷ்டியாக இன்னொரு வரிசையிலே நின்றார்கள்.

வாத்தியங்கள் எல்லாம் மங்கள கீதத்தை முழக்கின. சொக்கியும் கந்தப்பனும் உல்லாச உபசாரத்தோடு அங்கே அழைத்து வரப்பட்டார்கள். இலஞ்சிச் சாமியார் கொம்பன் யானையை நடத்திக் கொண்டே அக்னி குண்டத்துக்கு அருகிலே வந்து உட்கார்ந்தார். சொக்கப்பனுடைய முகத்தில் கரை காணாத மகிழ்ச்சி அலைவீசிக் கொண்டிருந்தது. அந்த அலை வீச்சு அங்கே கூடி யிருந்த அத்தனை பளிஞர்களின் முகங்களிலும் அப்படியே பிரதிபலித்தது!

"மங்கள வாத்தியம்!" என்று சொல்லிக்கொண்டே இலஞ்சிச் சாமியார் இரண்டு கைகளையும் தூக்கிச் சமிக்ஞை செய்தார். தாரை, தம்பட்டம், சொக்கி குழல், கொம்பு, இடக்கை, உருமி, பம்பை, சச்சரி, கிலுகிலுப்பை, கொட்டு எல்லா வாத்தியங்களும் ஏககாலத்தில் முழக்கி அடித்தன. கந்தப்பனுடைய வலது கையைப் பிடித்தாள் சொக்கி. அடுத்த கணம் மற்றொரு கையினால் அந்த நெருப்புக் குழியிலே ஒரு கன்னியைச் செருகினான். அதே சமயம் கந்தப்பனுடைய இடது பக்கம் நின்று கொண்டிருந்த யானையைப்



பார்த்து "கக, கம், தைய, கவை" என்றான் சொக்கி. கொம்பன் யானை அழகாகத் துதிக்கையைத் தூக்கி வளைத்து அந்த ஓமகுண்டத்திலே ஒரு பெரிய கட்டையை எடுத்துச் சொருகிற்று. மறு விநாடி ஒரு பெரிய கலயத்திலே நெய்யை எடுத்துத் தீக்குழியிலே கொட்டினான் சொக்கி.

'குபீர்' என்று சுடர் விட்டது ஓமகுண்டம். 'குபீர்' என்று எழுந்தது வாத்தியங்களின் மங்கள ஒலி. "குபீர்' என்று ஓங்கி ஒலித்தது பெண்களின் குரவை!

சொக்கிகுடியிலே உள்ள பளிஞர்களின் சமூக நெருப்பு, நிரந்தரமாக எரிந்து கொண்டிருப்பதற்காகக் 'குபீர்' என்று புதிய பிரகாசத்தோடு சுடர் விட்டது!

* * *

அன்று பகல் முழுதும் பளிஞர்களின் விதம் விதமான ஆட்டங்களும், பாட்டுக்களும், கூத்துக்களுமாக அந்த வனாந்திரமே ஒரு மாயாபுரியாக மாறியது! இந்தக் கூத்துக்களோடு வனத்தின் தேவதைகளுக்குப் பூஜை போடும் சம்பிரதாயத்தை யொட்டி, மணமக்கள் காட்டின் மூலைகளிலும் வளைவுகளிலும் உள்ள புனித மரங்களுக்கெல்லாம் சென்று வனபூஜை நடத்தினார்கள். ஊர்வலம் போன்ற அந்த வனவலத்தின் போது, உஸ்தாத் மீரானுடைய சீடர்களும் நாகரத்தினம் கோஷ்டியாரும் சிலம்பக் கம்புகளோடு சுற்றி நின்று பளிஞர் உலகத்தைக் கிடுகிடுக்கச் செய்து விட்டார்கள்!

மாலைப்பொழுது கழிந்து இரவு வந்ததும், அங்கங்கே அதிர் வேட்டுக்களும், வாணங்களுமாகக் காடெல்லாம் சீறின! மத்தாப்புக்களின் வர்ண ஒளி, மரங்களுக்கும் மலர்களுக்கும் நீரோடைகளுக்கும் கணத்துக்குக் கணம் விதம் விதமாக ஒளி மூலாம் பூசியது! விருந்தும் கூத்துமாக ஒரே ஆர்ப்பாட்டமாக இருந்த இந்தச் சமயத்திலே தான் டாக்டர் சுரேஷ் வேகமாக வந்து அப்புலிங்கத்தின் காதோடு "நம்முடைய ஸர்ப்ரைஸ் ஐடைம் ரெடி!" என்று அறிவித்தார்! அவ்வளவுதான். பத்து நிமிஷத்துக்குள் அந்தக் கூட்டத்தில் ஒரு பரபரப்பு உண்டாயிற்று. அப்புலிங்கம் கந்தப்பனிடம் காதோடு காதாக ஏதோ பேசினான். கந்தப்பன் சொக்கப்பனிடம் சென்று ஏதோ இரகசியம் சொன்னான். சொக்கப்பன் தன்னுடைய முக்கியமான உப தலைவர்களிடம் ஏதோ கட்டளை இட்டான். விறு விறு என்று கூட்டம் ஒன்று சேர்ந்தது. காட்டிலே நிரம்பி யிருந்த அத்தனை மனிதர்களும் அணி வகுத்தாற் போல ஆலமரத்தடியை நோக்கி விரைந்து சென்றார்கள்.

ஆலமரத்தடியிலே ஒரு பெரிய மேடை போட்டிருந்தார்கள். அதில் நாகரிகப் படுதாக்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

டாக்டர் சுரேஷின் ஆணைப்படி மணமகனும் மணமகளும் மேடைக்கு எதிரே உட்கார்ந்தார்கள். அவர்களை யடுத்து ஆண்களும் பெண்களும் வரிசை வரிசையாக அணி யணியாக உட்கார்ந்து கொண்டார்கள். திரைக்குப் பின்னால் இருந்து இசை எழுந்தது.

தம்புராவின் "ஙீம் ஙீம்" என்ற இன்னொலி. 'தரதாங் தரதாங்' என்று இணைத்தந்திகள் இயம்ப, 'டிங் டிங்' என்று வீணை பேச ஆரம்பித்தது. புல்லாங்குழல் சுநாதமான இனிமையோடு 'ஸ, ப, ஸா' என்றது. "கும் கும்" என்று மிருதங்கம் ஆயத்தம் ஆகிற்று. அவ்வளவு தான். சலங்கை 'கல கல' என்பதற்குள் திரை எழுந்தது.

"தாம் தித்தாம் தை திக்தாம்" என்ற சொல்லுக் கட்டை அடுத்து 'விறு விறு' என்று வாத்தியங்கள் அற்புதமான வேகத்தோடு ஒரு வர்ணத்தை வாசிக்க ஆரம்பித்தன. 'கலீர் கலீர்' என்று சலங்கை கொஞ்ச, சந்திரிகா மேடைமீது வந்து நின்று கை கூப்பி விட்டு, வாத்திய இசையிலே தவழ்ந்து வந்த வர்ணத்தைத் தன் மேனியிலே வாங்கி ஓட விட்டாள்!

வீணையின் ஒலியையும், மிருதங்கத்தின் நாதத்தையும் பின்னி அணைத்துக் கொண்டு புல்லாங்குழல் ராஜ நடை நடந்தது. ரவீந்திரனுடைய பழைய மாணவர் ஒருவர் குரு பரம்பரையைப் பக்தி சிரத்தையோடு புல்லாங்குழலிலே பின் தொடர்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது கூட்டத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. ரவீந்திரனை அமைதியோடு தன் வலதுகையிலே தாங்கிப் பிடித்த வண்ணம் கூட்டத்துக்குள்ளே பிரவேசித்தாள் கல்யாணி. டாக்டர் சுரேஷ் எழுந்து அவர்களை வரவேற்று, ரவீந்திரனைக் கந்தப்பனுக்கு அருகிலே அமர்த்தினார்.

குருநாதனுடைய வரவிலே ஒரு கணம் மெய் சிலிர்த்த சந்திரிகா, ரவீந்திரனைப் பணிவோடு கை கூப்பி வணங்கியவளாக நடனத்தைத் தொடர்ந்தாள்.

என்ன ஆச்சரியம்! அது ரவிசந்திரிகா ராகம்! முன்னொரு காலத்தில் ரவீந்திரன் தானே தனது கற்பனையில் கவனம் செய்து கற்பித்த வர்ணம் அது!

வீணையானது மேனியின் நரம்புகளையே கண்டுவதுபோல உயிரைத் தொட்டு நின்று பேசிற்று. ரவீந்திரனுடைய சந்நிதியிலே அவனுடைய கவனத்தையே அவனுக்குக் காணிக்கை செலுத்துகிற பாவனையில், புல்-

லாகுழல் நாதன வேகத்தோடு இயம்ப ஆரம்பித்தது. மிருதங்கம் உற்சாகமாகத் தாள அடைவு கொடுத்தது. "கலீர் கலீர்" என்று துள்ளியது சலங்கை.

அது ரவிசந்திரிகா ராகம். அந்த ராகம் படிப்படியாக விறுவிறுப்பு ஏறிப் படரப் படர, ரவீந்திரனுடைய கண்களில் ஒரு குறுகுறுப்பு உண்டாயிற்று. ஒலி வடிவமான ராகம் அவனுடைய மேனியை ஊடுருவி அவன் உள்ளத்திலே மின்சாரத் தைப்பாய்ச்சியது. ரவீந்திரனுடைய கையும் காலும் ஆட ஆரம்பித்தன.

"தாம் தித்தாம், தைத் தித்திம், தாங்கிட தாங்கிட தளாங்கிட தளாங்கிட திம் தை" என்றது சொல்லுக் கட்டு. அதைத் தொடர்ந்து மேல் ஸ்தாயிலே புல்லாங்குழலின் சஞ்சாரம் ரவிசந்திரிகா ராகத்தின் அந்தராத்மாவையே எட்டிப் பிடித்தது. அவ்வளவுதான். 'சபாஷ்!' என்று ஒரு சத்தம் கேட்டது. கூட்டத்திலே உட்கார்ந்துகொண்டிருந்த ரவீந்திரன் "சரேல்" என்று ஒரு தாவுத் தாவி மேடையிலே ஏறினான். பார்க்கிறவர்கள் கண்களை இமைத்து மூடுவதற்குள், புல்லாங்குழல் வித்துவானுடைய கையிலே இருந்து அந்தக் குழலை ஒரு பற்றுப் பற்றிப் பிடுங்கினான் ரவி. அடுத்த கணம் தன்னுடைய அதரங்களிலே பொருத்தினான்.

ஆகா! ரவிசந்திரிகா ராகமா அது! சொக்கி குடியின் மங்கள விழாவுக்காக அந்த வன தேவதைகள் எல்லாம் வந்து நின்று கேட்க வேண்டும் என்று ஒலித்த ஒரு தெய்விகநாதமா அது! ஜன்ம ஜன்மாந்திர வாசனை யென்றும், விட்ட குறை தொட்ட குறை யென்றும் சொல்கிறார்களே, அப்படிப்பட்ட அமானுஷ்யமான கற்பனையோடு ஒலித்தது புல்லாங் குழல். வீணையும், மத்தளமும் அந்த இசையிலே இறங்கி அதைப் பின் தொடர்ந்தன.

பாதச் சிலம்புகளிலே ஒரு மந்திர சக்தி பின்னியது. பார்த்தவர்கள் எல்லாம் மெய்ம் மறந்து தெய்வலோகத்திலே சஞ்சரித்தார்கள். கேட்டவர்கள் எல்லாம் மெய்ம் மறந்து விண்ணுலகத்திலே மேலே மேலே இசைக் காற்றிலே பறந்து கொண்டிருந்தார்கள்!

ரவிசந்திரிகா ராகம் எத்தனை நேரம் எத்தனை கற்பனைகளோடு எத்தனை அன்னல்களோடு மேடையிலே சுற்றிச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்ததோ! யாராலும் சொல்ல முடியாது. டாக்டர் சுரேஷ் மேடைக்கு வந்து ரவீந்திரனுடைய உடம்பைப் பிடித்து நட்டமாக நிறுத்திக் கண்களைத் துடைத்து விட்டார். அதுவரை தன்னையும் இந்த அகில உலகத்தை[illegible] மறந்து ஒரு பேரானந்த வயத்திலே இரு[illegible] அந்த அதிசயக்கலைஞன், ஒளிச் சிறகை மடித்துப் பூமியிலே வந்து கால் பாவினான். சலங்கையும் வாத்தியங்களும் அப்படியே திறங்கிப்போய் நின்றன! சபையோர்களும் அப்பொழுதுதான் இந்த [illegible] குதித்துக் கை தட்டி[illegible]

கை தட்டி [illegible] சபையின் [illegible] களை யெல்லாம் [illegible] யிலே கண்கள் ஓட விட்டுப் [illegible] தான் ரவீந்திர[illegible] அந்தக் கண்க[illegible] எத்தனை [illegible] யம்! சபையி[illegible] விப்பிலிருந்[illegible] வதற்குள்ளே [illegible] ணி!" அழைத்தான் ரவீந்திரன்.

"கல்யாணி! சந்திரிகாவின் நெற்றி[illegible] உன் கையால் குங்குமம் இடம்மா" என்று சொல்லிவிட்டு ரவீந்திரன் சபையோர்களைப் பார்த்துச் சொல்லுவான்:

"விஷ நோயும் பைத்தியமும் பிடித்த மனிதன் நான். இந்த அபாக்கியசாலியின் விஷ நோயையும் பைத்தியத்தையும் தீர்த்த ஔஷதங்கள் இரண்டு. இரண்டுமே இரண்டு விதமான ஸர்ப்பகந்திகள். ஒன்றுக்குப் பெயரே ஸர்ப்பகந்தி—சந்திரிகா! மற்றொன்றுக்குப் பெயர் கந்தப்பன். உண்மையில் இன்று நான் உயிரோடு இருப்பதற்குக் காரணம் கந்தப்பன் என்று சொன்னால் அது புகழ்ச்சியில்லை. என்னைத் தீண்ட வந்த நல்ல பாம்பிடமிருந்து என்னைக் காப்பாற்றினான் கந்தப்பன். என்னைப் பிடித்த நோயிலிருந்து என்னைக் காப்பாற்றியது சர்ப்பகந்தியும், சர்ப்பகந்தியின் வடநாட்டுப் பெயர்களில் ஒன்றான சந்திரிகாவும். இந்த நன்றிக்கு என்னுடைய கைம்மாறு என்ன என்று யோசிக்க வேண்டிய அவசியத்தையே எனக்கு வைக்கவில்லை டாக்டர் சுரேஷ். இலஞ்சிச் சாமியாரும் அவரும் ஏற்கனவே எல்லா விவரமும் பேசி முடித்து விட்டார்கள். எந்த ராமநாதன் எங்கள் வீட்டு மாடியிலே குதித்ததன் பயனாக, என்னுடைய வாழ்வுப் புதிர் தெளிய ஆரம்பித்ததோ, அதே ராமநாதனுக்கு என்னுடைய நன்றியின் சின்னமாக என் இசைப் பரம்பரையையே காணிக்கையாக ஒப்படைக்கிறேன். அந்தக் காணிக்கையைச் சட்டபூர்வமாக அங்கீகாரம் செய்வதற்கு இதோ இங்கே சந்திரிகாவின் தந்தையே நிற்கிறார்."

டாக்டர் சுரேஷ் கையில் பூ மாலையோடு இலஞ்சிச் சாமியாரை அழைத்து வந்தார். ராமநாதனைப் பார்த்து ரவீந்திரன் சொல்லுவான்:

"ராமநாதா! பெரிய பெரிய விபத்துக்களிலிருந்து சந்திரிகாவை நீதான் காப்



பார்த்திருப். உன்னை விட அவனுடைய அன்புக்கு அருகதை வேறு யாருமில்லை. பால்வண்ணநாதர் என்று பெயர் தரித்திருந்த நமது இலஞ்சிச் சாமிகளின் ஆசீர்வாதத்தோடு அவளை ஏற்றுக் கொள்!" என்றான் ரவீந்திரன்.

கூட்டத்திலே எங்கோ ஒதுங்கிக்கொண்டு கிடந்த பண்டாரங்கள் அனைவரும் இப்போது குரல் கொடுத்தார்கள்—"வாழ்க! வாழ்க!" என்று!

இலஞ்சிச் சாமியார் டாக்டர் சுரேஷின் கையிலிருந்த பூமாலையை ராமநாதன் கையிலே கொடுத்தார். அதை அவன் சந்திரிகாவின் கழுத்திலே அணிவித்தான். இருவரும் இலஞ்சிச் சாமியாருடைய பாதத்திலே நமஸ்கரிக்க வந்தார்கள். "அப்பா!" என்று கூப்பிட்ட சந்திரிகாவுக்குக் குரல் அடைத்தது. கண்ணீர் தாரை தாரையாகப் பொங்கிச் சாமியாருடைய பாதங்களை நனைத்தது. அந்தக் காட்சி சபையிலிருந்த அத்தனை பேருடைய உள்ளத்தையும் உருக்கி விட்டது!

அப்புலிங்கம் வேகமாக நடந்து வந்து ரவீந்திரனுடைய கையிலே ஒரு புல்லாங்குழலைக் கொடுத்தான்.

"பொருள்களை யெல்லாம் உரியவர்களிடம் சேர்ப்பிக்கிற முகூர்த்தம் இது. எனவே இதை, உங்களுடைய பழைய புல்லாங்குழலை, உரிய இடத்தில் சேர்ப்பிக்கிறேன். ஆனால் ஒரே ஒரு வேண்டுகோள். அடகு என்பதை மறந்துவிட வேண்டும். உங்களைப் போன்ற ஒரு கலைஞரின் நட்புக்கு இது என் காணிக்கை!"

பதில் பேச முடியவில்லை ரவீந்திரனுக்கு. அன்பின் வசமாகி நின்றவன் கந்தப்பனைப் பார்த்துச் சொல்வான்:

"வாழ்க்கையில் என்னுடைய கடன்களை எல்லாம் அடைக்கிற புண்ணிய நாள் இது! என்னுடைய உயிரையே உனக்குக் கடன் பட்டிருக்கிறேன் நான். என்றாலும் அதற்கு உரியவள் கல்யாணி. இன்னொருவரிடம் அதை ஒப்படைக்க அவள் சம்மதிக்க மாட்டாள்! ஆனால் என்னுடைய இந்தப் புல்லாங்குழல் இருக்கிறதே, இது உண்மையிலேயே என்னுடைய உயிர். இந்தா, இதை வாங்கிக் கொள். என்னுடைய கற்பனைகளை யெல்லாம் இந்த வனாந்திரத்திலே நிரப்பி வைத்தால் உங்களுடைய சமூகத்தின் நெருப்பைப் போல் அதுவும் அவியாமல் நிற்கும். நகரங்களில் வைக்கிற செல்வத்தைக் காப்பாற்றுவது கஷ்டம். எனவே, என்னுடைய சிடக் கொடி இந்த மரங்களிலும் செடிகளிலும் படரட்டும். உங்களுடைய சொக்கி குழுவுக்குத் துணையாக இந்த வாத்தியத்தை உங்கள் சமூகத்திலே பிரதிஷ்டை செய்கிறேன். இன்றிலிருந்து நீ என்னுடைய மாணவன்! கல்யாணி, மணப் பெண்கள் இருவருக்கும் குங்குமம் இட்டு ஆரத்தி சுற்றம்மா!"

ரவீந்திரன் இவ்வாறு சொல்லி விட்டு மேடையிலிருந்து இறங்கினான். டாக்டர் சுரேஷ் எழுந்தார்.

"அன்பர்களே! கடைசியாக ஒரு வார்த்தை. மங்களம்!" என்று சொல்லி விட்டு வாத்திய கோஷ்டியின் பக்கம் திரும்பித் தலை வணங்கினார் சுரேஷ்.

நாதானந்தமான சுகத்தோடு வாத்தியங்களிலே இன்னிசை தவழ்ந்தது.

* * *

சொக்கிகுடியின் குழலிலே ரவிசந்திரிகா ராகம் தென்றற் காற்றிலே தவழ்ந்தது. மரங்களிலும் செடிகொடிகளிலும் இலை வீசிப் படர்ந்தது. மலையிலும் குன்றுகளிலும் எதிரொலி செய்து விம்மியது. அருவிகளிலும், சுனைகளிலும் ஓடைகளிலும் நீராடியது. பளிஞர் சமூகத்திலே என்றென்றும் ஆறாமல் அவியாமல் சுடர் விடுகின்ற அந்த ஓம குண்டத்தின் நிரந்தரக் கனலைப் போல, காலப் பாதையிலே ஏற்றி வைத்த ஒரு ஒலி-விளக்காகப் பிரகாசித்தது, தெய்வீகமான ரவிசந்திரிகா ராகம்!

நாத விந்துகலாதீ நமோ நம!
தீப மங்கள ஜோதீ நமோ நம!

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor : Mi. Pa. Somasundaram


டால்டா
எனக்கு
நல்லது!
DALDA
டால்டா
வனஸ்பதியை உபயோகித்
துச் சமையுங்கள்
HVM. 253-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon